

சென்னையில்: தினசரி 3 காட்சிகள் 3, 6-15 & 9-30 மணி
பிரதி தினமும் காலை 9 முதல் 12 மணி வரை, முதல் இரண்டு வகுப்புகளுக்கும் பிரபாத், வெலிங்டன் தியேட்டர்களில் டிக்கட்டுகளை முன்னதாகவே பெற்றுக் கொள்ளலாம்



காலமானார்


சென்னை, மவுண்ட் ரோட்டிலுள்ள "பாரத் கபே" முதலாளியான ஸ்ரீ வி. என். கிருஷ்ணய்யர் 28-10-49 காலை தென்மலையாளம் பாலக்காட்டிலுள்ள நமது கிராமமாகிய வடக்கஞ்சேரியில் 47-வது வயதில் காலமானார். வயது சென்ற அவரது தாயார், மனைவி, இரண்டு புதல்விகள், இரண்டு குமாரர்கள், ஏராளமான உறவினர்கள், நண்பர்கள் எல்லாரும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அன்னாரின் பிரிவை முன்னிட்டு, தியாகராயநகர், மவுண்ட் ரோடு ஆகிய இடங்களில் உள்ள "பாரத் கபே" ஹோட்டல்கள் 28-10-49 அன்று பிற்பகல் மூடப்பட்டன.


காட்ஸ்வால்
எக்காலத்திலும் சுக சௌகரியமளிப்பது!
இதோ உங்களை உஷ்ணகாலங்களில் குளுமையாகவும் குளிர்காலங்களில் கதகதப்பாகவும் வைத்திருக்க, ஓர் புத்தம்புதிய நிஜுசு துணி—அது தான் காட்ஸ்வால்—விளையாட்டுகளின்போது அணிவதற்குகந்தது. தேக சீதோஷ்ணத்தை சமப்படுத்தி உங்களுக்கு எவ்வேளையும் சௌகரியமளிக்கிறது.
காட்ஸ்வால் கம்பளியும் பருத்தியும் கலந்து நெய்து செவ்வு செய்யப்படுகின்றமையால், அதில் காற்றோட்டம் இடைவிடாமல் இருந்துகொண்டே வருகிறது. இதுவே அதன் அரியகுணத்தின் இரகசியம். அது ஒருபோதும் வியர்வையால் நனைந்து ஈரமாவதில்லை. காட்ஸ்வால் உபயோகிப்பதாயின் ஈரச் சட்டையாலுள்ள தொந்தரவுகள் உங்களுக்கிராது!
காட்ஸ்வால் குழந்தைகளுக்கு எக்காலத்திலும் உகந்தது. குளிர் அணுகாமலிருக்க சிறந்த பாதுகாப்பு!
சலவை விதிகள்: கம்பளித் துணிகளைப் போலவே சோப்புச் சேர்த்து
Cotswol
மற்றுமொரு பிரசித்த ஆடு மார்க் துணி.
தயாரிப்பாளர்கள்:
தி பெங்களூர் மில்ஸ்.
தி பெங்களூர் உலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கோ. லிட்., பெங்களூர் ஸிடி.
ஏஜண்டுகள், காரியதரிசிகள், மெனேஜிங் ஏஜண்டுகள்:
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
பிரதேசவாரி விநியோகஸ்தர்கள்:
பெங்களூர் ஸிடி: மெஸர்ஸ். எச். ஏ. ஆர். முகமது சேட் & சன்ஸ், சிக்பேட்
மெஸர்ஸ். ஹாஜி இப்ராஹிம் இஸ்ஹாக் & சன்ஸ், சிக்பேட்
மெஸர்ஸ். ராம் நாராயண் கீர்த்தி தாஸ் & கோ., தொட்பேட்
மதராஸ்: மெஸர்ஸ். எச். ஏ. ஆர். முகமது & சன்ஸ், 6, கிடங்கு தெரு, ஜி. டி.

கடவுளின் கோவிலுக்காவ பரிசுத்தம்



தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது. மிகவும் சுத்தமளிக்கும் சடங்காச்சார ஸ்நானங்களுக்கு சுயமான ஸோப்பை மட்டுமே நாம் உபயோகிக்க வேண்டும். ஸோப்பில் ஏது கலப்புமிருக்கலாம். ஆனால் கோத்ரேஜ் ஸாண்டலில் நன்மை தரும் கலப்பற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே. கோத்ரேஜ் சௌந்தரியப் பொருட்களிலெல்லாம் உன்னை போன்று, தனிமைப்பட உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. வெறுக்கத்தக்க மிருகக் கொழுப்புகள் யாதும் அவைகளில் இல்லை. மைசூர் சந்தனத் தைலம் மிகுதியுடமாய் பொருந்தப்பெற்ற கோத்ரேஜ் சந்தன சோப்பானது இன்பமான குளிர்மை, இதம், மணம் இவைகளையுடைய நிலையை யளிக்கும். எனவே, சரீரம் கடவுளின் கோவிலாயிருக்க, அதைத் தூய்மைப் படுத்த கோத்ரேஜ் தாவர வஸ்து ஸாண்டல் ஸோப் பல்லாது வேறெதுதான் ஏற்றதாகும்?



கோத்ரேஜ் லிம்டா — கிருமிகளைக் கொல்லவும் சௌந்த மளிக்கவும் வல்ல வேம்பின் குணங்களையுடைய ஸோப்.

Godrej Sandal

கோத்ரேஜ் ஸாண்டல்

(மார்க்) (சந்தன)

டாய்லெட் (ஸ்நான) ஸோப்

குறைந்த விலையில் மற்றைய ஸோப்புகளை விட மிகவும் உயர்தரமான ஸோப்பு.

கோத்ரேஜ் சோப்ஸ், லிமிடெட்,
மதராஸ்: 164. பிராட்வே; கொச்சின்: 6/36. கல்வாத்தி





நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தல் இல்லாமல் இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், **கேசவர்த்தினியால்** ஒட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை
கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்



சென்னை லக்ஷ்மியிலும் இப்பொழுது நடைபெறுகிறது

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 | நவம்பர் 6 | விரோதி ௵
இதழ் 14 | | ஐப்பசி 21

"கல்கி"யில் வெளியாகும் கதைகளின் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 14

என்ன செய்தி?

அருள் புரிவாராக!

"இரும்புப் பெட்டிக்குள் நவரத்னங்கள் முதலிய பொக்கிஷங்கள் இருப்பது போல, இரும்பு மனிதரான சர்தார் வல்லபாய் பட்டேலின் இருதயத்தில் அன்பு, தேசபக்தி, திறமை போன்ற அரும் பெரும் பொக்கிஷங்கள் நிறைந்து கிடக்கின்றன" என்று கவியர்சி ஸரோஜினி தேவி கூறினார். தேச பக்தியிலும் திறமையிலும் சர்தார் பட்டேலுக்கு ஈடு சர்தார் பட்டேல்தான்! பாரதநாடு சுதந்திரம் பெறுவதற்குமுன் அன்னியரிடம் அடி பணிந்து இந்த நாட்டுக்கு எவ்வளவு தீங்கும் துரோகமும் செய்ய முடியுமோ அவ்வளவு துரோகம் செய்த ஐ.ஸி.எஸ். வர்க்கத்தினிடமும் இந்திய மன்னர்களிடமும் பட்டேல் காட்டும் பரிவு ஒன்றே அந்த உத்தமரின் அன்பு கடல் போன்றது என்பதை நிரூபிக்கிறது! மகாத்மா காந்தியின் வலது கையாக விளங்கிய சர்தார் பட்டேலுக்குச் சென்ற அக்டோபர் மாதம் முப்பத்தொன்றாம் தேதியோடு எழுபத்திநாலு வயது பூர்த்தியாகி எழுபத்தைந்தாவது வயது ஆரம்பமாகிறது. அந்தத் தியாகியின் வாழ்வில் இடைவிடாத தேசத் தொண்டின் காரணமாக நேர்ந்த சிறைவாசமும் கஷ்ட நஷ்டங்களும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, மகான் காந்தியின் மரணமானது செய்து விட்டது. அஞ்சா நெஞ்சம் படைத்த சர்தார் பட்டேலுக்கு காந்திஜியின் மறைவினால் ஏற்பட்ட மன அதிர்ச்சி அவரது சரீரத்தைத் தளர்ச்சியுறும்படி செய்தது. அதனால் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்ட வீர சர்தார் மீண்டும் புத்துயிர் பெற்று இந்திய சர்க்காரின் நிர்வாக பீடத்தில் அமர்ந்திருப்பது இந்தியாவின் நல்ல அதிர்ஷ்டமேயாகும். இந்திய மகாஜனங்களின் ஹிருதய பூர்வமான பிரார்த்தனை காரணமாக சர்தார் பட்டேல் பூரண ஆரோக்கியத்தைப் பெற்று சுதந்திர இந்தியா சுபிட்ச இந்தியாவாக விளங்கப் போவதைக் கண் குளிரக் காண இறைவன் அருள் புரிவாராக!

ஆயிரம் தவறுகள்!

பாகிஸ்தானில் முஸ்லிம்களுக்குப் பாலும் தேனும் வழிந்தோடப் போகிறது என்று பாகிஸ்தானின் மூல கர்த்தாக்களான முஸ்லிம் லீகர்கள் பிரசாரம் செய்தார்கள். பாகிஸ்தான் ஏற்பட்டதன் விளைவாக எழுந்த கலகங்களில் லட்சக் கணக்கானவர் பலியாயினர். பாகிஸ்தான் தலைவர்களின் மீது ஒருவர் பின் ஒருவராக மோசடி வழக்குகள் நடைபெற்று வருகின்றன. பாகிஸ்தான் ஆட்சியின் ருசியை அனுபவித்த பாமர முஸ்லிம்களில் ஏராளமானவர் இந்தியாவுக்கு ஓடி வந்து விட்டார்கள். மற்றும் பலர் இங்கு வந்துவிடத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் பாகிஸ்தான் தலைவர்கள் பாடுபட்டார்களோ, அதே சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் பாடுபடும் தங்கள் மதத்தினரான பட்டாணியரைப் பாகிஸ்தான் சர்க்காரே குண்டு வீசிப் படுகொலை செய்து வருகிறார்கள். இவ்வாறாக, லீகர்கள் செய்த ஒரு பெரும் தவறு ஓராயிரம் தவறுகளுக்கு அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது! பாகிஸ்தான் ஏற்பட்ட பின் அங்கு லீகின் நிலைமை எப்படியாயினும், இனி இந்தியாவில் முஸ்லிம் லீகுக்கு இடமில்லை, அவசியமும் இல்லை என்பதை வெகு காலத்துக்கு முன்பே முஸ்லிம் பிரமுகர்களில் பலரும் உணர்ந்து கொண்டு விட்டார்கள்.

கர்னூல் உஸ்மானியா கல்லூரியின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் சையது அப்துல் லதீப் சில தினங்களுக்கு முன் இந்தியாவிலுள்ள லீகர்களுக்குப் புத்திமதியாகச் சில வார்த்தைகள் கூறினார். "இன்னும் லீகின் கொள்கையைப் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிராதீர்கள்!" என்று அவர்களை எச்சரித்தார். "சுதந்திர இந்தியாவில் வகுப்பு வாதத்துக்குச் சிறிதும் இடமில்லை. ஆகையால், எல்லா முஸ்லிம்களும் காங்கிரசில் சேர்ந்து கொள்வதுதான் அவர்களுடைய எதிர்கால க்ஷேமத்துக்கு ஏற்றது" என்றும் யோசனை

கூறினர். அவர் வாயளவில் அவ்விதம் கூறியதோடு நிற்கவில்லை. இரண்டாயிரம் முஸ்லிம்களுடன் காங்கிரசில் சேர்ந்தும் மற்ற லீகர்களுக்கு வழி காட்டியிருக்கிறார். பாகிஸ்தானுக்காக முன்பு கூக்குரலிட்ட முக்கியஸ்தர்களில் டாக்டர் லதீப்பும் ஒருவர் என்பதையும், அவருடைய பிரமை இப்போது நீங்கிவிட்டது என்பதையும் மற்ற லீகர்கள் கவனித்து நடந்து கொள்ள வேண்டும்.

அவர்களில் பலர் அவ்வாறு கவனித்துத் தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்ள முன் வந்து விட்டார்கள் என்பதையே சென்ற வாரம் மதுரையில் நிகழ்ந்த சம்பவம் காட்டுகிறது. அந் நகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள முஸ்லிம்கள் தேசிய காங்கிரசைச் சென்னைப் பிரதமர் கனம் குமாரஸ்வாமி ராஜா ஆரம்பித்து வைத்தார். "இந்திய அரசாங்கம் ஜாதி மதப் பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஒவ்வொரு சமூகத்தின் நலன்களையும் பாதுகாப்பதே இந்திய சர்க்காரின் கொள்கை. எனவே, கூடிய சீக்கிரம் முஸ்லிம் லீக் கலைக்கப் பட்டுவிடும் என்று நம்புகிறேன். முஸ்லிம்களிடையே ஏற்பட்டுள்ள இந்தப் புதிய ஸ்தாபனம் கூடிய சீக்கிரத்தில் இந்திய தேசிய காங்கிரசில் ஐக்கியமாகும் என்றும் நம்புகிறேன்" என்று சென்னைப் பிரதமர் அப்போது கூறியதை முஸ்லிம் லீகர்கள் மனதிலுன்னி தங்களுடைய நலன்களையும் தங்கள் சமூகத்தின் நலன்களையும் பாதுகாக்க முற்படுவார்களாக.


ஆசியா மக்களுக்கு ஆனந்தம்

சிறிதும் சோர்வின்றிப் பல வருஷங்களாகச் சுதந்திரப் போரை நடத்தி வந்த இந்தோனேஷ்யா வெற்றி பெறும் நாள் சமீபித்து விட்டது. டச்சு ஏகாதிபத்தியம் செய்து வந்த சூழ்ச்சிகள் தோல்வியுற்று விட்டன. இந்த வருஷம் டிசம்பர் மாதம் முப்பத்தொன்றும் தேதி இந்தோனேஷ்யர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதென்று டச்சு அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்தோனேஷ்யாவில் டச்சு ஏகாதிபத்தியத்துக்கு இரும்புக் கவசம்போல் இருந்து வந்த ஸௌரபாயா கடற்படைத் தளத்தையும் இந்தோனேஷ்யக் குடியரசிடம் ஒப்புவித்து விட அவர்கள் இணங்கி விட்டார்கள். இனி டச்சுக்காரர்கள் இந்தோனேஷ்யாவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்த எவ்வித சூழ்ச்சியும் செய்ய மாட்டார்கள் என்று நம்பலாம். இவ்வாறாக, பல நூற்றாண்டுகளாய் அன்னியரின் ஆதிக்கத்தில் உழன்று அல்லல்பட்ட ஏழு கோடி மக்கள் சுதந்திர வாழ்வைப் பெறும் சுதினம் சமீபத்திருப்பதைக் கண்டு ஆசியா மக்கள் யாவரும் ஆனந்தம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்தோனேஷ்யர்களின் வெற்றியில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆசியா நாடுகளில் பல இன்னும் சுதந்திரம் அடையவில்லை என்று இந்தியத் தலைவர் இடைவிடாது கூறுவதுடன், ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநிதிகளும் அந்த உண்மையை இடித்துக் காட்டி வருகிறார்கள். சுதந்திரப் போர் ஓய்ந்து அமைதி நிலவிய இந்தோனேஷ்யாவில் மீண்டும் திடீரென்று போரை ஆரம்பித்த டச்சுக்காரர்களின் அக்கிரமத்தைக் கண்டித்து பண்டித ஜவாஹர்லால் நேரு ஆசியா நாடுகள் அடங்கிய ஒரு மகா சபையைப் புது டில்லியிலே கூட்டியதை யாரும் மறந்திருக்க முடியாது. அந்தச் சபையிலே நிறைவேறிய கண்டனத் தீர்மானம் ஆசியா நாடுகள் தூங்கவில்லை என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டியது. அதன் பின்னர்தான் டச்சு ஏகாதிபத்திய வெறியின் உக்ரம் தணிந்து இந்தோனேஷ்யக் குடியரசு ஜனனமாவதற்கு வழி ஏற்பட்டது.


டாக்டர் பட்டாபியின் ஜாலவித்தை
சென்னை நகர்
ஏன் கவலைப்பட வேண்டும்? இதன் வழியாக ஏறி நாம் சென்னை நகரை அடைந்து விடலாமே!
எல்லாம் விற்பனையாகி வருகிறது!
பாகிஸ்தானின் பிடிவாதம்
உபாத்தியாயர் யார்? மாணவர் யார்?
பேஷ்! எனக்குப் பாடம் கற்றுக் கொடுக்கப் போகிறீர்களா?
வழிதப்பிய மாணவர்கள்

- சாஸ்திரி



இந்திய சர்க்கார் உணவு மந்திரி சென்னைக்கு விஜயம் செய்தபோது, சர்க்கரைப் பஞ்சம் தற்காலிகமானதென்றும் அது நீடித்து இராதென்றும் ஆறுதல் கூறினார்.
கவலைப் படாதீர்கள். சர்க்கரைத் தொழிற் சாலைகள் கூடிய சீக்கிரம் வேலை செய்ய ஆரம்பித்து விடும்.
"மாலடாவ்! நீர் போட்ட திட்டம் ஒன்றாவது உருப்படவில்லை. தோழர் லியாகத் அலியைப் பாருங்கள்! காஷ்மீரில் சக்கைப் போடு போட்டு விட்டார். ஆகையால், அவர் இங்கு வரும்போது அவரிடம் பாடம் கற்றுக் கொள்ளுங்கள்."
மாலடாவ்
ஸ்டாலின்
திட்டம்
திட்டம்
யுகோஸ்லேவியாவை அடிமையாக்கும் திட்டம்
எனது காதலியைத் திருப்தி படுத்துவதற்காக நீர் அமெரிக்க இளவரசர் யோகாப்பியாசம் செய்து பெல் ஜியத்தினிடமிருந்து பால் கறந்து கொண்டு வந்தார்—
பத்திரிகைச் செய்தி
அவரை இன்னும் அதிக உயரமாக எழுப்பி இன்னும் உரத்த குரலில் கத்திக் கொண்டிருங்கள்!
இந்தியா
நீங்களும் அதே போல் செய்து என்னைத் திருப்திப் படுத்த மாட்டீர்களா?

சென்னையில் குருக்ஷேத்திரம்!

ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்கு விரோதிகளாக இருப்பவர் யார்?

பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்று பல வருஷங்களுக்கு முன்பே காங்கிரஸ் தலைவர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

அவர்களுடைய தீர்மானத்தைக் காங்கிரஸ் மகாசபையும் பல ஆண்டுகளுக்கு முன் அங்கீகரித்து விட்டது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய சர்க்காரும், பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிப்பதற்குத் தாங்கள் முட்டுக் கட்டையாக இருக்கப் போவதில்லை என்பதைத் தெளிவு படுத்தி விட்டார்கள்.

பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிப்பதில் மற்றவர்கள் எப்படி விரும்பினும், ஆந்திரர்கள் மாத்திரம் மிகவும் அவசரப் பட்டார்கள்.

எனவே, பாஷா வாரியாக மற்ற மாகாணங்கள் பிரிக்கப் பட்டாலும் பிரிக்கப் படாவிட்டாலும், தாமதமின்றி ஆந்திர மாகாணம் ஏற்பட்டு விட வேண்டும் என்பதைத் தலைவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.

ஆந்திர மாகாணம் ஏற்பட வேண்டும் என்பதில் இப்போது ஆந்திரர்களைக் காட்டிலும் தமிழர்கள் அதிக மும்முரமாக இருந்து வருகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே.

இவ்வாறு எல்லோரும் ஏகோபித்து விரும்பும் ஆந்திர மாகாண அமைப்புக்கு விரோதிகள் இருக்க முடியுமா என்றால் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அத்தகைய விசித்திர விரோதிகள் யார்? அவர்கள் எங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறார்கள்?

அந்த விரோதிகளைத் தேடிக் கொண்டு யாரும் அதிக தூரம் போக வேண்டியதில்லை.

'ஆந்திர மாகாணம்', 'ஆந்திர மாகாணம்' என்று இடைவிடாது கூக்குரலிட்டு வரும் ஆந்திர கேஸரி பிரகாசம் காருவும் அவரது கோஷ்டியினருமேதான் இப்போது ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்குப் பரம விரோதிகளாக இருந்து வருகிறார்கள்!

ஆந்திர மாகாணம் தாமதமின்றி ஏற்பட வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டு விட்டார்களென்றாலும், சென்னை நகர் சம்பந்தப்பட்ட வரையில் ஆந்திரர்கள் கிளப்பி விட்டுள்ள புயல் ஆந்திர மாகாணக் கோரிக்கையையே தகர்த்து விடுமோ என்று தோன்றுகிறது!

ஆந்திரர்கள் சென்னை நகரில் பங்கு கேட்கும் விபரீதத்தைக் கைவிட்டாலன்றி, ஆந்திர மாகாணம் ஏற்படுவது முற்றிலும் முடியாத காரியம் என்பதை மூவர் கமிட்டி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

சென்னை நகரில் நூறு சத விகிதம் பாத்தியதையுள்ள தமிழ் மகா ஜனங்கள் பிரகாசம் கோஷ்டியினரின் பேராசைக்கு, அநியாயமான கோரிக்கைக்கு எள்ளளவும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

தமிழ் மக்கள் அவ்விஷயமாகப் பொதுக்கூட்டங்களின் மூலம் தங்களுடைய கருத்தை ஐயம் திரிபுக்கு இடமின்றி வெளியிட்டிருக்கிறார்கள்.

சென்ற வாரம் மதுரையில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் தமிழர்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தை உறுதி செய்திருக்கிறது.

"மூவர் கமிட்டியின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சித்தூர், கடப்பை, அனந்தப்பூர், பெல்லாரி, கர்னூல், நெல்லூர், குண்டூர், கிருஷ்ணா, மேற்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி, தெற்கு விசாகை, வடக்கு விசாகை முதலிய ஜில்லாக்களுடன் சீக்கிரம் தாமதமின்றி ஆந்திர மாகாணம் அமைவதை இந்தக் கமிட்டி அங்கீகரிக்கிறது. சென்னை நகரம் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாதலால், அதில் பங்கு கேட்க ஆந்திரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆந்திர மாகாணம் ஏற்பட்ட பின் மாகாண எல்லை சம்பந்தமான சில்லறை விஷயங்களை நிர்ணயம் செய்து கொள்ளலாம்." — இதுதான் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானமாகும்.

அகில இந்தியாவின் பிரதிநிதி ஸ்தாபனமும் சென்னை மாகாணத்தின் பிரதி

நீதி ஸ்தாபனமும் அவ்வாறு சந்தேகத்துக்கு இடமின்றிச் செய்துள்ள ஒரு முடிவைக் குறித்துப் பிரகாசம் காரு கோஷ்டியினர் இன்னும் கிளர்ச்சி செய்து வருவது பற்பல சந்தேகங்களுக்கு இடமாகிறது.

அதாவது தேசம் முழுவதையும் பொருளாதார நெருக்கடி சூழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலே ஆந்திர மாகாணம் ஏற்படுமாயின் அதன் நிர்வாகத்தை வெற்றிகரமாக நடத்துவது முடியாத காரியம் என்று மேற்படி கோஷ்டியினருக்குத் தோன்றியிருக்கலாம்!

எனவே, ஆந்திர மாகாணம் உடனடியாக ஏற்படாமல் தடுப்பதற்காக அவர்கள் ''மதராஸ் மனதே'' என்ற அர்த்தமற்ற, அனுஷ்டான சாத்தியமில்லாத கோஷத்தைக் கண்டு பிடித்திருக்கலாம்!

* * *

இந்தச் சந்தர்ப்பத்திலே காங்கிரஸ் அக்ராசனர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா கூறியுள்ள யோசனை, போர்க் கோலம் பூண்டுள்ள ஆந்திர கேசரிகளுக்கு மேற் கொண்டு தூபம் போடுவதாக இருக்கிறது.

செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள சில இடங்களைச் சேர்த்து சென்னை நகரைத் தனி மாகாணமாக அமைக்க வேண்டும் என்பதுதான் டாக்டர் பட்டாபி கூறியுள்ள யோசனை.

சென்னை நகரில் தங்களுக்குப் பங்கு கிடைக்கா விட்டால் இந்தியாவுக்கே ஆபத்து ஏற்படும் என்று ஆந்திரர்கள் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், டாக்டர் பட்டாபி அத்தகைய யோசனையைக் கூற முற்பட்டது கண்டிக்கத்தக்க காரியமாகும்.

சென்னை நகரில் தங்களுக்குப் பங்கு இல்லை என்றால், சென்னை தனி மாகாணமாகவாவது இருக்க வேண்டுமே யன்றி தமிழ் நாட்டுடன் இணைந்திருப்பதைத் தாங்கள் சகிக்க முடியாது என்பதே ஆந்திரர்களின் கூற்று. டாக்டர் பட்டாபியின் யோசனை ஆந்திரர்களின் மேற்படி பாட்டுக்குத் தாளம் போடுவது போல இருக்கிறது!

டாக்டர் பட்டாபி காங்கிரஸ் மகா சபையின் அக்ராசனர் என்பதுடன், ஆந்திர மாகாணப் பிரச்னையைப் பரிசீலனை செய்த மூன்று நீதிபதிகளில் ஒருவருமாவார்.

சென்னை நகரில் பாத்தியதை கொண்டாட ஆந்திரர்களுக்கு உரிமையில்லை என்று தீர்ப்புக் கூறியவர்களில் அவரும் ஒருவர்தான்.

அப்படியிருக்க, அவர் மேற்படி கமிட்டி அறிக்கைக்கு விரோதமாகவும், ஆந்திரர்களுக்குச் சாதகமாகவும் இப்போது அபிப்பிராயம் கூற முன் வந்தது, தன்னுடைய தீர்ப்பைத் தானே கிழித்து எறிவதாகாதா?

அவ்விஷயமாக டாக்டர் பட்டாபி ஒன்று வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும். இல்லையேல், தாம் ஏற்கனவே அளித்த தீர்ப்புக்கு முரணின்றியாவது பேச வேண்டும்.

நேர்மையான அந்த இரண்டு வழிகளையும் விட்டு விட்டு அவர், குழம்பியிருக்கும் குட்டையை மேற்கொண்டு குழப்ப முற்பட்டது அவரது உயர் பதவிக்கு உகந்த காரியம் அல்ல.

* * *

ஆந்திர மாகாணப் பிரிவினைப் பிரச்னை இப்போது நெருக்கடியான ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது.

ஆந்திர மாகாணம் ஏற்பட்டால் தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்களின் நிலைமை, பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்களின் நிலைமைக்கு ஒப்பாகி விடும் என்று கூட சில ஆந்திரர்கள் பிரலாபிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பிரகாசம்காரு அவ்விஷயமாக விடுக்கும் அறிக்கைகள் தீயைக் கக்குகின்றன. எல்லாரையும் ஒரு கை பார்த்து விடுவதாக அவர் போர் முரசு கொட்டிக் கொண்டிருக்கிறார்.

பாண்டவர்களும் துரியோதனாதிகளும் மோதிக் கொண்ட போர்க்களமான குருக்ஷேத்திரத்தைப் போல, தமிழர்களும் ஆந்திரர்களும் மோதிக் கொள்ளும் குருக்ஷேத்திரமாகச் சென்னையும் விளங்கப் போகிறது என்று கூடச் சில தீவிர வாதிகளான ஆந்திரர்கள் கற்பனை செய்து கொண்டு வருகிறார்கள்!

ஆனால், பிரகாசம்காருவுக்கும் அவரது கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் யாரும் மறுக்க முடியாத ஓர் உண்மையை மாத்திரம் ஞாபக மூட்ட விரும்புகிறோம்.

தங்களைக் காட்டிலும் இந்திய சர்க்காரும் அந்தச் சர்க்காரை நிர்வகிக்கும் தலைவர்களும் அறிவிலும் ஆற்றலிலும், நீதியிலும் நேர்மையிலும், தொண்டிலும் தேச பக்தியிலும் மகா பெரியவர்கள் என்பதை மேற்படி கோஷ்டியினர் உணர்ந்து கொண்டு, தங்களுடைய பிடிவாதத்தையும் போர்க் கோலத்தையும் கைவிடுவார்களாக!

அட்டைப்பட விளக்கம்

குடம் கொண்டு வரும் சீதை

குழந்தைகளின் உள்ளத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்ப்போமானால் அங்கே எத்தனையோ அற்புதமான காட்சிகள், உண்டாகியும், தங்கியும், பிறகு மறைந்தும் போய்க் கொண்டிருக்கும். மிக மிகத் தெளிவாகவே இருக்கும் அந்தக் காட்சிகள். அதே போலத்தான் கம்பரது உள்ளத்தில் அற்புதமான காட்சிகள் வரும், நிற்கும், போகும்.



* * *

இராமன் சீதை இருவரும் பஞ்சவடிக்குப் போகிறார்கள் என்று எண்ணிய மாத்திரத்தில், கோதாவரியின் கரையில் இராமனும் சீதையும் நடந்து செல்லுகிறார்கள் என்னும் காட்சி உதிக்கிறது. அவர்களுடைய நடையைக் கம்பரே கண்டு அநுபவிக்கிறார்.

அந்த அநுபவம் கவியாக உருவெடுக்கிறது. எப்படி?

அன்னம் ஒன்று அந்த நேரம் மென்ன மென்ன நடந்து கொண்டிருந்தது. அதை ராமன் கண்டான்.

அதுபோல கம்பீரமான யானை ஒன்றும் வந்து நீரை உண்டுவிட்டுத் திரும்பியது. "யானையின் நடை, சரி சரி, இவ்வளவு தானா?" என்று லேசாக நகைத்தாள் சீதை.

கவி சொல்லுகிறார்:

"ஓதிமம் ஒதுங்கக்கண்
உத்தமன், உழையளா கும்
சீதைதன் நடையைக்கண் டு
சிறியதோர் முறுவல்செய் தான்;—
மாதவள் தானும்,ஆண் டு
வந்துநீர் உண்டுமீ ளும்
போதகம் நடப்பநோக் கிப்
புதியதோர் முறுவல்பூத் தாள்

[ஓதிமம் : அன்னம் ; உத்தமன் : ராமன் ; உழையள் : பக்கத்தில் வரும் ; மாதவள் : சீதை ; போதகம் : யானை.]

காட்சியும் வந்தது கவியும் வந்தது கம்பருக்கு. இனி:

* * *

கம்பர் உள்ளத்தில் தோன்றக் கூடியதான வேறு ஒரு காட்சி.

காலை நேரம்: சூரியன் தகதக என்று கிழக்கே உதிக்கிறான்.

சீதையானவள் ஆற்றில் ஸ்நானம் செய்து விட்டு ஈர உடை உடுத்தியவளாய், இடது ஒக்கலில் நீர்க் குடம் ஒன்றை வைத்துக் கொண்டு, தண்ணீரில் காலை மென்ன மென்ன எடுத்து வைத்து நடந்து வருகிறாள். எத்தகைய காட்சி அது! அந்தக் காட்சியை ராமனும் ஆற்றுக்குள்ளிருக்கும் ஒரு பாறையில் உட்கார்ந்த வண்ணமாய் அநுபவிக்கிறான்.

கம்பரது உள்ளத்தில் தோன்றக் கூடிய காட்சியே. கவி உருவம் எடுக்கக் கூடிய காட்சிதான். நாம் கொஞ்சம் கவி உருவம் கொடுக்கப் பார்த்தால் அது முடியாத காரியமாகத் தோன்றும்.

கவி என்றால், காட்சி — உணர்ச்சி, அவைகளுக்கேற்ற வார்த்தைகள், தாளங்கள், எல்லாம் ஒத்துவர வேண்டும். எளிதாயும் இருக்க வேண்டும்; இயல்பாகவும் இருக்க வேண்டும்; தமிழ்ப் பண்புக்கு ஒத்தவாறாக இன்னிசை தழுவி இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக ஒரு புதுமை இருக்க வேண்டும்— விஷயத்தில் அல்ல; உள்ளீடாகிய உணர்ச்சிக்கான உருவத்தில் இருக்க வேண்டும் புதுமை.

இப்படியெல்லாம் கவி உருவத்தைப் பார்த்தால்தான், அப்படியா இருக்கிறது காரியம், சரி சரி, கம்பரைக் கவிச் சக்கரவர்த்தி என்று சொல்லுகிறார்களே, அது உண்மைதான் என்று உணர நேரும்.

படத்தில், ஏடு, எழுத்தாணி, விளக்கு, கம்பர் எல்லாருமாகக் காட்சிக்குக் கவி உருவம் கொடுக்கப் பார்க்கிறார்கள்.

அந்தக் கவி எதுவோ!

★ ★ ★ சென்ற மாதம் 26-ம் தேதி பண்டித ஜவாஹர்லால் நேரு 'உலகச் சந்தை' என்று புகழப்படும் சிக்காகோவுக்கு விஜயம் செய்தார். சிக்காகோ மக்கள் அவரை உற்சாகமாக வரவேற்றார்கள். சிக்காகோவுக்கும் இந்தியாவுக்கு மிடையே ஒரு பழந் தொடர்பு உண்டு. அது என்னவென்பது கீழே விளக்கப்படுகிறது.

இரண்டாவது திக்விஜயம்

சபரி

அமெரிக்காவில் உள்ள இரண்டாவது பெரு நகரம் சிக்காகோ.

கலைமகளும் திருமகளும் ஒருங்கே வீற்றிருந்து ஆட்சி செய்யும் திருநகரம் சிக்காகோ.

வாணிபத்திலும் தொழில் வளத்திலும் பிரபலமாக விளங்குவது சிக்காகோ.

விண்முட்டும் மாட மாளிகைகளும் கண்ணைப் பறிக்கும் காட்சிகளும் நிறைந்தது சிக்காகோ.

இத்தகைய பேரும் புகழும் பெருவாழ்வும் மிக்க நகரத்துக்கு நம்முடைய பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற மாதம் 26-ம் தேதி விஜயம் செய்தார்.

சிக்காகோ அவரைப் போற்றிப் புகழ்ந்து வரவேற்றது.

நேருஜி சிக்காகோவில் செய்த பிரசங்கத்தையும் சிக்காகோ மக்கள் அதைப் பாராட்டிப் புகழ்ந்ததையும் கவனிக்கும் போது, ஏறக் குறைய அறுபது வருஷத்துக்கு முன் பாரதத் தாயின் மற்றொரு அருமைப் புதல்வர் சிக்காகோவுக்கு விஜயம் செய்து அங்கு செய்த ஒரு முக்கியமான பிரசங்கம் நம்முடைய நினைவுக்கு வருகிறது.

அது என்னவென்று பார்ப்போம்.

* * *

1891-ம் வருஷம்.

பாரத நாட்டின் ஆத்மஞானப் பேரொளியாக விளங்கிக் கொண்டிருந்த மகான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மறைந்து கொஞ்ச காலமே இருக்கும்.

சுவாமி விவேகானந்தர் ஸ்தல யாத்திரை செய்யவும் பாரத தேசத்தின் நிலைமையைக் கண்டறியவும் விரும்பினார்.

கையில் கமண்டலம் தாங்கிக் கொண்டு பரிவ்ராஜக பரமஹம்ஸராகப் புறப்பட்டார்.

போகும்போது சுவாமிஜி தம் அன்பர்களை நோக்கிக் கூறியதாவது: "நான் போகிறேன். இப்போதைக்குத் திரும்பி வரமாட்டேன். திடீரென்று எப்போதாவது வருவேன். அப்போது நான் வெடிகுண்டைப் போல பாரத ஜனசமுதாயத்தில் வெடித்து, மக்கள் எல்லோரையும் என்னைப் பின்பற்றி வரும்படியாகச் செய்வேன்."

இவ்விதம் கூறிவிட்டு அவர் புறப்பட்டார்.

காசிக்குப் போனார்; அயோத்திக்குப் போனார். கண்ணன் லீலைகள் புரிந்த பிருந்தாவனத்தைக் கண்டு மகிழ்ந்தார். வட இந்தியாவிலுள்ள இன்னும் பல க்ஷேத்திரங்களையும் பட்டணங்களையும் கண்டார். பிறகு தென்னாட்டுக்கு விஜயம் செய்தார். தென்னாட்டிலுள்ள பல திவ்ய க்ஷேத்திரங்களையும் சரித்திரப் புகழ் பெற்ற பட்டணங்களையும் கண்டார்.

அவற்றையெல்லாம் பார்த்து சுவாமிஜியின் மனம் அமைதி யடைந்ததா? இல்லை. அமைதிக்குப் பதிலாக வேதனைக் குள்ளாயிற்று. "தாய் நாடே! என் அருமைத் தாய் நாடே! உன்னுடைய நிலைமை இப்படியா ஆகவேண்டும்?" என்று அவர் விம்மிப் பெருமூச்சு விட்டார்.

காரணம் என்ன?

சுவாமிஜி ஆண்டவனை—ஸ்ரீமந்நாராயணனைக்—கண்டு தரிசிப்பதற்காக ஸ்தல யாத்திரை புறப்பட்டு வந்தார். ஆனால் அவர் நாராயணனைக் காணவில்லை. **தரித்திர** நாராயணனைத்தான் கண்டார்.

பாரத நாட்டின் பரம தரித்திர நிலைமையைக் கண்டு அவர் திடுக்கிட்டார். "தெய்வத் தொண்டர்கள் என்று அழைக்கப்படும் துறவிகளாகிய நாம் மக்களுடைய கஷ்டத்தைப் போக்க என்ன செய்திருக்கிறோம்?" என்று அவர் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். மக்களுடைய வறுமையைக் களையாமல் மதத்தைப் பற்றி அவர்களிடையே பிரசாரம் செய்வது பெருந் தவறு என்று அவர் கருதினார்.

தூக்கம் அவர் கண்ணை விட்டு அகன்றது. இரவு பகலாக அவர் யோசித்தார். கடைசியில் பாரத நாட்டின் கேவல நிலைமையைப் போக்கப் பாடுபடுவதென்றும் அதற்காகத் தம்முடைய உயிரையே அர்ப்பணம் செய்வதென்றும் முடிவு செய்தார்.

ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது? அது இலகுவான காரியமா? கையில் ஒரு தம்பிடி இல்லாத ஒரு ஏழைத் துறவியால் அது எப்படி முடியும்?

சுவாமிஜி யோசித்தார். ஒரு வழியும் அவருக்குப் புலப்படவில்லை. பிறகு தலையைத் தூக்கி முன்னாலே பார்த்தார்.

அப்போது சுவாமிஜி பாரத நாட்டின் தென் கோடியில் உள்ள கன்யாகுமரியில் இருந்தார்.

அலை கடலுக்கு வெகு தூரத்தில், ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவும் ஐரோப்பாவும் இருப்பது அவருக்கு ஞாபகம் வந்தது. திடீரென்று அவருக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. "ஆம், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இதைப் பற்றிக் கூற வேண்டும். இந்தியா முன்பு இருந்த பெருமையையும் இப்போது அது அடைந்திருக்கும் சிறுமையையும் எடுத்துச் சொல்லி உலகத்தின் உதவியைப் பெற வேண்டும்" என்று முடிவு செய்தார்.

அவருடைய விருப்பத்துக்குத் தெய்வமும் திருவருள் செய்தது.

சுவாமிஜியின் மேதையை நன்கு உணர்ந்த தென்னாட்டுப் பிரமுகர்கள் பலர், அப்போது அமெரிக்காவில் நடக்கப்போகும் சர்வமத சபைக் கூட்டத்துக்கு ஹிந்து மதத்தின் பிரதிநிதியாக அவர் போக வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதற்கு சுவாமிஜியும் ஒப்புக் கொண்டார்.

1893-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி சுவாமிஜி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார்.

* * *

போகபூமி எனக் கருதப்படும் அமெரிக்காவில் காலடி எடுத்து வைத்ததும் சுவாமிஜியின் பிரமிப்பு அதிகமாயிற்று.

அடேயப்பா! எத்தனை கட்டிடங்கள்! எவ்வளவு பெரிய கட்டிடங்கள்! கண் முன்னாலே காணப்படுவது கனவு உலகமா? தெய்வ லோகமா? விண்ணை முட்டக்கூடிய அம் மாபெருங் கட்டிடங்களைச் சின்னஞ்சிறு குழந்தையைப் போல அண்ணாந்து அண்ணாந்து பார்த்து சுவாமிஜி அதிசயப் பரவசமானார்.

எல்லாம் அவருக்குப் புதிதாக இருந்தது. எதைப் பார்த்தாலும் மீண்டும் மீண்டும் உற்று நோக்க வேண்டும் போல இருந்தது.

இகலோக வாழ்க்கையில் மேல்நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்தைக் கண்டு சுவாமிஜி திகைத்தார்.


ஒரு வாரம் கழிந்தது.

சிக்காகோ நகரத்தின் செல்வச் சிறப்பில் ஈடுபட்டிருந்த சுவாமிஜிக்குத் தாம் வந்த காரியம் என்னவென்பது அப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது. உடனே மேற்படி சர்வ மத ஆராய்ச்சிக் கழகத்துக்குச் சென்று "சர்வ மத மகாசபைக் கூட்டம் எப்போது நடக்கப் போகிறது?" என்று கேட்டார்.

அமெரிக்காவில் மேற்படி மகாசபை ஒன்று நடக்கப் போகிறது என்பது மாத்திரம் சுவாமிஜிக்கும் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தவர்களுக்கும் தெரியுமே யொழிய, அது எப்போது நடக்கப் போகிறது என்பது அவர்களுக்குத் தெரியாது.

சுவாமிஜிக்கு மேற்படி மத ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து கிடைத்த பதில் அவரைத் திடுக்கிட வைத்தது.

மகா சபை கூடுவதற்கு இன்னும் ஏழு வாரம் இருப்பதாக அவர்கள் கூறினார்கள். "ஏழு வாரமா? அதுவரை அமெரிக்கா



சிக்காகோவில் உள்ள புகழ்பெற்ற விஞ்ஞானப் பொருட் காட்சிச் சாலை. சென்ற மாதம் 28-ம் தேதி பண்டித நேரு இங்கு விஜயம் செய்தார்.

வில் எப்படி இருப்பது? செலவுக்குப் பணத்துக்கு எங்கே போவது?" என்று சுவாமிஜி யோசித்தார்.

பணக் கஷ்டம் மாத்திரமா? வேறொரு இடையூறும் இருந்தது.

சர்வமத மகாசபையில் பேசுவது இலகுவல்ல. விரும்புபவர்கள் எல்லோரும் வந்து பேசிவிட முடியாது. ஒரு மதத்தின் பிரதிநிதியாக இன்னாரை அனுப்புகிறோம் என்று அந்நாட்டு மக்கள் முன்னதாகவே விண்ணப்பித்து, மேற்படி மகாசபையின் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

சுவாமிஜி அத்தகைய அனுமதி எதுவும் பெறவில்லை. இனிமேல் அனுமதி பெறுவதும் கஷ்டம். காலம் கடந்துவிட்டது.

வந்த காரியம் முடியாதோ என்று சுவாமிஜி சந்தேகப்பட்டார். ஆனால் அவர் நம்பிக்கை இழக்கவில்லை.

பணம் அனுப்பும்படிச் சென்னைக்குத் தந்தியடித்தார்.

கைவசம் பணம் கொஞ்சமாக இருந்தது. சிக்காகோ நகரத்தில் இருந்தால் செலவு அதிகமாகும் என்று நினைத்து, எளிய வாழ்க்கைக்கு ஏற்ற இடமாகிய பாஸ்டனுக்குப் புறப்பட்டார்.

விதி அவருக்குத் துணை செய்தது. அவர் பிரயாணம் செய்த அதே ரயிலில் ஒரு முதிய அமெரிக்க மாதும் பிரயாணம் செய்தாள். அவள் சுவாமிஜியுடன் நட்பு பூண்டாள். பாஸ்டனை அடைந்ததும், அவள் சுவாமிஜியைத் தன் இல்லத்திற்கு அழைத்தாள். சுவாமிஜியும் அங்கு சென்று அவளுடைய அதிதியாக இரண்டொரு நாளைப் போக்கினார். அப்போது அமெரிக்காவில் பிரபலமாக விளங்கிய ஜே. ஹெச். ரைட் என்னும் ஒரு பேராசிரியர் ஒரு நாள் அவ் வீட்டுக்கு வந்தார். அவர் சுவாமிஜியுடன் சற்று நேரம் தான் பேசியிருப்பார். சுவாமிஜியின் மேதை அவருக்கு நன்றாகப் புலப்பட்டது. உடனே அவர் சுவாமிஜியைப் பார்த்து, "சிக்காகோவில் சர்வமத சபை கூடப் போகிறதே, உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஆம், தெரியும்" என்றார் சுவாமிஜி.

"அதில் நீங்கள் ஹிந்து மதத்தின் பிரதிநிதியாகப் பேச வேண்டும்" என்றார் ஸ்ரீ ரைட்.

"எனக்கு அனுமதி இல்லையே!" என்றார் சுவாமிஜி.

"அனுமதியா?—நன்றாயிருக்கிறது! உங்களிடம் அனுமதி கேட்பது சூரியனைப் பார்த்து, 'நீ பிரகாசிக்க யார் அனுமதி கொடுத்தது?' என்று கேட்பதைப் போலத்தான் இருக்கும். நீங்கள் இப்போதே சிக்காகோவுக்குப் புறப்படுங்கள். பாக்கி ஏற்பாடுகளை நான் செய்கிறேன்."

பேராசிரியராகிய ஸ்ரீ ரைட் உடனே மேற்படி சர்வமத சபைத் தலைவருக்கு ஒரு சிபார்சுக் கடிதம் எழுதி அதை சுவாமிஜியிடம் கொடுத்தார். சுவாமிஜியின் கையில் போதிய பணம் இல்லையென்பதை உணர்ந்து தாமே சிக்காகோவுக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொடுத்து, சுவாமிஜியை அங்கு அனுப்பி வைத்தார். அநேகமாக எல்லாக் கஷ்டங்களையும் சுவாமிஜி சமாளித்து விட்டார் போலத் தோன்றியது.

ஆனால் உண்மையில் அப்படி இல்லை!

இன்னும் அவருக்குக் கஷ்டம் காத்துக் கொண்டிருந்தது.

சுவாமிஜி சிக்காகோவை அடைந்தபோது இருட்டி வெகுநேரமாகிவிட்டது. ஸ்ரீ ரைட் எழுதிக் கொடுத்த மேற்படி மகாசபைக் கமிட்டிக் காரியாலயம் இருக்கும் விலாசத்தை சுவாமிஜி தேடிப் பார்த்தார். காணோம்!—எங்கேயோ கெட்டுப் போக்கிவிட்டார். கடிதம் மாத்திரம் இருந்தது.

அந்நேரத்தில் அந்தக் காரியாலயத்தைக் கண்டு பிடிப்பது மிக்க கஷ்டம். சுவாமிஜிக்கு மிக்க களைப்பாயிருந்தது. தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது. ஸ்டேஷனில் ஒரு மூலையில் ஒரு காலிப்பெட்டி கிடந்தது. சுவாமிஜி அதன் மீது படுத்துக் கொண்டார். இன்னும் கொஞ்ச காலத்திற்குள் அமெரிக்காவையும் உலகத்தையும் ஆட்டிவைக்கப் போகும் அம்மகா புருஷர் இப்போது திக்கற்றவராக ஒரு பெட்டிமீது கிடந்தார். பொழுது விடிந்ததும் எழுந்து மேற்படி மகா சபைக் காரியாலயத்தைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டார். அம் மாபெரும் நகரத்தில் விலாசம் தெரியாமல் ஒரு கட்டிடத்தைக் கண்டு பிடிப்பதென்பது சுலபமா? சுவாமிஜி கால் கடையாக அப்படிச் சுற்றியலைந்து கொண்டிருந்தபோது, பல அவமதிப்புகளுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாக நேர்ந்தது. கடைசியில் ஒரு வகையாக அந்தக் கட்டிடத்தைக் கண்டு பிடித்து, ஸ்ரீ ரைட் கொடுத்த சிபாரிசுக் கடிதத்தை மேற்படி மகாசபை நிர்வாகிகளிடம் கொடுத்தார். அவர்கள் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, சுவாமிஜியை ஒரு பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு அவருக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் மகிழ்ச்சியுடன் செய்து கொடுத்தார்கள்.

1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதி. காலை மணி பத்து இருக்கும்.

சிக்காகோ நகரத்தின் சரித்திரப் புகழ் பெற்ற மேற்படி சர்வமத மகாசபைக் கூட்டம் வெகு தடபுடலாக ஆரம்பமாயிற்று.

மண்டபத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த ஒரு மேடையில் தலைவர் அமர்ந்திருந்தார். அவருக்கு இருபுறமும் அணியணியாகப் பிரதிநிதிகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் விதவிதமான உடையணிந்து விதவிதமான தோற்றத்துடன் விளங்கினார்கள். ஹிந்து மதம், பௌத்த மதம், இஸ்லாம்—உலகத்தில் எத்தனை மதங்கள் உண்டோ அத்தனை மதப் பிரதிநிதிகளும் அங்கு பிரசன்னமாயிருந்தார்கள்.

தலைவர் அம்மகாசபை கூட்டப்பட்டதன் நோக்கத்தை விளக்கிப் பேசினார். பிறகு பிரசங்கிகள் ஒவ்வொருவராக எழுந்து பேசத் தொடங்கினார்கள். நன்றாக யோசித்து வெகுநாள் ஆலோசித்து, முன்னதாகவே எழுதி வைத்திருந்ததைப் படித்துக் கிளிப்பிள்ளையைப்போல ஒப்புவித்தார்கள். ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தமாகவும் திருத்தமாகவும் உச்சரித்துப் பேசினார்கள். கேட்பவர்களுடைய மனதைக் கொள்ளை கொள்ளுவதற்கு பிரசங்க இலக்கணத்திலே என்னென்ன விதிகள் உண்டோ அத்தனையையும் கையாண்டு பேசி முடித்தார்கள்.

அநேகமாக எல்லோரும் பேசி முடித்து விட்டார்கள். இன்னும் சிலரே பாக்கியிருக்கிறார்கள். சுவாமிஜியின் முறையும் வந்து கொண்டிருக்கிறது. அதோ வந்தும் விட்டது!

சுவாமிஜி எழுந்தார். மேடை மீது வந்து நின்றார் கம்பீரமாக. சிங்கம்போல் சபையோரை ஒரு முறை எதிட்டுப் பார்த்தார்.

அம்மாபெரும் சபை முழுவதும் "யார் இவர்?" "யார் இவர்?" என்ற கேள்வி தோன்றியது.

காவியுடை தரித்து, தலையிலே மஞ்சள் தலைப்பாகை யணிந்து இளஞ் சிங்கம் போல நின்ற சுவாமிஜியின் முகத்திலே ராஜகளை பொங்கித் ததும்பியது.

"இவரா சந்நியாசி? இவரா யோகி?" என்று அதிசயித்தார்கள் சபையோர்கள்.

சுவாமிஜியின் கையில் கடுதாசி எதுவும் இல்லை; அவர் எதையும் எழுதிக் கொண்டு வரவும் இல்லை.

அவர் பேசத் தொடங்கினார். சரஸ்வதி தேவியை மனதிலே தியானித்துக்கொண்டு, குருநாதராகிய ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய திருநாமத்தை உச்சரித்து விட்டுப் பேசத் தொடங்கினார்.

"அமெரிக்க சகோதர சகோதரிகளே!"—அவ்வளவுதான்! அதென்ன அது? கரகோஷந்தானா அல்லது இடி முழக்கமா?

சபையின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை முழக்கம் கேட்டது.

சுவாமிஜி ஜயித்து விட்டார்! அமெரிக்காவையே ஜயித்து விட்டார்! அல்ல, உலகத்தையே ஜயித்து விட்டார்!—மூன்றே மூன்று வார்த்தைகளில்!

அதற்கு முன் பேசிய மற்றப் பிரசங்கிகள் எல்லோரும் சபையோரை "அமெரிக்க சீமான்களே! சீமாட்டிகளே!" என்றுதான் குறிப்பிட்டார்கள். சுவாமிஜியைப் போல "அமெரிக்க சகோதர சகோதரிகளே!" என்று அவ்வளவு அன்பும் நேசமும் பாராட்டி யாரும் கூறவில்லை.

உலகனைத்தையும் ஒரே குடும்பமாகவும் உலக மதங்கள் அனைத்தையும் சகோதர



சுப்பா சாஸ்திரிகள்:—சாஸ்திரிகளே, தலையில் என்ன பிளாஸ்திரி?

அப்பா சாஸ்திரி:—ஒரு வீட்டிலே விசேஷத்துக்குப் போயிருந்தேன். தலையில் அட்சதை போட்டார்கள். ரேஷன் அரிசியோ இல்லையோ? அதில் கல் இருந்து விட்டது!

மதங்களாகவும் உலக மக்கள் அனைவரையும் சகோதர சகோதரிகளாகவும் கருதும் ஹிந்து மதத்தின் பிரதிநிதியின் வாயிலிருந்து வேறு என்ன வார்த்தைகள் வந்திருக்க முடியும்?

ஹிந்து மதத்தின் பெருமையையும் ஹிந்து நாகரிகத்தின் பெருமையையும் ஸ்வாமிஜி இவ்விதம் மூன்றே மூன்று வார்த்தைகளில் உலகத்துக்கு விளக்கி விட்டார்.

கரகோஷமும் ஆரவாரமும் ஒரு வகையாக அடங்கிய பிறகு ஸ்வாமிஜி மீண்டும் பேசத் தொடங்கினார். மந்திர சக்தியால் கட்டுண்டவர்கள்போல மக்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

ஒரே நாளில் ஸ்வாமிஜியின் புகழ் சிக்காகோ நகர முழுவதும் காட்டுத் தீ போலப் பரவியது. அவரைத் தரிசிப்பதற்காகச் சிக்காகோ மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். கோடீஸ்வரர்கள் பலர் அவரைத் தங்கள் அதிதியாக எழுந்தருள வேண்டுமென்று கெஞ்சினார்கள்.

நேற்று வரை கவனிப்பாரற்றுத் தெருவில் அலைந்த ஒரு சந்நியாசிக்கு இன்று எவ்வளவு மதிப்பு! என்ன உபசாரம்!

நாளுக்குநாள் அவருடைய புகழும் பெருமையும் அதிகமாயிற்று. ஸ்வாமிஜி அமெரிக்கா முழுவதும் திக் விஜயம் செய்தார். ஐரோப்பாவுக்கும் போய் அங்கும் வேதாந்தக் கொடியை நிலைநாட்டினார்.

போகும் இடமெல்லாம் அவர் போற்றப்பட்டார்; சென்ற இடமெல்லாம் அவர் சிறப்பிக்கப்பட்டார். ஆனால், சிக்காகோ நகரம்தான் முதல் முதலாக ஸ்வாமிஜியின் மேதையை உணர்ந்து அவரைக் கௌரவித்தது என்பதை நாம் மறக்க முடியாது.

• • •

ஏறக்குறைய அறுபது வருஷம் கழித்து அதே சிக்காகோ நகரத்துக்கு நம்முடைய பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு இரண்டாவது திக் விஜயம் செய்தார்.

அன்பையும் அஹிம்சையையும் அமெரிக்க மக்களுக்கு விளக்கிக் கூறினார்.

அமெரிக்க மக்கள் அவருடைய பேச்சைக் கேட்டு அதைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

ஒரே ஒரு வித்தியாசம்: ஸ்வாமி விவேகானந்தரை சிக்காகோ நகரம் கௌரவித்துப் பாராட்டியது. நேருஜி தம்முடைய விஜயத்தின் மூலம் சிக்காகோவின் கௌரவத்தையே உயர்த்திவிட்டார்!

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

22. "வளருதே தீ!"

பெஜவாடாவில் போட்ட திட்டம் ஒருவாறு நிறைவேறிவிட்டது. அடுத்தாற்போல் என்ன? "ஒரு வருஷத்திற்குள் சுயராஜ்யம்" என்று காந்தி மகாத்மா சொன்னாரே? ஜூன் மாதம் 30௳யோடு அரை வருஷம் ஆகிவிட்டதே! மிச்சமுள்ள ஆறு மாதத்தில் சுயராஜ்யம் கிடைத்தாக வேண்டுமே? அதற்கு என்ன வழி? அடுத்த திட்டம் என்ன?...

அடுத்த திட்டம் என்ன வென்பதைக் காந்தி மகாத்மா சொன்னார்: "(1) அன்னியத் துணி பகிஷ்காரம்; (2) மது விலக்கு;—இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றி வையுங்கள். இதற்குப் பிறகும் பிரிட்டிஷார் பணிந்து வரா விட்டால், கடைசி ஆயுதமான சட்ட மறுப்பு இருக்கிறது. அதை வருஷக் கடைசியில் உபயோகிக்கலாம்" என்றார்.

ஜூலை மாதம் 28௳ அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடிற்று. இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த அங்கத்தினர்கள் அவ்வளவு பேரும் வெள்ளைக் கதர் உடையும் வெள்ளைக் கதர்க் குல்லாயும் அணிந்து வந்தார்கள். பெஜவாடா திட்டத்தை ஏறக் குறைய நிறைவேற்றி விட்டோம் என்ற உற்சாகத்துடனும் பெருமிதத்துடனும் அவர்கள் வந்திருந்தார்கள். இதற்குள்ளே ஆங்காங்கு மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தேர்தல்கள் நடந்திருந்தன. வந்திருந்த அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்களும் புதியவர்கள். மிகப் பெரும்பாலும் காந்தி மகாத்மாவிடம் பரிபூரண பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர்கள். ஆகையால் இந்த அ. இ. கா. கமிட்டிக் கூட்டம் பம்பாய்ப் பொது மக்களிடையே பெருங் கிளர்ச்சியையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணியிருந்தது. பம்பாய் வாசிகள் தேசிய வெறி கொண்டிருந்தார்கள். எங்கே நோக்கினாலும் காந்தி குல்லா மயமாகக் காணப்பட்டது. தலைவர்கள் சென்ற இடமெல்லாம் ஜனங்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு நின்று ஜே கோஷம் செய்தார்கள். காந்தி மகாத்மாவைக் கடவுளின் அவதாரம் என்று ஒப்புக் கொள்ளும் அளவுக்குப் பம்பாய்வாசிகள் அவரிடம் பக்தி கொண்டுவிட்டார்கள். காந்திஜியை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப் போல் ஆடை ஆபரணங்கள் அணிவித்துச் சித்திரப் படங்களும் வெளியாகியிருந்தன. இந்தப் படங்கள் பதினாயிரக் கணக்கில் செலவாயின.

இத்தகைய சூழ்நிலையில் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடிக் காந்தி மகாத்மா கூறியபடி அன்னியத் துணி பகிஷ்காரத் தீர்மானத்தை ஒப்புக் கொண்டது. ஆகஸ்டு மாதம் 1௳யிலிருந்து காங்கிரஸ்வாதிகளும் காங்கிரஸ் அநுதாபிகளும் பொது மக்களும் அன்னியத் துணியை அடியோடு பகிஷ்கரிக்க வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கேட்டுக் கொண்டது.

மேற்படி தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றி வைப்பதற்காக மகாத்மா காந்தி ஆகஸ்டு 1௳ பம்பாயில் ஒரு மாபெரும் வேள்வியை நடத்தினார். சௌபாத்தி கடற்கரையில் பம்பாய் நகரமே திரண்டு வந்துவிட்டது போன்ற ஜனசமுத்திரம் கூடியிருந்தது. சுமார் ஐந்து லட்சம் ஜனங்களுக்குக் குறையாது. காங்கிரஸ் தொண்டர்கள் சென்ற இரண்டு தினங்களாகப் பம்பாயில் வீடு வீடாகச் சென்று அன்னியத் துணிகளையெல்லாம் கொண்டு வந்து கடற்கரையில் பிரசங்க மேடைக்குக் கொஞ்ச தூரத்தில் குவித்திருந்தார்கள். காந்தி மகாத்மா அந்தக் கூட்டத்தில் பேசினார்.

"இந்தியாவுக்கு அடிமைத்தனம் அன்னியத் துணி மூலமாகவே வந்தது. பிரிட்டிஷார் துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டுதான் இந்தியாவுக்கு வந்தார்கள். வந்த இடத்தில் அரசியல் ஆதிக்யத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். நம்முடைய அடிமைத்தனத்துக்கு அறிகுறியாயிருப்பது அன்னியத் துணிதான். நம்முடைய அவமானத்தின் சின்னமாயிருப்பதும்

அன்னியத் துணியே. இந்தியாவின் தரித்திரத்துக்குக் காரணம் அன்னியத் துணி. ஆகையால், இங்கே தொண்டர்கள் கொண்டு வந்து குவித்திருக்கும் அன்னியத் துணிக் குவியலில் நான் இப்போது தீ மூட்டப்போகிறேன். இந்தக் கூட்டத்தில் யாரேனும் உடம்பில் விதேசித் துணி அணிந்திருந்தால் அதை நான் மூட்டும் தீயிலே கொண்டு வந்து போட்டு விடுங்கள். இந்த விதேசித் துணிக் குவியல் எரிந்து சாம்பராவது போல் நம்முடைய அடிமைத்தனமும் எரிந்து சாம்பராகட்டும்!''

இவ்விதம் மகாத்மா காந்தி பேசிவிட்டு விதேசித் துணிக் குவியலில் தீக்குச்சியைக் கிழித்து நெருப்பு வைத்தார். பெரிய பிரம்மாண்டமான போர்போலக் கிடந்த அன்னியத் துணிக் குவியல் எரிய ஆரம்பித்தது. கூட்டத்திலிருந்தவர்களில் அநேகர் தாங்கள் அணிந்திருந்த அன்னியத் துணிச் சட்டைகளையும் அன்னிய நாட்டுக் குல்லாய்களையும் கொண்டு வந்து எரிகிற தீயில் போட ஆரம்பித்தார்கள். ஆயிரம் பதினாயிரம் குல்லாக்களும் சட்டைகளும் வேறு ஆடைகளும் வந்து விழுந்தன. 'நீ முந்தி, நான் முந்தி' என்று ஜனங்கள் போட்டி போட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் முண்டிக்கொண்டு வந்து, குல்லாய்களையும் துணிகளையும் நெருப்பிலே போட்டார்கள். சிலர் தாங்கள் வைத்திருந்த குடையின் துணி அன்னியத் துணியினால் ஆனது என்ற காரணத்தினால் குடைகளையும் தீயில் வீசி எறிந்தார்கள்.

''வானை நோக்கிக் கைகள் தூக்கி
வளருதே தீ! தீ! இந்நேரம்!''

என்று பாரதியார் வெள்ளிப் பாட்டில் பாடியிருப்பதை லட்சக் கணக்கான பம்பாய் வாசிகள் பிரத்யட்சமாகக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார்கள். நூற்றைம்பது வருஷ காலமாக இந்தியாவைப் பிடித்திருந்த அன்னிய ஆட்சியும் அடிமைத் தனமும் அந்த விதேசித் துணிக் குவியலைப்போல் பொசுங்கிப் போய்விட்டதாகவே எண்ணிக் குதூகலத்துடன் வீடு திரும்பினார்கள்.

• • •

சென்ற 1920-ம் வருஷம் இதே ஆகஸ்டு 1உ-தான் காந்தி மகாத்மா ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கினார். காந்திஜியின் யுத்த சேவையைப் பாராட்டி பிரிட்டிஷ் சர்க்கார் அவருக்கு அளித்திருந்த 'கெய்ஸரி ஹிண்ட்' என்னும் அபூர்வமான கௌரவப் பதக்கத்தைச் சர்க்காருக்கே திருப்பி அனுப்பி விட்டதாக அன்று பம்பாய் பொதுக் கூட்டத்தில் அறிவித்துவிட்டுத் தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் கிளம்பினார்.

அதேமாதிரி இந்த 1921 ஆகஸ்டு 1உ-யன்று பம்பாயில் அன்னியத் துணிக் குவியலைக் கொளுத்திவிட்டுச் சுற்றுப் பிரயாணம் துவங்கினார். மௌலானா முகம்மதலியையும் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். பீஹார், அஸ்ஸாம், வங்காளம் ஆகிய மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார். காந்தி மகானும் மௌலானா முகம்மதலியும் சென்ற இடமெல்லாம் திரள் திரளாக மக்கள் கூடினார்கள். பிரம்மாண்டமான பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. மலை மலையான அன்னியத் துணிக் குவியல்களும் தீக்கிரையாயின.

இவ்விதம் வடநாட்டில் ஆகஸ்டு மாதம் முழுவதும் செப்டம்பர் முற் பகுதியிலும் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு மகாத்மாவும் மௌலானாவும் சென்னை மாகாணத்துக்குப் பிரயாணம் ஆனார்கள். செப்டம்பர் மாதம் 14உ கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு அவர்கள் வந்து கொண்டிருந்தபோது வழியில் வால்ட்டேர் ஜங்ஷனில் ரயில் நின்றது. மகாத்மாவும் மௌலானாவும் பிரயாணம் செய்யும் காலங்களில் வழியில் ரயில் நிற்கும் இடங்களிலெல்லாம் ஸ்டேஷனுக்கு அருகில் ஜனங்கள் திரண்டு நிற்பது வழக்கம். இருவரும் வண்டியிலிருந்து இறங்கிச் சென்று காத்திருந்த ஜனங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு வந்து ரயிலில் ஏறிக்கொள்வார்கள். அது மாதிரியே வால்ட்டேரில் ரயில் இருபத்தைந்து நிமிஷம் நிற்கும் என்று தெரிந்துகொண்டு தலைவர்கள் வண்டியிலிருந்து இறங்கி வெளியில் காத்திருந்த பொதுக் கூட்டத்தில் பேசுவதற்குச் சென்றார்கள். ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே சில அடி தூரம் சென்றதும் முன்னால் சென்ற மகாத்மா பின்னால் வந்த மௌலானா தம்மை உரத்த சத்தமிட்டு அழைப்பதைக் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தார். இரண்டு வெள்ளைக்காரப் போலீஸ் அதிகாரிகளும் ஐந்தாறு இந்தியப் போலீஸ்காரர்களும் மௌலானா முகம்மதலியைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். மௌலானா தம் கையில் வைத்திருந்த நோட்டீசைப் படித்துக் கொண்டிருப்பதையும் மகாத்மா பார்த்தார். ஆனால் அவர் முழுதும் நோட்டீசைப் படித்து முடிப்பதற்குப் போலீஸ் அதிகாரிகள் விடவில்லை. அதிகாரிகளில் ஒருவர் மௌலானாவின் கையைப் பிடித்து இழுத்தார். காந்தி மகாத்மாவின் அஹிம்சா நெறியில் பயிற்சி பெற்றிருந்த மௌலானாவும் உடனே படிப்பதை நிறுத்திப் போலீஸாரைப் பின்தொடர்ந்து சென்றார்.

போகும்போது காந்திஜியைப் பார்த்துப் புன்னகை புரிந்துவிட்டுக் கையை வீசி ஆட்டிச் சமிக்ஞையினால் 'போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

மௌலானா அவ்விதம் போலீஸாரால் கைப்பற்றப்பட்டுச் சென்றபோது காந்தி மகானுக்குத் தம்முடைய ஆத்மாவிலேயே ஒரு பகுதி தம்மை விட்டுப் பிரிந்து போவது போலிருந்தது.

மகாத்மா காந்திக்கும் அலி சகோதரர்களுக்கும் இந்திய அரசியல் துறையில் ஏற்பட்டிருந்த நட்பு உலக சரித்திரத்தில் ஒரு அற்புத நிகழ்ச்சியாகும். அலி சகோதரர்கள் வீராவேசமே உருக் கொண்டவர்கள். சாந்தம், அஹிம்சை,—இவற்றின் உயர்வைப் பற்றி என்றும் எண்ணாதவர்கள். இஸ்லாமிய சமய நெறியும் முஸ்லிம்களின் சரித்திரப் பண்பும் அவர்களை முற்றும் வேறு விதத்தில் பக்குவப்படுத்தியிருந்தன. ஆனாலும் அந்த அதிசய சகோதரர்கள் மகாத்மாவிடம் அளவில்லாத அன்புகொண்டு அவரை மனமொழி மெய்களினால் பின்பற்றினார்கள். "நான் மௌலானா ஷவுகத் அலியின் சட்டைப் பையிலே இருக்கிறவன்!" என்று காந்தி மகாத்மா ஒரு தடவை சொன்னார். அதாவது மௌலானாவின் அன்புக்கு அவ்வளவு தாம் கட்டுப்பட்டவர் என்று கூறினார். அம்மாதிரியே அலி சகோதரர்களும் மகாத்மாவின் அன்புக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள்.

அந்த வருஷம் ஏப்ரல் மாதத்தில் லார்டு ரெடிங் கவர்னர் ஜெனரல் பதவிக்குப் புதிதாக வந்தார். மகாத்மாவைச் சந்தித்துப் பேச விரும்புவதாகத் தெரிவித்தார். மகாத்மாவும் ரெடிங்கைப் பார்க்க விரைந்து சென்றார். "நீங்கள் அஹிம்சா தர்மத்தைப் போதிக்கிறீர்களே! உங்கள் சிஷ்யர்கள் எல்லாரும் அதை அனுசரிப்பார்களா?" என்று லார்ட் ரெடிங் கேட்டார்.

"என் சிஷ்யர்களுக்கு நான் உத்தரவாதம்!" என்றார் மகாத்மா. "அப்படியானால் இதைப் பாருங்கள்!" என்று சொல்லி லார்ட் ரெடிங் மௌலானா முகம்மதலியின் பிரசங்கம் ஒன்றின் ரிபோர்ட்டை எடுத்துக் காட்டினார். அதில் ஒரு பகுதி மௌலானா முகம்மதலி பலாத்கார முறைகளையும் ஆதரிக்கிறார் என்று அர்த்தம் செய்யக்கூடிய முறையில் இருந்தது. "இந்த மாதிரி தப்பர்த்தம் செய்யக்கூடியவாறு கூட என்னைச் சேர்ந்தவர்கள் பேசக்கூடாதுதான். இதற்குப் பரிகாரம் நான் தேடித் தருகிறேன்!" என்றார் மகாத்மா. அந்தப்படியே மகாத்மா காந்தி மௌலானா முகம்மது அலியை உடனே சந்தித்து "பலாத்கார முறைகளை நீங்கள் ஆதரிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தி விடுங்கள்!" என்றார். மகாத்மாவின் சொல்லுக்கிணங்கி மௌலானா ஒரு அறிக்கை விட்டார். ரெடிங் - காந்தி சந்திப்புப் பற்றிய விவரங்கள் யாருக்கும் அச்சமயம் தெரிந்திருக்கவில்லை. ஆகையால் "மௌலானா முகம்மதலி பயந்துவிட்டார்!" என்றும், "மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்!" என்றும் தேச விரோதிகள் பலர் எக்காளம் கொட்டினார்கள். மௌலானா இதையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மகாத்மாவின் விருப்பத்தின்படி நடக்கவேண்டியது தம் கடமை என்று எண்ணிப் பொறுமையுடனிருந்தார்.

பிறகு லார்டு ரெடிங்கின் சர்க்காரும் "மௌலானா முகம்மதலி மன்னிப்புக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர் பேரில் நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டது" என்று ஓர் அறிக்கை வெளியிட்டனர். இது காந்திஜிக்கே பொறுக்கவில்லை. உடனே காந்திஜி லார்ட் ரெடிங்குக்கு எழுதி அனுமதி பெற்று அவர்களுடைய சந்திப்பின் விவரங்களையும் தாம் மௌலானாவுக்குக் கூறிய புத்திமதியையும் வெளிப்படுத்தினார். மௌலானா முகம்மதலி 'பயந்துபோய் மன்னிப்புக் கேட்கவில்லை' என்பதை அப்போது அனைவரும் அறிந்து கொண்டனர்.

இவ்விதம் தமக்கு நேர்ந்த அபகீர்த்தியைக் கூடப் பொருட்படுத்தாமல் மௌலானா முகம்மதலி மகாத்மாவின் சொல்லை மேற்கொண்டு வந்தார். அப்படிப்பட்டவரைத் தம்மிடமிருந்து பிரித்துக் கைது செய்து போலீஸார் கொண்டுபோனது மகாத்மாவைக் கலங்கச் செய்துவிட்டது. ஆயினும் அந்தக் கலக்கமானது மகாத்மா காரியம் செய்வதைத் தடைசெய்யவில்லை. ஜனக்கூட்டம் கூடியிருந்த இடத்துக்கு மகாத்மா நேரே சென்று மக்களை அமைதியாயிருக்கும்படி கேட்டுக் கொண்டார். திரும்பவும் மௌலானாவைச் சிறைப்படுத்தியிருந்த இடத்துக்கு வந்து அவரைப் பார்த்துப் பேச அனுமதி கேட்டார். அதற்கு அதிகாரிகள் மறுத்து விட்டனர். மௌலானாவுடன் பிரயாணம் செய்த பீகம் முகம்மதலியும் மௌலானாவின் காரியதரிசியும் அவரைச் சந்தித்துப் பேசிவிட்டு அப்போதுதான் வெளியில் வந்தார்கள். அவர்கள் மௌலானாவை 107-வது பிரிவின்படியும் 108-வது பிரிவின்படியும் கைது செய்திருப்பதாக விவரம் தெரிவித்தார்கள்.

கன்னிங்காம் என்ற பெயர் தமிழ்நாட்டில் பலருக்கு நினைவிருக்கும். சென்னையில் பின்னால் உப்பு சத்தியாக்கிரஹம்

நடந்தபோது தடபுடலான அடக்கு முறையைக் கையாண்டு கொடுமைக்குப் பெயர்பெற்ற மனிதர். இவர் அச்சமயம் ஸி. ஐ. டி. போலீஸ் டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலாயிருந்தார். மௌலானா முகம்மதலியைக் கைது செய்யும் கௌரவம் இவருக்குத்தான் கிடைத்தது. விசாகப் பட்டினம் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் மேற்படி கன்னிங்காமுக்கு அனுப்பிய உத்தரவின் விவரம் பின்வருமாறு :—

"முகம்மது அலி அமைதியாகவும் நன்னடக்கையுடனும் இருப்பதற்காக அவரிடம் 107, 108-வது பிரிவுகளின் கீழ் ஜாமீன் கேட்க வேண்டியிருப்பதால், மேற்படி முகம்மது அலியைக் கைதுசெய்து என் முன்னால் கொண்டு வந்து ஒப்புவிக்க வேண்டியது. இதில் தவற வேண்டாம். 14உ செப்டம்பர் 1921.

(ஒப்பம்) ஜெ. ஆர். ஹக்கின்ஸ்,

ஜில்லா மாஜிஸ்ட்ரேட், விசாகப்பட்டினம்."

மேற்படி உத்தரவைப் பற்றித் தெரிந்து கொண்டதும் மகாத்மா காந்தி ரயில் ஏறித் தமது பிரயாணத்தைத் தொடர்ந்தார். ரயிலில் பிரயாணம் செய்து கொண்டே மௌலானா முகம்மதலி கைதியானதைப் பற்றி உருக்கமான கட்டுரை ஒன்று "யங் இந்தியா"ப் பத்திரிகைக்கு எழுதினார். அந்தக் கட்டுரையின் கடைசிப் பகுதி பின்வருமாறு :—

"அலி சகோதரர்களுக்கு நாம் செய்யக் கூடிய மரியாதை என்ன? பயம், சந்தேகம், சோம்பல் ஆகியவற்றை உடனே விட்டொழிப்பதுதான். அலி சகோதரர்களுடைய தைரியம், நம்பிக்கை, அச்சமின்மை, சத்தியம், இடைவிடாச் செயல் திறமை ஆகியவற்றையும் அனைவரும் மேற்கொண்டால் சுயராஜ்யம் அடைவது பற்றிச் சந்தேகம் என்ன? ஜில்லா மாஜிஸ்ட்ரேட் போலீஸ் அதிகாரிக்குப் போட்ட உத்தரவின் கடைசியில் 'இதில் தவற வேண்டாம்!' என்று கண்டிருந்தது. அந்த உத்தியோகஸ்தர் அதை நிறைவேற்றுவதில் தவறவில்லை! மேலேயிருந்து வரும் உத்தரவை நிறைவேற்றுவதில் அநேக ஆங்கில உத்தியோகஸ்தர்கள் தங்கள் உயிரையே அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். இதுதான் இங்கிலீஷ் சாதியின் பெருமை. காங்கிரஸ் இந்தியர்களுக்கு அவ்விதமே 'உத்தரவு' இட்டிருக்கிறது. 'உத்தரவு' 'கட்டளை' 'புத்திமதி'—எப்படி வைத்துக்கொண்டாலும் சரிதான். 'அதில் தவறவேண்டாம்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அவ்விதம் நாம் செய்யப் போகிறோமா? மிச்சமுள்ள சில மாதங்களில் நாம் தீவிரமாக வேலை செய்து, 'காங்கிரஸ் இட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதில் தவறவில்லை' என்று நாம் நிரூபிக்க வேண்டும்."

சிகரெட் நிபுணர்

காந்தி மகான் அன்னியத் துணி பகிஷ்கார இயக்கத்தைத் தீவிரமாக நடத்திக்கொண்டு வந்தபோது சென்னைக்கும் விஜயம் செய்திருந்தார். சென்னைக் கடற்கரையில் பெரிய பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தை யொட்டி விதேசித் துணிக் குவியலைக் கொளுத்துவதற்கும் ஏற்பாடு செய்திருந்தது. விதேசித் துணிகள் ஒரு பெரும் குப்பலாகச் சேர்க்கப் பட்டிருந்தன. மகாத்மா காந்தியே இந்தக் குப்பலுக்கு நெருப்பு வைக்க வேண்டுமென்று சென்னைத் தலைவர்கள் விரும்பினார்கள். அந்தப்படியே மகாத்மா துணிக் குவியலுக்கு அருகில் வந்ததும் பக்கத்திலிருந்தவர் நெருப்புப் பெட்டி ஒன்றைக் கொடுத்தார். மகாத்மா தீக்குச்சியைக் கிழித்து நெருப்பு உண்டாக்க முயன்றார். கடற்கரை யோரமாதலால் காற்று பலமாக அடித்தது. நெருப்புக் குச்சி பற்றவில்லை. பதினைந்து இருபது குச்சி வரையில் மகாத்மா கிழித்தும் துணிக் குவியலில் நெருப்புப் பிடிக்கவில்லை.

அச்சமயம் பக்கத்தில் ஜனாப் ஷாபி முகம்மது நின்றார். (சென்ற முப்பது வருஷமாக இடைவிடாது காங்கிரஸ்வாதியாக இருந்துவரும் தேச பக்தர் ஷாபி முகம்மது அவர்கள்தான்.) "மகாத்மாஜி! இங்கே கொடுங்கள்! நான் பற்றவைத்துப் பார்க்கிறேன்!" என்று சொல்லித் தீப் பெட்டியை வாங்கிக் கொண்டார். முதல் தடவையிலே ஜனாப் ஷாபி வெற்றி பெற்றார். தீக் குச்சியில் தீப் பிடித்தது. மகாத்மா அதை வாங்கி விதேசித் துணிக் குவியலில் வைத்ததும் தீப் பற்றிக் கொண்டது. உடனே மகாத்மா ஜனாப் ஷாபியைப் பார்த்துக் கலகல வென்று சிரித்துக் கொண்டே, "உமக்கு சிகரெட் குடித்து நல்ல பழக்கம் போலிருக்கிறது. அதனாலேதான் இவ்வளவு சாமர்த்தியமாய்த் தீக்குச்சியைப் பற்ற வைத்து விட்டீர்!" என்றார். அதற்குப் பிறகு மகாத்மா காந்தி எப்போது ஜனாப் ஷாபி முகம்மதுவைப் பார்த்தாலும், "என்ன, சிகரெட் நிபுணரே! சௌக்கியமா?" என்று முகமன் கூறுவது வழக்கமாம்!

வட்ட மேஜை

விசாரணை வேண்டும்

உங்கள் அக்டோபர் 9-ம் தேதி 'கல்கி' பத்திரிகையின் தலையங்கத்தைப் படித்தேன். 'குண்டாந்தடி வேண்டாம், கும்பிட்டுக் கேளுங்கள்' என்னும் தலைப்பில் எழுதியிருக்கிறீர்கள். 'சென்ற வருஷத்தில் நடந்த சம்பவம்' என்று ஒரு விஷயத்தை எழுதியிருக்கிறீர்கள். அதைப் பார்த்தவுடன் என்னைப் பற்றியது என்று சந்தேகித்து வருத்தத்துடன் இக் கடிதம் எழுதுகிறேன்.

அதே கட்டுரையில், 'உணவு உற்பத்தி செய்பவன் தன் குடும்பத்திற்கும் அடுத்த வருஷ விவசாயத்திற்கும் வேண்டிய தானியத்தை வைத்துக்கொண்டு பாக்கி தானியத்தை சர்க்கார் அதிகாரிகளிடம் ஒப்புவித்து விடும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்' என்று எழுதப்பட்டிருக்கிறது.

எங்கள் தாலூக்காவில் அதுதான் நடக்கவில்லை. தன் குடும்பத்திற்கு வேண்டிய தானியத்தை விட்டார்கள். எங்கள் பிராந்தியத்தில் விவசாயம் செய்கிறவர்கள் மாத தானியம் சம்பளம் கொடுத்து ஆட்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அடுத்த வருஷச் செலவுக்குத் தானியத்தைக் கொடுக்க அதிகாரிகள் மறுத்தார்கள். ஆனால் ஒரு அதிகாரி, சைனியத்திலிருந்து புதிதாய் வந்தவர், 'நியாயமாய் விடத்தான் வேண்டும்; ஆனால் தானியக் கொள்முதல் விதியில் இல்லையே' என்று திட்டமாய்ச் சொல்லிவிட்டார். 'ஜில்லா சப்ளை ஆபீஸரிடம் சொல்லுங்கள்' என்று சொன்னார். ஜில்லா சப்ளை ஆபீஸர் மந்திரியிடம் அனுப்பினார். மந்திரியிடம் விண்ணப்பம் கொடுத்து ஊர் வந்து சேர்ந்தோம்.

எங்கள் பிராந்தியத்தில் கொள்முதல் நடந்த முறையை இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. தானியம் அடிக்கும் களத்திலிருந்தே அதிகாரிகள் கேட்கும் அளவுக்குத் தானியத்தைக் கொடுத்துவிட வேண்டும். அந்தத் தானியத்தை உண்டாக்குகிறவன் தானியத்தை அப்புறப்படுத்தாமல் இருக்கப் பாதைகள் சந்திக்கும் இடம்தோறும் (சவுக்கி) காவற்சாலைகள் போட்டு விவசாயக் கூலிகள் கொண்டு வருவதையும் தடுத்தார்கள்.

இரண்டு லாரிகளில் போலீஸ்காரர்களைக் கொண்டு வந்து ஒரு அதிகாரி களத்தில் அடித்துக்கொண்டிருந்த தானியத்தை வாரிக் கொண்டு சென்றார். நான் ஊரில் இல்லாத நாள் களத்திலிருந்த என் ஆட்கள் மறுத்துச் சொல்லிப் பார்த்து விட்டுக் கடைசியில் 'நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்' என்று சொல்லிக் களத்தைவிட்டு வந்துவிட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் மற்றும் இரண்டு களங்களில் நடந்தன.

எங்கள் தாலூக்காவில் நாலாயிரம் அங்கத்தினர்கள் கொண்ட 'பொன்னானி தாலூக்கா விவசாயச் சங்கம்' என்று ஒரு ஸ்தாபனம் பல வருஷங்களாக இருக்கிறது. அந்தச் சங்கத்தின் ஆதரவில் முன்னதாகவே ஏற்பாடாகியிருந்த மகாநாடு இச் சம்பவம் நடந்த இரண்டு தினத்துக்குள் நடந்தது. அந்த மகாநாட்டை ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார். அவருக்குத் தெரியும் மகாநாடு எவ்வளவு பரபரப்புடன் நடந்தது என்பது. தாலூக்காவின் விவசாயிகளுக்காகக் கலெக்டரிடம் பேச மகாநாட்டில் ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டது. கமிட்டியார் கலெக்டரிடம் பேசினார்கள்.

மாத தானிய சம்பளம் வாங்கும் ஆட்களுக்குத் தானியம் விட்டுத்தான் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கலெக்டர் ஒத்துக் கொண்டார். அது கொள்முதல் மேனுவலில் (Manual) இருப்பதையும் பார்த்தோம். கலெக்டர் உத்தரவின்மேல் தானியம் விட்டுத்தான் எடுத்தார்கள். கலெக்டர் நியாயம் என்று ஒத்துக்கொண்டு, ஆனால் அவர் செய்ய முடியாத சில விஷயங்களுக்கு உணவு மந்திரியிடம் இரண்டு முறை அது சென்றோம். பத்து மாதங்களுக்குப் பிறகு இப்போதுதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. உணவு உற்பத்தி விஷயங்கள், யுத்தகால விஷயங்கள் எவ்வளவு துரிதமாய்க் கவனிக்கப்படுமோ அம்மாதிரி கவனிக்கப்படும் என்று சொல்லுகிற இந்தக் காலத்தில் இந்த உத்தரவில் கண்ட சில விஷயங்களை மறுபடியும் எழுதிப் பதில் தெரியவேண்டியிருக்கிறது.

என் தானியத்தைப் போலீஸ்காரரைக் கூட்டி வந்து களத்தில் எடுத்துக் கொண்டு போனது சப் கலெக்டரின் எதேச்சாதிகார (High handedness) நடவடிக்கை. அதை விசாரித்து அவர்மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சர்க்காருக்கு எழுதிக்கொண்டேன். மந்திரிகளை இரண்டு முறை பார்த்தேன். பல மாதங்களுக்குப் பிறகு தாங்கள் தகுந்த (Detailed) விசாரணை நடத்தினதாகவும் ஆபீஸர் எதேச்சாதிகாரமாய் (High handed) நடந்துகொள்ளவில்லையென்றும், எடுத்துக்கொண்டு போன தானியத்திற்கு விலையை வாங்கிக்கொள்ளும்படியும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

தகுந்த விசாரணை நடத்தினதாகச் சொன்னார்களே அது என்ன விசாரணை என்று தெரியவில்லை. நான்தானே பிராது கொடுத்தவன்? என்னையே விசாரிக்கவில்லை. எப்படி விசாரணை நடத்தினார்கள் என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா? அதிகாரி நடத்தினது எதேச்சாதிகாரம்தான் என்று நிரூபிப்பதற்குத் தயாராயிருக்கிறேன். அதை சர்க்கார் விசாரிக்கத் தயாராயில்லை. அதிகாரி செய்தது அக்கிரமம் என்று ஜில்லா கலெக்டருக்கு நிரூபித்திருக்கிறேன். நான் 'சிவில் கோர்ட்'டுக்குப் போயிருக்கலாம். ஏமாந்து போனேன். நான் 'டிமாண்டு நோட்டீஸ்' வாங்கிக்கொண்டு பதில் கொடுக்காமல் விட்டு விட்டேன். தாலூக்கா சப்ளை ஆபீஸர், மந்திரிகள் இவர்களிடம் நேரில் சொல்லியும் விண்ணப்பித்துக் கொண்டும் இருக்கிறோமே, அதனால் பதில் கொடுக்க வேண்டியதில்லை என்று இருந்துவிட்டேன்.

உங்கள் தலையங்கத்தில் 'மிராசுதார் தானியத்தை ஏராளமாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு கொள்முதலுக்குக் கொடுக்காமல் இருந்தார்' என்று எழுதப்பட்டு இருக்கிறது. ஏராளமாய்ச் சேர்த்து வைத்துக் கொள்ளவும்

இல்லை, கொள்முதலுக்குக் கொடுக்க மறுக்கவும் இல்லை. களம் முடியவில்லை, தானியத்தை அதிகாரிகளே எடுத்துக்கொண்டு போனார்கள். இதை சர்க்காரிடமிருக்கும் தஸ்தாவேஜுகளே நிரூபிக்கும். நான் எப்போதும் தானியக் கொள் முதலுக்குக் கொடுத்துத்தான் வந்திருக்கிறேன்.

மிராசுதாரிடம் அதிகாரியை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி மந்திரிகள் சொன்னது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. நான் விரும்பவும் இல்லை. நான் வேண்டியது பாரபட்சமில்லாத ஒருவிசாரணை.

எனக்கு ஒருவனுக்கு இந்த நியாயம் கிடைக்க வேண்டும் என்று நான் வாதாடவில்லை. அதிகாரிகளும் எனக்கு ஒருவனுக்குத் தனிப்பட்ட முறையில் சலுகை காட்டத் தயாராயிருந்தார்கள். எங்கள் தாலுக்காவில் உள்ள எல்லா உற்பத்தியாளருக்கும் இந்த உரிமையைக் கேட்டேன். எல்லோரும் ஏகமனதாய் தானியத்தைக் கொடுப்பதற்கு முன் இந்த உரிமையைக் கேட்கிறார்களே, இதுவரையும் நாங்கள் பிடிவாதமாய் இருந்து வந்த போலி கர்வம் போகிறதே, என்றுதான் அதிகாரிகள் இம்மாதிரி செய்தார்கள். தனிப்பட்ட எனக்கு ஓர் அநீதி இழைத்தாலும் போகிறது. எங்கள் தாலுக்கா விவசாயிகள் சவுக்கிகளால் துன்பப்பட்டு அவமானப்பட்டு நின்றது. களத்தில் பனியிலும் வெய்யிலிலும் வாரக்கணக்கில் காத்துக் கொண்டு இருந்தது தொலைந்தது. மற்றும் பல உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. இன்னும் சில உரிமைகளைக் கேட்டுக் கொண்டும் இருக்கிறோம்.

பொள்ளாச்சி
27—10—49 வி. கே. பழனிசாமி

[இந்தக் கடிதம் எழுதியுள்ள அன்பர் கோயமுத்தூர் ஜில்லா போர்டின் புதிய தலைவர். சிறை சென்ற பிரபல தேசபக்தர். இவர் கொடுத்திருக்கும் விவரத்தை நாம் முழுமையும் ஒப்புக்கொள்கிறோம். ஸ்ரீ வி. கே. பழனிசாமிக் கவுண்டர் அவர்களுடைய பெரு முயற்சியால் கோவை ஜில்லா விவசாயிகள் அடைந்துள்ள நன்மையை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.—ஆசிரியர்.]

○●○

★ உற்பத்தியைப் பெருக்குவது எப்படி ?

இந்தத் தடவை குருவை நெல் மகசூல் இருபது முப்பது சதவீதம் குறைந்து விட்டது மிக்க வருத்தமளிக்கும் விஷயமாகும். இது விவசாயிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தை விளைவித்திருக்கிறது.

ரொம்பத் தாமதமாக அறுவடை செய்ய வேண்டி ஏற்பட்டதாலும் தீபாவளிப்பண்டிகை சமீபித்து விட்டதாலும் விவசாயிகளுக்குப் பண முடை அதிகமாகி விட்டது. விவசாயிகளின் கஷ்ட நிலைமையை வியாபாரிகள் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலைக்கு இருபது இருபத்தைந்து சதவிகிதத்துக்குக் குறைவாக அவர்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை விலைக்கு வாங்கினார்கள். மழை காலமும் வந்துவிட்டது. எங்கள் நிலைமை இன்னும் மோசமாகி விடும். நெல் விலை இன்னும் குறைந்தாலும் குறையலாம்.

நெல் விளைச்சலுக்குப் பிண்ணாக்கு நல்ல பலனைக் கொடுக்கக் கூடியது என்பது இப்போது அனுபவத்தில் தெரிகிறது. ஆனால் பிண்ணாக்குக்குக் கண்ட்ரோல் கிடையாது; அதன் விலையையும் சர்க்கார் நிர்ணயிக்கவில்லை. இதனால் 18 ரூபாய்க்குக் குறைவாகப் பிண்ணாக்கு மூட்டை கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. இப்போது நெல் விலைக்கு மேல் இருக்கிறது பிண்ணாக்கு விலை. பிண்ணாக்கை நாங்கள் எப்படி வாங்குவது? உற்பத்தியைப் பெருக்குவதுதான் எப்படி?

எங்களுக்கு நல்ல மகசூல் கிடைக்காததற்குக் காரணம், நாங்கள் நல்ல விதைகளை விதைக்காததுதான் என்று விவசாய இலாக்கா சொல்லிக் கொண்டே இருக்கிறது. இரண்டாவது போகத்துக்கு விவசாய இலாக்கா விதைகளை வாங்கி விதைத்தும் பார்த்தேன். என்ன ஏமாற்றம்! விதை நெல்லில் 75 சதவிகிதம் தான் முளை விட்டது!

சர்க்காரும் தனிப்பட்டவர்களும் பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். அவைகளுக்கு ஏராளமான இரும்பும் எஃகும் உபயோகிக்கப்படுகிறது. வெகு சீக்கிரத்தில் அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதை நாம் நாள்தோறும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் விவசாயிகளாகிய நாங்கள் எங்கள் வண்டிக்கு ஒரு ஜோடி இரும்புப்பட்டை வேண்டியதாக இருந்தால் அதற்காகப் பல வருஷங்கள் காத்துக் கிடக்க வேண்டியதாக இருக்கிறது. கடைசியில் அதை அவர்கள் கொடுக்க ஒப்புக்கொள்ளும்போது அந்தப் பட்டைகளுடன் பத்து ரூபாய்க்கு ஏதாவது விதைகளை வாங்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறார்கள். அந்த விதைகள் உபயோகமற்றவை என்பது நாங்கள் அனுபவபூர்வமாகக் கண்டறிந்த உண்மையாகும். துணிக்கடையில் நல்ல துணி ஏதாவது வேண்டுமென்று கேட்டால் அத்துடன் படு மோசமான ஏதாவது ஒரு துணியையும் விலைக்கு வாங்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறார்களே, அதைப் போலத்தான் இருக்கிறது விவசாய இலாக்காவின் போக்கும்.

விவசாயிகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடுவதால்தான் தங்களுக்கு உணவு கிடைக்கிறது என்பதை ரெவின்யூ இலாக்காவிலும் விவசாய இலாக்காவிலும் வேலை செய்யும் ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சர்க்கார் விவசாயிகளுடன் மனப்பூர்வமாகவும் உற்சாகமாகவும் ஒத்துழைத்தா லொழிய உற்பத்தியைப் பெருக்க முடியாது.

கும்மட்டித்திடல்
21—10—49 கே. எஸ். ராமானுஜம்

○●○

விலகி நில்லுங்கள்!

சென்ற ஒன்றரை வருஷத்துக்கு மேலாக, சர்க்கரை விலைக் கட்டுப்பாடோ அல்லது பங்கீட்டு அமுலோ இல்லாதிருந்தது. அப்போது சர்க்கரை வேண்டியவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. ஒருவித புகாரும் ஏற்படவில்லை. அப்போது விலையும் அதிகமாக ஏறவில்லை. எங்கள் ஊரில் வீசைக்கு ரூ. 1—12—0க்கு மேல் போகவே யில்லை. இப்போது கண்ட்ரோல் விலை ரூ. 1—5—0 ஆக இருக்கிறது. ஆனால் சர்க்கரை கிடைப்பதே யில்லை. கள்ள மார்க்கெட் விலை ரூ. 2—8—0க்கு மேல் இருக்கிறது.

திடீரென்று இளம்பிஞர்கள் சர்க்கார் நிபுணர்கள். எங்கேயோ ஓரிடத்தில் சில அனுக்கள் விலை யேறியதை ஒரு பெரிய காரணமாகக் காட்டி, இந்தியா பூராவும் சர்க்கரையை சர்க்கார் வசமாக்கி, சர்க்கரை வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்துக் கணக்குப் போட்டு, கைவசமிருக்கும் சர்க்கரை இவ்வளவு பேருக்கும் போதாததால் சர்க்கரைப் 'பஞ்சம்' ஏற்பட்டுவிட்டது என்று முடிவு கட்டிப் பத்திரிகைகளிலும் பிரசுரித்து விட்டார்கள். சென்ற ஒன்றரை வருஷ காலமாக மேற்படி பஞ்சம் எங்கே போயிருந்தது? இப்போது திடீரென்று எப்படி முளைத்தது?

இதன் விளைவு என்ன? சென்னையிலிருக்கும் உங்களுக்கு விசேஷக் கணக்கில் தீபாவளிக்குச் சர்க்கரை கிடைத்தது. காஞ்சீபுரத்தில் எங்களுக்குத் தீபாவளி என்று காலை ஓர் அரிசி ரேஷன் கார்டுக்கு ஐந்து பலம் வீதம் சர்க்கரை கொடுக்கப்பட்டது. ஒரு கார்டில் எத்தனை பேர் இருந்தாலும் சரி, கார்டு ஒன்றுக்கு ஐந்து பலம்தான் கணக்கு! இதுவும் கூட்டத்தில் முண்டி யடித்தவர்களுக்குத்தான்! ஒரு நாளைக்கு நான்கு தடவை காப்பி குடிக்கும் பத்து பேரடங்கிய குடும்பத்தினருக்கும் ஐந்து பலம்; காப்பியும் சர்க்கரையும் இல்லாமலே வாழ்க்கை நடத்துவோருக்கும் ஐந்து பலம் என்று பகிர்ந்து கொடுத்தார்கள்.

நீங்கள் கூறுவதுபோல் சர்க்கரை அரிசியைப் போன்ற அத்தியாவசியப் பொருளல்ல. காப்பி குடிக்கும் பழக்க முடையவர்களுக்கே அது மிகவும் அவசியமா யிருக்கிறது. அவர்களை மாத்திரம் கணக்கெடுத்து வேண்டிய அளவு சர்க்கரை கொடுக்க வேண்டும். அப்படிக் கணக்கெடுப்பது இயலாத காரியமென்றால் இதில் சர்க்கார் தலையிடாமலிருப்பதுதான் உத்தமம். நமது சர்க்கார் நிபுணர்கள் தலையிடாமலிருந்தால் இந்த ஒன்றரை வருஷ காலமாகக் கிடைத்ததுபோல் என்றும் சர்க்கரை தாராளமாகக் கிடைக்கும் என்பதே என்போன்ற பலரின் திடமான நம்பிக்கை. இப்போதிருக்கும் ஏற்பாடு சர்க்கரை தேவையில்லாத ஒவ்வொரு கார்டு வைத்திருப்பவரையும் கள்ள மார்க்கெட் விலைக்குக் கார்டின் உபயோகத்தை விற்கத் தூண்டுகிறதே தவிர வேறு பிரயோசனமில்லை. காந்தி மகான் கூறியதொன்றும் பொய்த்ததில்லை. அவர் கூறியபடி, இம்மாதிரி கட்டுப்பாடுகளே லஞ்சத்துக்கும் கள்ள மார்க்கெட்டுக்கும் காரணமாகின்றன. ஆகவே, சர்க்கார் நிபுணர்களே! தயவுசெய்து இந்தக் கட்டுப்பாட்டை நீக்கி நீங்கள் சற்று விலகி நில்லுங்கள்!

காஞ்சீபுரம்
30—10—49 வி. ஸ்ரீநிவாஸன்

○●○

★ பிரகாசம் காருவுக்கு ....!

நான் தெலுங்கு பேசும் தமிழன் என்ற முறையில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஆந்திர கேசரி ஸ்ரீ பிரகாசம்காரு இரண்டு நாட்களுக்கு முன் "ஐயோ! தமிழ் நாட்டில் இருக்கும் தெலுங்கர்கள் கஷ்டப்படுகிறார்களே; அவர்களுக்குத் தெலுங்கு சரியாகக் கூடப் பேசத் தெரியவில்லையே!" என்று கண்ணீர் விட்டிருக்கிறார்.

இதைப் பார்த்ததும் பிரகாசம்காருவை எண்ணிக் கண்ணீர் விட்டுக்கொண்டு எங்கள் தலைவிக் அவர் கை வைக்க ஆரம்பித்து விட்டாரே என்று வருந்தாமல் வேறு என்ன செய்ய முடியும்?

நாங்கள் வீட்டில் தெலுங்கு பேசினாலும் எங்கள் வாழ்க்கை வெள்ளம் தமிழை ஒட்டிக் கொண்டுதான் நடந்து வருகிறது. பள்ளிக்கூடங்களில் தமிழ்தான் படித்து வருகிறோம். கண்போன்ற கணக்கும் தமிழில்தான் எழுதுகிறோம். புருஷன் மனைவிக்கு எழுதினாலும், மனைவி புருஷனுக்கு எழுதினாலும் தமிழில் தான் கடிதங்கள் எழுதுகிறோம்.

நம் மாகாண மாஜி பிரதமர் ஸ்ரீ ரெட்டியார் அவர்களும், தற்சமயம் பிரதமர் ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களும் தமிழ்நாட்டு வோட்டுகளால்தான் பிரதமர்களாக வந்தார்கள்.

இம்மாதிரி ஒவ்வொன்றிலும், தமிழோடும் தமிழர்களோடும் பிணைக்கப்பட்ட நாங்கள் தமிழர்களே. பிரதமர் முதல் எல்லா உத்தியோகமும் பார்க்கிறோம். நாங்கள் எந்த முறையில் கஷ்டப்படுகிறோம்? நாங்கள் சுகமாகவேதான் இருக்கிறோம்.

தமிழர்கள் தமிழ்நாட்டில் சுகமாக இல்லாமல் வேறு எங்கே இருக்க முடியும்?

பிரகாசம்காருவின் செய்கை அன்று ஜின்னா சாயபு இந்தியாவில் இருக்கும் மகம்மதியர்களைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்த்ததுபோல் இருக்கிறது. பிறகு அதே மகம்மதியர்கள் தங்கள் செய்கையைக் குறித்து வருந்தியதுபோல் நாங்கள் அப்படி வருந்தத் தயாராக இல்லை.

பிரகாசம்காரு பேசாமல் வாயை மூடிக் கொண்டிருப்பது உடம்புக்கு ஆரோக்கியம் தரும் என்று நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம்.

இராஜபாளையம்
29—10—49 பி. வி. சுப்பராஜு

○●○

கொள்முதலா? கொள்ளையா?


உணவுப் பெருக்கைப் பற்றியும், கொள்முதலைப் பற்றியும் மணிக் கணக்காக அதிகாரிகள் பேசுகிறார்கள். ஆனால் நெல்லைத் தவிர மற்றெந்த சாமானாவது கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கின்றதா? தானியத்தின் விலையைக் கட்டுப்பாடு செய்த அரசாங்கம் விவசாயிகளுக்குத் தேவையான சாமான்களை நிர்ணயிக்கப்பட்ட விலையில் கிட்டுமாறு வேண்டிய ஏற்பாட்டைச் செய்துள்ளதா? விவசாயத்தில் வயிறு வளர்க்க முடியாதென்பதால்தான் கிராமவாசிகள் அநேகர் நிலங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறுகிறார்கள். தானியங்களின் விலையை அவைகளின் உற்பத்திச் செலவை வைத்துக்கொண்டு நிர்ணயிக்கட்டும். ஒருவிதக் கஷ்டமும் இல்லாமல் உணவுப் பொருள் பெருகும். உணவு தானிய விலையின் பேரில்தான் மற்ற சாமான்களின் விலைகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லும் மந்திரிகள் தற்சமயம் மற்ற சாமான்களின் விலையேற்றத்திற்குப் பதில் சொல்வார்களா? தவிர பூச்சிகளின் சேதத்தினால் கஷ்டப்படும் விவசாயிகள், விதிப்படி தானியம் கொடுக்க முடியாமல் போய் விடுகிறது. ஆனால் அதிகாரிகள் விதைகளையும் அளந்து சென்று விடுகிறார்கள். இதை எந்த அரசாங்கமாவது பொறுக்குமா? எல்லா விஷயங்களையும் ஆலோசித்துப் பார்த்தால் கட்டாயக் கொள்முதல் என்பதைச் சட்டத்தின் அனுமதியில் நடக்கும் கொள்ளை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது!

அரும்பாக்கம்
17—10—49 ஏ. என். கிருஷ்ணன்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "உற்பத்தியைப் பெருக்குவது எப்படி?" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ கே. என். ராமானுஜத்துக்கும், "பிரகாசம் காருவுக்கு ......!" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ பி. வி. சுப்பராஜுவுக்கும் ரூ. 12-8 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

நாகூர்ப் புறா

ஜெயகாந்தன்



கணக்குப் புத்தகங்களின் குவியலுக்கு நடுவில் கணபதியாப் பிள்ளையின் வழுக்கைத் தலை மட்டும் லேசாகத் தென்பட்டது. எப்பொழுதாவது ஒரு முறை அவர் "முருகா!" என்று தம்மை மறந்து அந்தக் கடவுளின் பெயரை உச்சரிப்பார். மறு நிமிஷம், "நாலும் மூணும், ஏழும் ரெண்டும்..." என்று கூட்ட ஆரம்பித்து அந்த எண்களின் பெரு வெள்ளத்தில் அப்படியே மூழ்கி விடுவார்.

என்னமோ அதிசயப் பொருளைக் கண்டவன் போல அவரையும் அவரது கணக்குப் புத்தகங்களையும் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான் சிறுவன் குமரன். அவனுக்கு அந்தக் கணக்கப் பிள்ளையைப் பார்த்தாலே சிரிப்பு வந்தது. சின்னஞ் சிறு கைகளைத் தட்டிக் கொண்டே அவரிடம் குதித்தோடி வந்தான்.

"முருகா!" என்று வாய் முனக, வழுக்கைத் தலை கொஞ்சம் மேலெழுந்தது. எதிரிலிருந்த குமரனைக் கண்டதும், கல்லால் செதுக்கப்பட்டது போலிருந்த அவர் முகத்தில்கூடக் கொஞ்சம் ஜீவகளை தட்டியது.

"என்ன தம்பி?" என்றார் குழைந்து கொண்டே. அவர் கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தன. குழந்தையுடன் அவர் கொஞ்சுவதை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயம் அவருக்கு. ஆமாம், கஜேந்திர முதலியார் வீட்டுக் கணக்கப் பிள்ளைக்கு அந்த எஜமான் குழந்தையோடு விளையாட உரிமை கிடையாது. அவர் அந்தஸ்துக்கு மேற்பட்ட காரியம் அது. இதை எத்தனையோ தரம் கஜேந்திர முதலியாரின் தர்மபத்தினி அவருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறாள். ஆகவே அவர் ஏதோ செய்யத்தகாத குற்றத்தைச் செய்து விட்டவர் போல விழித்து விட்டு, யாரும் பக்கத்திலில்லாத காரணத்தால் மனதைத் திடப்படுத்திக்கொண்டு ஒரு பெருமூச்சும் விட்டார். வழக்கம்போல கணபதியாப் பிள்ளையின் வாய் "முருகா" என்று கூவி யழைத்தது.

வியப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்த குமரன் திடீரென்று கேட்டான், "எங்கப்பா உங்களைச் சும்மா கூப்பிடறாப் போல, நீங்களும் யாரையோ 'முருகா, முருகா!'ன்னு கூப்பிடு றீங்களே! ஆனா நீங்க அப்பா கிட்ட ஓடியாற மாதிரிக் கையைக் கட்டிக்கிட்டு அந்த முருகன் மட்டும் ஏன் ஒரு நாள்கூட வரமாட்டேங்கிறான்? அவனுக்குக் காது கேட்காதா?"

கணபதியாப் பிள்ளை அசந்துபோய் விட்டார். அவர் இந்தமாதிரி விஷயங்களையெல்லாம் எதிர்பார்க்கவில்லை. மெல்ல மழுப்பினார். "இல்லே, தம்பி! முருகன் சாமி. அவன் நம்ம கூப்பிட்டா வரவே மாட்டான்!" என்றார்.

குமரன் விடவில்லை. "சாமின்னா என்ன? நம்ம மனசாலே சாமியை நெனைச்சுக் கும்பிட்டா அவரு வருவாருன்னு அம்மா சொன்னாங்களே! நீங்க கூப்பிடறப்போ மட்டும் வரமாட்டாரா?" என்று கேட்டான்.

கணபதியாப் பிள்ளை வழுக்கைத் தலையைத் தடவினார். குமரன் சொல்வதெல்லாம் அவர் சிந்தனைக்கு எட்டாத பெரிய விஷயங்கள்.

★

அன்றைக்கும் அப்படித்தான் கணபதியாப் பிள்ளை கணக்கில் மூழ்கி யிருந்தார். வெகு நேரத்துக்குப் பிறகு 'முருக'னைக் கூப்பிட்டபடியே அவர் தலை நிமிர்ந்தபோது, வாசற்படியருகே குமரன் ஒரு புறாவுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். சட்டென்று எழுந்து குமரனிடம் வந்து, "தம்பி, அந்தப் புறாவை விட்டுடு. அது நாகூர்ப் புறா. முஸ்லிம்கள் கோவிலில் இருப்பது. நீ அதைத் தொடக் கூடாது. தெரியுமா?" என்றார்.

கணபதியாப் பிள்ளையின் வார்த்தைகளைக் கேட்டுக் குமரன் பயந்து போய் விடவில்லை. அவன் சிரித்தான். "அட, புறாவிலே கூட இந்து, முஸ்லிம் என்று

வித்தியாசம் இருக்குதா? கேத்து அப்பா கிட்ட யாரோ ஒருத்தர் வந்து பேசிக் கிட்டிருந்தாரு. அவரு இந்து முஸ்லிம் எல்லாம் ஒன்றுதான்னு சொன்னாரே! அப்போ, இந்தப் புறா மட்டும் என்ன வாம்? எல்லாம் ஒன்றுதான். இது கூட உங்களுக்குத் தெரியலையே, ஐயய்ய!'' என்று சொன்னான்.

பிள்ளையின் கைகள் வழுக்கைத் தலையைத் தடவிப் பார்த்தன. அவரும் எத்தனையோ மேடைப் பேச்சுகளைக் கேட்டிருக்கிறார். தினந்தோறும் பத்திரிகைகளில் வரும் 'இந்து - முஸ்லிம்' பிரச்னைகளைப் பற்றியும் அவருக்குத் தெரியும். இருந்தாலும் குழந்தையின் வாயிலே வந்த சொற்கள் அவரைக் கொஞ்சம் மலைக்கத்தான் செய்துவிட்டன.

நாகப்பட்டினத்தின் கட்டிடங்களில் சிறிதளவு இடமிருந்தாலும் அங்கெல்லாம் வந்து குடியேறிவிடும் நாகூர்ப் புறாக்கள். தர்காவில் வசிக்கும் ஆயிரக் கணக்கான புறாக்களுக்கு நடுவே இடமில்லாதவை இப்படிச் சுற்றுப் புறமெல்லாம் அடைக்கலம் புகுந்துவிடும். அவைகளை யாரும் ஒன்றும் செய்யமாட்டார்கள். அன்பினால் அவற்றை விட்டு வைப்பவர்கள் சிலர்; ஏதேனும் தீங்கு வந்துவிடுமோ என்ற பயத்தோடு விலகியிருப்பவர்கள் சிலர்; இரண்டாவது கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர்தான் கணபதியாப் பிள்ளை. குருட்டு நம்பிக்கையை வேரூன்ற விட்டு வளர்த்துவந்த சென்ற தலைமுறையைச் சேர்ந்தவர் அவர்.

★

சுணக்கப் பிள்ளையின் பயத்துக்கு ஏற்றாற்போல் சிறுவன் குமாரனுக்கு மறுநாளே ஜுரம் வந்துவிட்டது. ஒன்றும் பிரமாதமில்லை; ஆனால் கஜேந்திர முதலியார் வீட்டில் அது பிரமாத மாக்கப்பட்டது. டாக்டர் பின் டாக்டர் வந்தார். எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு, நம்பிக்கை யெல்லாம் போய் விட்ட பிறகு, வந்து நின்றவன் குமாரன். அம்மாளுக்கு நாற்பதாம் வயது எட்டிப் பார்க்கும் போது பிறந்த குழந்தை அது. செல்வத்திற்குப் பஞ்சமில்லை. ஆகவே செல்லத்துக்கும் குறைவில்லை. அப்படிப்பட்ட குழந்தைக்கு ஜுரம் என்றால்......!

ஓடியலைந்து மருந்து வாங்கிக் கொண்டு வந்து நின்றார் கணபதியாப் பிள்ளை. அவர் மனசு குழம்பிக் கிடந்தது. அங்கே வந்த வீட்டுக்கார அம்மாள் மருந்தை வாங்கிக் கொண்டு, ''மருந்து என்ன விலை?'' என்று எரிச்சலுடன் கேட்டாள்.

பிள்ளை, ''ரெண்டேகால் ரூபாயிங்க!'' என்றார் பயந்தபடியே.

''ரெண்டேகால் ரூபாயா! இவ்வளவு விலை சொல்றீரே!'' என்று சீறி விழுந்தாள் எஜமானி.

கணபதியாப் பிள்ளை திடுக்கிட்டார். அவரா விலை சொன்னார்? கடைக்காரனைக் கேட்கவேண்டிய கேள்வியை அவரிடம் கேட்டால் அவர் என்ன செய்வார்? தயங்கியபடியே, ''நான்...நான்...வந்து ...கடைக்காரன் சொன்னான்...ரெண்டேகால் ரூபாயின்னு...'' என்று இழுத்தார்.

அம்மாள், ''ஆமாம், கடைக்காரன் சொல்வான் ஆயிரம் விலை! ஒரு கடைக்கு நாலு கடையாகப் பார்த்து வாங்க வேண்டாமோ?'' என்று ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு உள்ளே போனாள்.

கணபதியாப் பிள்ளை வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே வெளியே வந்தார். ''முருகா!'' என்று கதறியது அவர் வாய். மனம் எண்ணாததெல்லாம் எண்ணிப் புழுங்கியது. உள்ளே போய்க் குழந்தை குமாரனைப் பார்த்தால் தேவலாம் போல இருந்தது. மெதுவாக உள்ளே வந்தார். குழந்தை குமாரனுக்குப் பக்கத்தில் கஜேந்திர முதலியார் மிகுந்த கவலையுடன் உட்கார்ந்திருந்தார்.



கணக்கப் பிள்ளை தட்டுத் தடுமாறிக் கொண்டே சொன்னார்:

"குழந்தை நாகூர்ப் புறாவை நேத்துத் தொட்டுச்சிங்க. அதனாலேதான் ஜுரம் வந்திருக்கு. விபூதி மந்திரிச்சிப் போட்டா எல்லாம் சரியாப் போயிடும்......"

இதைச் சொல்வதற்குள் அவர் உடலெல்லாம் வியர்த்து விட்டது.

★

டாக்டர் கொடுத்த மருந்தினாலோ, விபூதியின் மகிமையினாலோ, அல்லது வேறெந்த காரணத்தாலோ ஜுரம் அடுத்த நாளே தணிந்து விட்டது. குழந்தை வழக்கம்போல் சிரித்து விளையாட ஆரம்பித்தான். கணக்கப் பிள்ளையைக் கண்டதும், "வாசல்லே புறா இருக்கா?" என்று அவன் ஆவலோடு கேட்டான்.

பிள்ளை தயங்கியபடி சொன்னார்: "புறாவைத் தொடக் கூடாதுன்னு நான் சொன்னேன்; நீ கேட்கமாட்டேன்னு சொன்னாய். இப்போ ஜுரம் வந்தது அதனாலேதான். இனிமே அந்தப் புறா கிட்டே நீ போகவே போகாதே!"

குமரன் 'கலகல'வென்று நகைத்தான். "உங்களுக்குத் தெரியாது. அந்தப் புறாவாலேதான் என் ஜுரம் போச்சு. நேத்து ராத்திரி நான் தூங்கறப்போ ஒரு கனாக் கண்டேன். நீங்க என் படுக்கையண்டை வந்து, 'முருகா, குழந்தையைக் காப்பாத்துடாப்பா!'ன்னு சொல்லி விபூதி எடுத்து என்மேலே போட்டீங்க. அந்தச் சமயத்திலே இந்தப் புறா வந்துச்சு. நான் ஜுரமா யிருக்கிறதைப் பாத்ததும் அது பறந்துபோய் அவங்க சாமிகிட்டே, 'அந்தக் குழந்தையைக் காப்பாத்துங்கோ'ன்னு கேட்டுது. நம்ம சாமிகிட்டே நாம் வேண்டிகிட்டோம்; அவங்க சாமிகிட்டே அது வேண்டிக்கிச்சு. அதான் ஜுரம் உடனே போயிடுச்சு!" என்று உணர்ச்சி ததும்பச் சொன்னான்.

கணபதியாப் பிள்ளை வழுக்கைத் தலையை ஒருதரம் தடவிப் பார்த்தார். "என்னமோ, இந்தக் காலத்துப் பிள்ளைகளே ஒரு மாதிரியா யிருக்கு. எனக்கு ஒன்றும் புரியல்லே!" என்று வியப்புடன் சொல்லிக் கொண்டே வெளியே போனார்.

முளைத்து வரும் புதிய தலைமுறையைப் புரிந்து கொள்வது கஷ்டம்தானே?

காலக்ஷேபம்

நண்பர்:—என்ன ஸார், டாக்டரிடம் போயிருந்தீரா? டாக்டர் என்ன சொன்னார்?

மற்றவர்:—நான் புகை பிடிப்பதை நிறுத்தச் சொன்னார்.

நண்பர்:—நீர் என்ன செய்தீர்?

மற்றவர்:—நான் நிறுத்திவிட்டேன்.

நண்பர்:—பேஷ்! நீண்ட நாளாகப் பழகினதை எப்படி ஐயா, நிறுத்தினீர்?

மற்றவர்:—நான் அதை நிறுத்தவில்லை; டாக்டரிடம் போவதை நிறுத்தி விட்டேன்!

★

"என்ன ஸார், இது? கட்டிலைப் பாதியாக வெட்டியிருக்கிறீர்கள்?......சுவரிலே படங்களையெல்லாம் பாதியாக அறுத்து மாட்டியிருக்கிறீர்கள்? ஏன் அப்படி?"

"ஓஹோ! அதுவா? அது வேறொன்றுமில்லை. நேற்றைக்குத்தான் நானும் என் அண்ணனும் பாகம் பிரித்துக் கொண்டோம். அதனால்தான் அப்படி இருக்கிறது!"

டாக்டர்:—இந்த மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டால் நன்றாய்ப் படிக்கலாம்.

மற்றவர்:—ஆச்சரியமாயிருக்கிறதே!

டாக்டர்:—ஆமாம், அதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது?

மற்றவர்:—எனக்குப் படிக்கத் தெரியாது. அதனால்தான் ஆச்சரியப்படுகிறேன்!

★

ராமு:— இன்றைக்கு ஐந்து ரூபாய் லாபம் எனக்கு!


கிட்டு:—அப்படியா? எப்படிக் கிடைத்தது?

ராமு:—இன்றைக்கு ராஜு என்னிடம் வந்து பதினைந்து ரூபாய் கடன் கேட்டான். நான் அவனுக்குப் பத்து ரூபாய்தான் கொடுத்தேன். ஐந்து ரூபாய் லாபமில்லையா?

★

"இந்த வெண்டைக்காய் என்ன விலை?"

"நீங்களாகப் பொறுக்கி எடுத்தீங்களானால் அணாவுக்கு எட்டு எடுங்க...... என்னைப் பொறுக்கச் சொன்னீங்கன்னா, பன்னிரண்டு போடறேன்!"


இந்த அடையாளத்தை
கவனியுங்கள் . . .
இன்று மிகவும்
நேர்த்தியான
சைகிள்களில்
உலகிலேயே ஏராளமாக
உற்பத்தி செய்யப்படுவது
தி ஹெர்குலஸ் சைக்கிள் அன்
மோட்டார் கம்பெனி லிமிடெட்,
பர்மிங்ஹாம், இங்கிலாந்து
'ஹெர்குலஸ்' மூன்று வேக
ஹப்பை எவ்வித மாடல்களி
லும் பொருத்தலாம். அல்லது
தனியாகவும் கிடைக்கும்.
ஹெர்குலஸ்
சைகிள்கள்



ஏழாம் அத்தியாயம்

பீஜகுப்தனின் கவலை

சித்திரலேகாவுக்குக் குமாரகிரியின் பதில் திருப்தி அளிக்கவில்லை. ஏன், குமாரகிரி கூடத் தன் பதிலில் திருப்தி அடையவில்லை. ஆயினும் குமாரகிரியின் களை மிகுந்த கம்பீரத் தோற்றமும் பார்த்த அறிவும் சித்திரலேகாவின் இதயத்திலே இடம் பெற்றன. வேடிக்கை என்னவென்றால் நடன ராணியின் நுண்ணறிவிலே மயங்கி யோகி தன் மதியைப் பறி கொடுத்தான். யோகியின் எழிலுருவத்திலே மயங்கி நடனராணி தன் மதியைப் பறி கொடுத்தாள். ஏது எப்படிப் போனால் என்ன? ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இடம் பெற்றுவிட்டனர். அறிவு அழகை மயக்கியது; அழகு அறிவை மயக்கியது. இரு உள்ளங்களிலும் உணர்ச்சி கிளர்ச்சி கொண்டெழுந்தது. இரு உருவங்களும் ஒன்று கலந்தன. இவற்றையெல்லாம் தன் கண்களால் நேரிலேயே பார்த்துக் கொண்டிருந்த பீஜகுப்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. சித்திரலேகாவுக்கும் குமாரகிரிக்கும் இடையே நடந்த சம்பாஷணை பீஜகுப்தனின் இதயத்திலே புயலை எழுப்பி அமைதியை இழக்கும்படி செய்துவிட்டது; குழப்பத்தை உண்டு பண்ணி விட்டது. சித்தாந்தங்கள் காரணமாக அவனுடைய உள்ளத்திலே குழப்பம் அதிகரிக்கவில்லை; அவனுடைய மன அமைதி குலைந்ததற்கு வேறு ஏதோ ஒரு காரணம் இருந்தது. ஆனால் எவ்வளவோ முயன்றும் அவனால் அந்தக் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சித்திரலேகாவின் உள்ளத்திலே குமாரகிரி இடம் பெறுவது போன்ற உணர்ச்சி பீஜகுப்தனின் மனத் திரையிலே நிழல் உருவத்தைப் போல எழுந்து மறைந்தது. ஆயினும் அவனால் அதை நம்ப முடியவில்லை.

"என் சிஷ்யன் விசாலதேவன் இன்று இரவு என் குடிசையிலேயே தங்குவான். அவனுடைய குடிசை காலியாகத்தானிருக்கிறது; அதிதிகள் அங்கே சென்று சௌகரியமாகத் தங்கலாம்" என்றான் குமாரகிரி.

குமாரகிரி அவ்வாறு சொன்னதுதான் தாமதம்; பீஜகுப்தன் எழுந்தான். சித்திரலேகாவும் அவனுடன் எழுந்தாள். சித்திரலேகா புறப்பட்டவாறே, "யோகி! உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தவம் செய்வதானது வாழ்க்கையிலே மாபெரும் தவறு ஆகும். தவத்தின் உண்மையான நோக்கம் என்ன, தெரியுமா? ஆத்மாவைப் பல அல்லல்களுக்கு ஆளாக்கி அழிப்பதுதான். சரி, அது எப்படியாவது போகட்டும். தங்கள் பாதாரவிந்தங்களுக்கு என்னுடைய வணக்கங்கள்!" என்றாள். அடுத்த கணம் சிரித்துக் கொண்டே அவள் குடிசைக்கு வெளியே சென்று விட்டாள்.

சித்திரலேகா வெளியே சென்றதும் குமாரகிரி சிரித்தான். "ஆத்மாவைப் பல அல்லல்களுக்கு ஆளாக்கி அழிப்பது தான் தவம் என்றாளே, அது ரொம்ப நியாயமான வார்த்தை! பிரும்மமும் மாயையும்

கவர்ந்திருக்கும் நிலையைத்தான் ஆத்மா என்கிறோம். ஆத்மா அழிந்தவுடன்—அதாவது, மாயையின் விகாரங்கள் மறைந்தவுடன்—சத், சித், ஆனந்த ஸ்வரூபமான பரம்பொருள் ஒன்றேதான் எஞ்சி நிற்கின்றது. ஆனால் கடனாளி! உன்னிடம் அநுபவம் இருக்குமாயின், உன்னுடைய சூழ்நிலை மாறுபட்டதாக இருக்குமாயின், ஒருவேளை நீயும் இந்த ரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியும். உனக்குப் போதுமான ஞானம் இருக்கிறது. ஆனால் அந்த அறிவை நல்வழியில் இட்டுச் செல்லும் நல்ல வழிகாட்டி இல்லாத குறை ஒரு பெரிய குறைதான். ஆகவே உன்னுடைய நிலையை நினைத்துப் பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் வருத்தமாகத்தானிருக்கிறது; உன்மேல் என்னையும் அறியாமல் அநுதாபம் ஏற்படத்தான் செய்கிறது" என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பீஜகுப்தனையும் சித்திரலேகாவையும் தன் குடிசைவரை கொண்டுபோய் விட்டுவிட்டு விசாலதேவன் குருவின் குடிசைக்குத் திரும்பி வந்தான். பீஜகுப்தன் படுக்கப் போவதற்கு முன்பாக, "சித்திரலேகா!" என்று அவளை அன்புடன் அழைத்தான்.

"என்?" என்று மெதுவான குரலில் கேட்டாள் சித்திரலேகா.

பீஜகுப்தன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, "ஏனோ தெரியவில்லை, சித்திரலேகா! என் உள்ளத்தை ஒருவிதச் சுமை அழுத்துகிறது. துயரம் என்னும் மேகங்கள் நம்மிருவருடைய வாழ்க்கையையும் சுற்றிச் சூழ்ந்திருப்பது போன்ற உணர்ச்சி எழுந்து உள்ளத்தை மிகவும் வேதனைக்குள்ளாக்குகிறது. குமாரகிரி யோகி என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அவனிடம் பிறரைக் கவரக்கூடிய மின்னுவசிய சக்தியும் இருக்கக்கூடும்" என்றான்.

பீஜகுப்தனின் வார்த்தைகளைக் கேட்டதும் சித்திரலேகாவின் முகம் போன போக்கைச் சொல்லி முடியாது. ஆயினும் அவள் தன்னை எப்படியோ சமாளித்துக் கொண்டு, "குமாரகிரி யோகி மட்டும் அல்ல; மூழு மூடனும் கூட.



அவனுக்கு ஆத்மா என்று ஒன்று இருந்தால் தானே? அது மரித்துத்தான் வெகு காலமாகி விட்டதே!" என்றாள்.


பீஜகுப்தனை மட்டும் அல்ல; தன்னைத் தானேகூட ஏமாற்றிக்கொள்ள முயன்றாள் சித்திரலேகா. அவள் மறுபடியும், "குமாரகிரி ஜனசஞ்சாரமற்ற கானகத்திலே வசிப்பவன்; நாம் இருவரும் கர்மக்ஷேத்திரம் என்னும் அரங்க மேடையிலே நடிக்கும் பிரதான பாத்திரங்கள். குமாரகிரியோ ஆசைகளை அடக்கியவன். ஆனால் நாம் இருவருமோ ஆசைகள் மீது அபார நம்பிக்கை வைத்திருக்கிறோம். கற்பனைச் சூன்யத்திலே வசித்துக் காலம் கழிப்பதுதான் குமாரகிரியின் குறிக்கோள். இன்ப வெறியிலே வசித்து இந்த உலகத்தை மறந்து வாழ்வதல்லவா நம் இருவருடைய லட்சியமும்! அப்படியிருக்கும்பொழுது நமக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? இந்த உலகத்திலே நம் இருவருடைய வாழ்க்கையிலும் குறுக்கிட்டுக் குந்தகம் விளைவிக்கக் கூடியவர்கள் இப்பொழுது யாருமே கிடையாது; இனி உண்டாகப் போவதும் இல்லை!" என்றாள்.

பீஜகுப்தனின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. "கடவுள் அவ்வாறே செய்வாராக!" என்றான் அவன்.

சித்திரலேகா பீஜகுப்தனை ஏமாற்றி விட்டாள். ஆனால் அவளால் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள முடியவில்லை. "என்ன இருந்தாலும் குமாரகிரி சுத்த புருஷன்தான்!" என்று அவள் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

* * *

சக்கரவர்த்தி சந்திரகுப்த மௌரியரின் ஆகாயத்தை அளாவும் அரண்மனையிலே, வேதோக்தப் பிரகாரம் வெகு விமரிசையாக மாபெரும் யக்ஞம் ஒன்று நடந்தது. அந்த யக்ஞத்திலே ஆஹுதி செய்யப்பட்ட அக்னியின் ஜ்வாலையிலிருந்து எழும்பிய புகையானது மேக மண்டலம் வரை சென்று தன் சுகந்தத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. சாம்ராஜ்யத்தின் பல பாகங்களுக்கும் யக்ஞத்துக்கு விஜயம் செய்யுமாறு



அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டிருந்தன. பற்பல பிரதேசங்களிலிருந்து அரசர்களும் ராஜாதி ராஜர்களும் மன்னாதி மன்னர்களும் பிரபலஸ்தர்களும் யாகத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

ரத்தினங்கள் பதித்த ஜாஜ்வல்யமான தங்கச் சிம்மாசனத்திலே கிழக்குத் திக்கை நோக்கிச் சக்கரவர்த்தி சந்திரகுப்த மௌரியர் மிகவும் கம்பீரமாக வீற்றிருந்தார். மகோன்னதமான மகத சாம்ராஜ்யத்தின் சிற்றரசர்கள் தங்கள் தங்களுக்கென்று போடப்பட்டிருந்த ஆசனங்களிலே, சக்கரவர்த்தியின் வலது புறத்திலே, தங்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்றவாறு ஆடம்பரத்துடன் அமர்ந்திருந்தனர். சக்கரவர்த்தியின் இடது புறத்திலே அரசாங்கத்தின் மந்திரி பிரதானிகள் உட்கார்ந்திருந்தனர். சக்கரவர்த்திக்கு நேர் எதிர்த்தாற்போலிருந்த வரிசையிலே கர்ம காண்டத்தைக் கரைத்துக் குடித்திருந்த பிராமணோத்தமர்களும் மாபெருந் தபஸ்விகளும் உட்கார்ந்திருந்தனர்.

வருஷா வருஷம் மகா யக்ஞம் முடிந்த பின் தர்சன சாஸ்திரத்தைப் பற்றித் தர்க்கம் செய்வதற்காகச் சபை கூடுவது வழக்கம். அந்தச் சம்பிரதாயத்தை யொட்டித்தான் அன்று சபை கூடியிருந்தது. சந்திரகுப்த மகாராஜா சிரித்த முகத்துடன் தம் பிரதான மந்திரியான சாணக்கியரைப் பார்த்து, “நீதி முறை தவறாத என் மந்திரியே! தங்களுடைய நீதி சாஸ்திரம் அநேக இடங்களில் தார்மிகக் கொள்கைகளைப் புறக்கணித்து அவமதிப்பது போலக் காணப்படுகிறதே! இவ்வாறு அவ்விரண்டுக்குமிடையே வித்தியாசம் ஏற்படக் காரணம் என்ன? ‘நீதி சாஸ்திரம் தர்ம சாஸ்திரத்துக்கு உட்பட்டதுதானா, அல்லது உட்படாததா?’’ என்பதைத் தயவு செய்து தெளிவுபடுத்த வேண்டும்’’ என்றார்.

சாணக்கியர் எழுந்து தமக்கு எதிரே வீற்றிருந்த கற்றோர்களுக்குத் தலை வணங்கினார். பிறகு சக்கரவர்த்திக்கு வணக்கம் தெரிவித்தார். அதன் பின்னர் தம் ஆசனத்திலே அமர்ந்து அவர் சொல்லலானார்:—

“சக்கரவர்த்தி கேட்ட கேள்வி நியாயமான கேள்வி. என்னுடைய நீதி சாஸ்திரத்திலே, பற்பல இடங்களில் பல்லாண்டுகளாக வழங்கிவரும் தர்ம சாஸ்திரத்தின் கோட்பாடுகளுக்கு முரணான பல கொள்கைகள் காணப்படுகின்றன என்பது உண்

மையே. நானும் அதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் அதற்கு முன்பாக ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தர்மம் என்பது சமூகத்தினால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை நாம் மறக்கக்கூடாது. சமூகத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட தர்மம்தான் நீதி சாஸ்திரத்தைச் சிருஷ்டித்திருக்கிறது. ஆனால் இப்பொழுதோ அதற்கு நேர் மாருக நீதி சாஸ்திரம் தர்ம சாஸ்திரத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்கி விட்டது. சமூகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு, சமூகத்தின் மூலமாக ஏற்படுத்தப்பட்ட வாழ் முறைகளையும் நியமங்களையும்தான் நாம் நீதி சாஸ்திரம் என்று பெயர் சொல்லி அழைக்கிறோம். இந்த நீதி சாஸ்திரத்துக்குத் தர்க்கம்தான் ஆதாரம்; தர்மத்துக்கு ஆதாரம் நம்பிக்கை. நம்பிக்கையென்னும் அந்தக் கட்டிலே கட்டுண்டு ஒவ்வொரு மனிதனும் வாழ் முறைகளை மீறாமல் அவற்றைச் சரிவர அனுஷ்டித்தால்தான் சமூகத்துக்கு நன்மை உண்டாகும். சிற்சில சமயங்களில் நிலைமை இதற்கு நேர்மாருகவும் ஆகி விடுவது உண்டு. எதை நாம் தர்மம் என்று எண்ணி அத்தனை நாளும் அனுஷ்டித்து வந்தோமோ, எது அத்தனை நாளும் சமூகத்துக்கு நன்மை யளிப்பதாக இருந்து வந்ததோ, அதுவே காலக்கிரமத்தில் சமூகத்துக்குத் தீமை பயப்பதாகவும் மாறிவிடக் கூடும். அப்பொழுது சமூகத்தின் நன்மையை உத்தேசித்து அதற்கு நேர் எதிரிடையாக நடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறு செய்வதனால் தர்மத்தின் உருவமே சிறுகச் சிறுக மாறிப் புது உருவம் பெற்று விடுவதும் உண்டு.”

சாணக்கியர் தம் பேச்சை முடித்ததும் சபை யெங்கும் ஒரே நிச்சப்தம் நிலவியது. சந்திரகுப்த சக்ரவர்த்தி தம் பார்வையிலே கர்வம் ததும்ப மந்திரி சாணக்கியரை ஒரு முறை பார்த்தார். பிறகு தமக்கு எதிரே கூடியிருந்த கற்றோர்களையும் ஒரு முறை நோக்கினார். மந்திரி சொன்ன விஷயமோ மாபெரும் விஷயம். மந்திரியின் ஒவ்வொரு சொற்களிலும் பொருள் புதைந்திருந்தது; சாரம் மிகுந்திருந்தது. அநாதிகாலம் தொட்டு அனுஷ்டானத்தில் இருந்துவரும் கொள்கைகளுக்கு நேர்மாருக இருந்தபொழுதிலும், மந்திரியின் பேச்சு புதிதாக இருந்தது. ‘இதற்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள்?’ என்று மண்டபத்திலே கூடியிருந்த மக்கள் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தனர்.


கற்றோர்கள் குழுமியிருந்த அந்தக் கூட்டத்தின் மத்தியில் வாலிபப் பருவத்தினனான ஒரு யோகி எழுந்து மிகவும் அடக்கமான குரலில், “மகாராஜா! கடவுள் மனிதனைப் படைத்தார். மனிதன் சமூகத்தைச் சிருஷ்டித்தான். தர்மம் என்பது ஈசுவரனின் இக லோகத்து உருவம். இக லோகத்திலே ஈசுவரன் தர்மத்தின் உருவத்திலேதான் நடமாடுகிறார். மனிதனையும் ஈசுவரனையும் ஒன்று சேர்ப்பதற்குத் தர்மம்தான் பிரதானமான சாதனம். தர்மத்தைப் புறக்கணிப்பதோ அல்லது அவமதிப்பதோ ஈசுவரனையே புறக்கணிப்பதும் அவமதிப்பதும் ஆகும்; சத்திய நெறியிலிருந்து நழுவுவதாக ஆகும். சத்தியம் என்பது ஒன்றுதான். தர்மம் என்பது அதே சத்தியத்தின் மாற்று உருவம். நீதி சாஸ்திரமானது தர்ம சாஸ்திரத்தின் கோட்பாடுகளுக்கு நேர் விரோதமாக இருக்குமாயின், அதை நீதி சாஸ்திரம் என்று அழைப்பது தவறு; அதை அநீதி சாஸ்திரம் என்றுதான் அழைக்க வேண்டும். உசிதம் எது, அநுசிதம் எது? நியாயம் எது? அநியாயம் எது?— இவற்றை யெல்லாம் உரைத்துப் பார்க்கும் உரைகல்லைத்தான் தர்மம் என்று அழைக்கிறோம். தர்மத்துக்குள்ளேதான் உலகம் அடங்கிக் கிடக்கிறது என்று சொன்னால் மிகையாகாது” என்று சொல்லி உட்கார்ந்தான்.

வயது முதிர்ந்த கிழவரான மந்திரி சாணக்கியர் தமக்கு எதிரே உட்கார்ந்திருந்த இளம் வயதினனும் கம்பீரத் தோற்றம் படைத்தவனுமான யோகியை மாபெரும் அரக்கன் மனிதப் பதரைப் பார்ப்பதுபோல ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு அவர் தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். “தர்மத்தைப் பெரிதாக மதித்து அதன் பெருமையைப் பறைசாற்றும் யோகியே! தர்மத்தை உண்டாக்கியவன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று ஒரு பெரிய கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

“கடவுள் மனிதனின் அந்தராத்மா மூலம் தர்மத்தைச் சிருஷ்டித்தார்” என்று சந்தேகத்துக் கிடமின்றி அழுத்தந் திருத்தமாகப் பதில் சொன்னான் யோகி.

“அது சரி, அந்தக் கடவுளைப் படைத்தது யார் என்று சொல்ல முடியுமா?”

கொலு மண்டபத்திலே கூடியிருந்த அத்தனை மக்களும் சாணக்கியரின் கேள்வியைக் கேட்டுப் பிரமித்து விட்டனர்; ஆச்சரிய மிகுதியினால் ‘ஆ’ வென்று வாயைப் பிளந்தவாறு அமர்ந்திருந்தனர். (தொடரும்)



பாப்பா மலர்

கடல் கன்னி

3. கர்வம் பிடித்த கடலரசன்

ஒரு வருஷம் கழிந்த பின் சலீப் மன்னன் தன் மந்திரிகளை யெல்லாம் முறியடித்து விட்டுக் கடல் ராஜ்யத்திலிருந்து கிளம்பினான். தனது மருமகன் முழுமதியையும், சகோதரியான கடலழகியையும் பார்ப்பதற்காகப் பெர்ஷியாவுக்கு வந்தான். முழுமதியின் ஆட்சியையும் சாமர்த்தியத்தையும் பாராட்டினான். தன்னை நேருக்கு நேராக மாமன் புகழ்வதை முழுமதி விரும்பவில்லை. ஆகையினால் தூங்குவது போல் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தான்.

இந்தச் சமயத்தில் சலீப் மன்னனுக்கும் தனது தாயாருக்கும் கீழ்வரும் சம்பாஷணை நடந்தது முழுமதியின் காதில் விழுந்தது:

சலீப்:—சகோதரி! உன் மகனுக்குத் தக்க பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து வைப்பது பற்றி நீ இதுவரை யோசனை செய்யவில்லை. அவன் போன்ற அழகன் கட்டாயம் கலியாணம் செய்து கொள்ளவேண்டும். அவனுக்குத் தக்க கன்னிகையாக நமது கடல் ராஜ்யத்தில் பார்க்கப் போகிறேன்.

கடலழகி:—அண்ணா! தாங்கள் கூறுவது மிகவும் சரி. ஆனால் என் மகன் விவாகம் செய்து கொள்ள விரும்பவில்லை. என்றாலும் நமது கடல் கன்னிகைகளில் ஒருத்தியை அவன் விவாகம் செய்து கொள்ளுவதில் எனக்கு இஷ்டம்தான். என் மகன் கண்டதும் ஆசை கொள்ளும்படி நீ ஒரு பெண்ணைப் பார்!

சலீப்:—அப்படிப்பட்ட பெண் ஒருத்தி இருக்கிறாள். அவன் பெயர் **கிளிமொழியாள்**. அவன் சமாண்டல் அரசனின் பெண். சமாண்டல் அரசன் நமது கடலரசர்களில் மிகவும் சக்தி வாய்ந்தவன். ஆனால் மிகவும் கர்வம் பிடித்தவன், தற்பெருமைக்காரன். மற்ற அரசர்களை யெல்லாம் மிகத் தாழ்ந்தவர்கள்

என்று நினைப்பவன். நமது குடும்பம் எவ்வளவோ உயர்ந்தது என்பது நமக்குத் தெரியும். எனினும் அவன் தன் அழகு மிகுந்த மகளை நமது குடும்பத்தில் கலியாணம் செய்து கொடுக்கச் சம்மதிக்க மாட்டான். இருந்தாலும் நானே சமாண்டல் அரசனிடம் செல்கிறேன். அவனுடைய மகளை உலகப் புகழ் வாய்ந்த என் மருமகனுக்கு விவாகம் செய்து தரும்படி கேட்கிறேன். அதற்கு அவன் இசையாவிட்டால் வேறு எங்கே யாவதுதான் பெண் பார்க்க வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம். நம் காரியம் கைகூடவேண்டுமானல் நம்முடைய யோசனை உன் மகனுக்குத் தெரியலாகாது. தெரிந்தால் அவன் மனம் கிளிமொழியாளை நாடும். அவனுடைய கர்வம் பிடித்த தந்தை அவனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க மறுப்பான். நம்முடைய பையன் துக்கத்திலாழ்ந்து விடுவான். ஆகவே சமாண்டல் அரசனுடைய அனுமதியைப் பெறும்வரையில் அவன் கிளிமொழியாளைச் சந்திக்காமலிருக்க வேண்டும்.

இவ்வாறு கலியாணப் பேச்சைப் பேசி முடித்து விட்டு, சலீபும் அவன் சகோதரியும் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில் தூங்கி விழித்தவன் போல் முழுமதி எழுந்திருந்தான். கிளிமொழியாளின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அவன்மீது அவனுக்கு அளவில்லாத ஆசை உண்டாயிற்று. எப்படியாவது அவளை மணந்து கொள்வது என்று நிச்சயம் செய்தான்.

அன்று இரவெல்லாம் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததும் அவன் தனது மாமனை வரவழைத்தான். மாமன் தனது கடல் ராஜ்யத்துக்குச் செல்லுகையில் தானும் அவனுடன் வேட்டையாட வருவதாகக் கூறினன். இதற்குச் சலீப் மன்னனும் இணங்கினன். வேட்டையாடிக் கொண்டிருக்கும் பொழுது முழுமதி மாமனிடம் தனது எண்ணத்தைத் தெரிவித்தான்.

இதைக் கேட்டதும் சலீப் மன்னன் கலக்கங் கொண்டான். அவனுடைய தாயாரின் அனுமதி பெறுமல் அவனைச் சமாண்டல் அரசனிடம் அழைத்துச் செல்ல முடியாது என்று கூறினன்.

"சமாண்டல் அரசனிடம் செல்ல என் தாயார் ஒருக்காலும் எனக்கு அனுமதி தர மாட்டாள். ஆகையால் என்னை இப்படியே சமாண்டல் அரசனிடம் அழைத்துச் செல்லுங்கள். அப்படி நீங்கள் செய்யாவிட்டால் வருத்தம் தாங்காமல் நான் உயிர் துறப்பேன்" என்று முழுமதி மிகவும் மனம் உடைந்து சொன்னன்.

இவ்வாறு தன் மருமகன் சொன்னதைக் கேட்டதும் சலீப் மன்னன் அவனைத் தன்னுடன் அழைத்துச் செல்ல ஒப்புக் கொண்டான்.



உடனே அவன் முழுமதியினிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னன். அந்த மோதிரத்தை அணிந்து கொண்டால் கடலில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களுக்கு ஆளாகாமலிருக்கலாம் என்பதையும் அறிவித்தான். முழுமதி மோதிரத்தை அணிந்தவுடன் இருவரும் கடலுக்குள் குதித்தனர்.

வெகு சீக்கிரத்தில் இருவரும் சலீப் மன்னனின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தனர். அங்கே பரோஷா ராணி தனது மகனையும் பேரனையும் அன்புடன் வரவேற்றள். ஆனல் முழுமதியின் கலியாணத் திட்டத்தைப் பற்றி அவ




னிடம் தெரிவிக்கதற்காகத் தன் மகன் சலீமைக் கோபித்துக் கொண்டான். ஏனெனில் இந்தத் திட்டம் பலிக்குமா என்பது அவனுக்குப் பெரிதும் சந்தேகமாயிருந்தது. தானும் தனது சகோதரியும் பேசிக் கொண்டிருந்ததை முழுமதி எப்படியோ கேட்டுக் கொண்டிருந்து விட்டான் என்று சலீப் சொன்னான். இதைக் கேட்ட பரோஷா ராணியும் இனி முழுமதியைத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்தான். எப்படியோ ஷிரிமொழியாளைத் தனது பேரனுக்கு மனைவியாக்கும் விஷயமாக முயற்சி செய்யும்படி தன் மகன் சலீமைக் கேட்டுக் கொண்டான். சமாண்டல் அரசன் கண்டதும் மயங்கிப் போகும்படி அவனுக்குப் பரிசுகளைத் தன் மகனே எடுத்துச் செல்ல வேண்டுமெனத் திட்டம் செய்தான். தன்னிடமிருந்த பிரம்மாண்டமான வைரங்கள் வைடூரியங்கள், நவரத்தினங்கள், முத்துக்கள் எல்லாவற்றையும் ஒரு அழகிய பெட்டியில் வைத்துத் தன் மகனிடம் கொடுத்தான்.

அடுத்த நாள் காலை சலீப் மன்னன் தனது பரிவாரங்களுடன் சமாண்டல் அரசனுடைய அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான். அந்தக் கர்வம் பிடித்த மன்னன் சலீப் தனக்கு அளித்த பரிசுகளைக் கண்டு பிரமித்துப் போனான். ஆனால் அவனுடைய மகளைத் தன் மருமகனுக்குக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று சலீப் கேட்டதும் சமாண்டல் அரசனின் முகம் மாறியது.

சலீப் மன்னன் மிகவும் மரியாதையாகப் பேசினான். தன் மருமகனின் அழகு, குணம், சாமர்த்தியம் யாவற்றையும் புகழ்ந்தான். பூமியில் தனது மருமகன் மிகவும் பணம் படைத்தவன் என்பதையும் தெரிவித்தான். அவனைப் பிற மன்னர்கள் எப்படிப் போற்றி வணங்குகின்றனர் என்பதையும் எடுத்துக் கூறினான். இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்து விட்டு அந்தச் சமாண்டல் அரசன் கேலிச் சிரிப்புச் சிரித்தான். தன்னைவிட எவ்வளவோ தாழ்ந்த குடும்பத்தில் தன் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்க முடியாது என்பதையும் தெளிவாகத் தெரிவித்தான்.

முழுமதியின் குலம், சமாண்டல் அரசனுடைய குலத்திற்கு எள்ளளவும் தாழ்ந்ததில்லை என்பதைச் சலீப் நன்கு அறிவான். ஆகையினால் சமாண்டல் அரசனின் கர்வப்பேச்சு அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. ஆனால் தான் வந்த காரியம் கைகூட வேண்டுமே என்று சலீப் மன்னன்

மந்திரவாதி போன வழி!



கான்ஸ்டேபிள் :—இந்த வழியாக ஒரு மந்திரவாதி போனாரே, பார்த்தீரா?

மந்திரவாதி :— இல்லை, ஐயா! நான் ரயிலுக்குப் போகிற அவசரத்தில் ஒன்றையும் பார்க்கவில்லை!

தன் கோபத்தை அடக்கிக்கொண்டு நிதானமாகவே பதில் கூறினான். மறுபடியும் தன் மருமகனின் குணங்களைப் புகழ்ந்து பேசினான். சலீப் தன் மருமகனைப் புகழப் புகழ, சமாண்டல் அரசனின் கோபம் அதிகரித்தது. அவன் தனது ஆட்களைக் கூப்பிட்டு சலீப் மன்னனின் தலையை வெட்டி விடும்படி உத்தரவிட்டான். சலீப் மன்னன் சாமர்த்தியசாலி. சமாண்டல் அரசனின் ஆட்கள் தங்கள் வாட்களை உருவுவதற்குள் அவர்களுடைய பிடியிலிருந்து அவன் தப்பி விட்டான். அரண்மனை வாயிலருகில் வருகையில் தன்னுடைய போர் வீரர்கள் ஆயிரம் பேர் காத்திருப்பதைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். சலீபின் தாய் பரோஷா ராணி தனது மகனுக்கு ஆபத்து ஏற்படும் என எதிர்பார்த்து முன்ஜாக்கிரதையாக ஆயிரம் படைவீரர்களை அனுப்பி வைத்திருந்தான்.

அந்தப் படையின் உதவியுடன் சலீப் மன்னன் மீண்டும் அரண்மனைக்குள் புகுந்து சமாண்டல் அரசனைக் கைது செய்தான். (தொடரும்)

கண்டு பிடியுங்கள்!

★

ஒரு நாள் மாலை ராமு, சீமா, விச்சு, கிட்டு ஆகிய நால்வரும் 'கேரம்' விளையாடுவதற்காக உட்கார்ந்தார்கள். ராமு, சீமாவுக்கு எதிர்த்தாற்போல் உட்காரவில்லை. கிட்டு, விச்சுவின் வலது பக்கத்தில் உட்காரவில்லை. விச்சு, சீமாவின் இடது பக்கத்தில் உட்காரவில்லை. அப்படியானால் ராமுவின் இடது பக்கத்தில் உட்கார்ந்தவன் யார்? கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்?

விடை அடுத்த இதழில்

சென்ற இதழில் வெளியாகியிருந்த "எத்தனை பேர்?" என்ற புதிருக்கு விடை: 7.

ஐந்து பவுன் போதும்!

விஜயம்

ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளினைத்தான் உங்களுக்குத் தெரியுமே! அவர் ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அதே பெட்டியில் இன்னொரு ஆசாமியும் பிரயாணம் செய்தான். அந்த ஆசாமி மெதுவாக சார்லி சாப்ளினிடம் பேச்சுக் கொடுத்தான். அந்தப் பேச்சு வாக்கிலே, தான் ஒரு சித்திரக்காரன் என்பதையும் தெரிவித்துக் கொண்டான். பிறகு அவன் இயற்கை வர்ணனையில் இறங்கி, சார்லி சாப்ளினைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். ரயில் வண்டியின் ஜன்னல் வழியாக நீண்ட மரங்களும் சோலைகளும் அந்தச் சோலையைத் தேடிச் செல்லும் பறவைக் கூட்டங்களும் அற்புதமாகத் தோற்றமளித்தன. அதையெல்லாம் ஒன்றுவிடாமல் சித்திரக்காரன் சார்லி சாப்ளினுக்குக் காட்டினான். அந்தக் காட்சிகளுக்கு ஏற்ப, சித்திரக்காரனின் பேச்சும் மாறிக்கொண்டேயிருந்தது.



அவன் பேச்சு தமக்குப் பிடிக்கவில்லையென்பதைக் காட்ட சார்லி சாப்ளின் எப்படியெல்லாமோ நடித்துப் பார்த்தார். ஊஹூம்: அவருடைய நடிப்பை அந்தப் பொல்லாத சித்திரக்காரன் பொருட்படுத்தவே இல்லை. "ஸார், அஸ்தமன சூரியனின் அழகைக் கொஞ்சம் கவனியுங்கள்! ஆகா! என்ன அற்புதம்! இந்தப் பிரமாதமான காட்சியை இரண்டு நிமிஷம் பார்ப்பதற்கு ஆயிரம் பவுன் வேண்டுமானாலும் கொடுக்கலாமே!" என்று அவன் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனான். சார்லி சாப்ளின் பொறுமை இழந்து அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். "இதோ வண்டியை நிறுத்திவிட்டேன்! இரண்டு நிமிஷம் என்னத்துக்கு? ஐந்து நிமிஷம் வேண்டுமானாலும் அந்தக் காட்சியைப் பார்த்து அனுபவியுங்கள்! ஆனால் ஆயிரம் பவுன் கொடுக்க வேண்டாம்; அபாய அறிவிப்புச் சங்கிலியைக் காரணமின்றி இழுத்ததற்கு அபராதமாக ஐந்து பவுன் கொடுத்தால் போதும்!" என்றார் அவர்.

அஞ்சுகம்



கி.ரா. கோபாலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

என் கண்ணுக்கு நீலா குழந்தையைப் போலத்தான் தோன்றினாள். ஆனால் உலகின் கண்ணுக்கு என் அபிப்பிராயம் ஒத்து வராது. உருவிலும் அறிவிலும் அவள் வளர்ச்சியடைந்திருந்தாள். அவள் செய்யும் வீட்டுக் காரியம், பேசும் பேச்சு, பார்க்கிற பார்வை, உடை நடை பாவனை எல்லாவற்றிலும் புதுமை பூரித்து நின்றதை நான் மறுக்க முடியாது. ஆனால் அவள் குழந்தைப் பருவத்து நினைவுகள்தான் என் மனதில் நிலைத்திருந்தன. அவளுடைய நடத்தை ஒவ்வொன்றிலும் குழந்தையின் போக்கைத்தான் நான் காண முடிந்தது.

நான் மதுரைக்கு வந்து இருபது நாட்களுக்கு மேலாகி விட்டன. என்னுடைய காரியங்கள் யாவும் நீலாவின் பொறுப்பிலேயே இருந்தன. காலையில் என்னை எழுப்புவது, பல் தேய்ப்பதற்குப் பற்பொடி ஜலம் கொடுப்பது, காப்பி கொண்டு வந்து தருவது, நீராட வெந்நீர் போட்டு விளாவுவது, என் உடைகளைத் துவைத்துக் காய வைப்பது, பெட்டி படுக்கை முதலியவைகளைச் சீர் செய்வது எல்லாம் அவளே. இதில் ஏதாவது ஒன்றை அவள் செய்ய மறந்துவிட்டால் அக்கா ஞாபகப் படுத்துவாள் அவளுக்கு. அரங்கேற்றம் நடக்கப் போகிற ஒரு நாடகத்திற்கு முன் ஒத்திகைகள் போலத்தானிருக்கும் இவைகளெல்லாம். எனக்கு இது ஒரு வகையில் வியப்பாக இருந்தாலும் மற்றொரு வகையில் பச்சாதாபத்தை உண்டாக்கியது. என் மனதிலுள்ளதைப் பளிச்சென்று சொல்லி அக்காவின் தவறான அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும்படி சொல்லலாம். ஆனால் அதைச் சொல்ல என் நெஞ்சில் தைரியமில்லை. தர்மசங்கடமான நிலைமையில் இருந்தேன்.

ஒரு மாதமாகி விட்டது. அன்று நான் சென்னைக்குப் புறப்பட்டேன். வண்டிக்காரன் படுக்கை பெட்டி இவைகளை வண்டியில் கொண்டு போய் வைத்தான். அக்காவும் நீலாவும் வாசற்படியில் வந்து நின்றார்கள்.

“போய் வரேன், அக்கா!” என்றேன் பார்வையை வேறெங்கோ செலுத்திக் கொண்டு.

"போய் வா! உடம்பைப் பார்த்துக் கொள். அடிக்கடி கடுதாசி போடு. நான் உனக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. மாணிக்கம் போலப் பெண்ணை வளர்த்துட்டேன். அதை அன்னியத்திலே வாழ்க்கைப் படுத்த மனசு இல்லை. நீயே யோசித்துப் பாரு. நீலாவைப் பற்றி உனக்கு நான் சொல்ல வேண்டுமா? வலுவிலே வர லக்ஷ்மியை உதறி விடாதே!" என்றாள்.

அவளுடைய வார்த்தைகள் கடைசி எச்சரிக்கையா, அல்லது என் மனதை இளக வைக்கும் கெஞ்சுதலா என்று எனக்குப் புரியவில்லை. எல்லாவற்றிற்கும் 'உம்' கொட்டிக்கொண்டே, "நீலா, போய் வரட்டுமா?" என்று சொல்லியபடியே அவள் முகத்தைப் பார்த்தேன். அவள் கண்களில் நீர் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. சிற்றாடையின் முகப்பை எடுத்துக் கண்களை ஒத்திக் கொண்டே 'உம்' என்று தலையை ஆட்டி அவள் எனக்கு விடை கொடுத்தாள்.

மூன்று வருடங்களுக்கு முன்னால் மல்லிகாவிடம் விடை பெற்றுக்கொண்ட காட்சியும் இன்று நீலாவிடம் விடை பெற்றுக் கொண்ட காட்சியும் எவ்வளவுக் கெவ்வளவு வித்தியாசமானவை! அவள் சிரித்துக் கொண்டே விடை கொடுத்தாள், இவள் அழுது கொண்டே விடை கொடுத்தாள் என்பதில் மாத்திரம் வித்தியாசமில்லை. நான் எந்தத் தெய்வத்தின் கடாக்ஷத்தைப் பெற மனதைத் தீயில் போட்டு வாட்டினேனோ, அந்தத் தெய்வம் என்னைப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்து விட்டுப் போய் விட்டது. ஆனால் இன்னொரு தெய்வம் என் கடாக்ஷத்திற்காகத் தன் மனதைத் தீயில் போட்டு வாட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் நான் அதைப் பார்த்து ஏளனமாக நகைக்கவில்லை; இரக்கப்படுகிறேன்.

அக்காவின் சொற்களும் நீலாவின் கண்ணீரும் என் மனதைச் சிறிது இளக வைத்தாலும் என்னுடைய போக்கை மாற்றிக் கொள்ளும் நிலைமைக்கு நான் வந்துவிடவில்லை.

சென்னை வந்ததும் அக்காவுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் அவளுடைய ஆசையையும் நீலாவின் ஆசையையும் சின்னாபின்னமாக்கி யிருக்கும். ஆனால் என் மனதிலுள்ள பாரம் குறைந்து விட்டதாக எனக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

3. அஞ்சுகம்

வருடம் ஒன்று ஓடி விட்டது. இந்த வருடம் விடுமுறையை என் நண்பன் சிவகுருவோடு அவனுடைய கிராமத்திற்குப் போய்க் கழிப்பதென்று தீர்மானம் செய்தேன்.

அழகான கிராமம். என்னைப் போன்றவர்களுக்கு வாழ்க்கையில் சிறிது நம்பிக்கை உண்டாக்க வேண்டுமென்றால் இதைப் போன்ற கிராமங்களுக்குப் போய்க் கொஞ்ச நாட்கள் வசித்தால் போதும். அந்தக் கிராமத்தின் பெயர் நகரி. நெசவாளர்களும் விவசாயிகளும் நிறைந்த ஊர். அந்த ஊர்



வயலும் நீர் நிலைகளும் மனதிற்கு ஆறுதலை அளித்தன. கிராமத்திலேயே பெரிய மிராசுதார் என் நண்பன் சிவகுருவின் தகப்பனார் தான். உயிருக்கு உயிராகப் பழகிய நண்பனாயினும் அவன் வீட்டில் ஒரு மாதம் இருப்பது முதலில் எனக்குச் சங்கடமாகவும் சங்கோஜமாகவுந்தானிருந்தது. ஆனால் இரண்டு மூன்று நாட்களுக்குள் என்னுடைய சொந்த வீட்டில் பழகுவதுபோல் அந்த வீட்டிலும் பழக ஆரம்பித்து விட்டேன்.

சிவகுரு மூன்று வருடங்களாக என்னோடு பழகுகிறான். அவன் தன் குடும்பத்தைப் பற்றிய ஒவ்வொரு சங்கதியையும் என்னிடம் சொல்லாமலிருப்பதில்லை. ஆனால் அந்தப் போக்கிரி தனக்கொரு தங்கை இருக்கிறாள் என்று என்னிடம் சொல்லாமல் மறைத்த காரணம் என்னவென்றுதான் எனக்குத் தெரியவில்லை.

வீட்டுத் தோட்டத்தில் மலர் பூத்துக் குலுங்கினாலும் மகிமை இல்லை. காட்டில் ஒரு தனி மலர் மணத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தால் அதன் தனிப் பெருமைக்கு ஈடு உண்டா? உலகத்தில் எத்தனையோ பெண்கள் உண்டு—அதுவும் சென்னையில் வீடெங்கும் வீதியெங்கும் பஸ்ஸிலும் டிராமிலும் எத்தனை எத்தனை வகையான அழகிகள்! நவீன நாகரிகத்தின் கடைசி அழகு அலங்காரங்கள்! அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து அலுப்படைந்த என் போன்ற வாலிபர்களுக்கு அஞ்சுகத்தைப் போன்ற அழகி காட்டில் மலர்ந்த தனி ரோஜாதானே? பட்டணத்துப் பெண்கள் போல அவள் அழகு செய்து கொள்வதற்காக நேரத்தை வீணாக்குவதில்லை. இயற்கையிலே அவளுக்கு இருந்த அழகில் ஒரு அலங்காரம் இருந்தது. அவள் என் எதிரில் நின்று பேசுவதில்லை. வீட்டிற்குள்ளிருந்து எப்பொழுதாவது அவள் குரல் கேட்கும். அப்பொழுதெல்லாம் என் இருதய வீணையின் தந்தியைத் தட்டி நாதம் எழுப்புவது போல இருக்கும். மின்மினிப் பூச்சி பறப்பது போல் அவள் எப்பொழுதாவது என் கண்ணெதிரில் படுவாள்; கண நேரத்திற்குள் ஓடிவிடுவாள். எப்பொழுதாவது என் எதிரில் ஒரு நிமிஷம் நிற்கும்படி நேர்ந்துவிட்டால் வெட்கத்தினால் குன்றிப் போய்விடுவாள். என் ஆசைக்கு வெட்கமுண்டா? கண் கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருப்பேன்.

என் வறண்ட உள்ளத்தில் சிறிது ஈரசைப்பு ஏற்பட்டது. மல்லிகாவின் ஆசையில் பங்கமடைந்த என் உள்ளத்தில் மறுபடியும் ஒரு புது ஆசை தளிர் விட்டது. என் மனதிலுள்ளதைச் சிவகுருவிடம் தெரிவிக்கலாமா என்று நினைத்தேன். எங்களிருவருக்கும் உள்ள நெருங்கிய நட்புக்கு இது பாதகம் விளைவித்தால் ...? அவனாகத் தன் தங்கையைப்பற்றி ஏதாவது என்னிடம் சொல்லுவானோ என்று எதிர் நோக்கினேன்.

அந்தக் கல் நெஞ்சக்காரன் மௌனமாகவே இருந்தான்.


ஒரு நாள் நானாகவே சிவகுருவிடம் அஞ்சுகத்தைப் பற்றி வர்ணிக்க ஆரம்பித்தேன். "சிவகுரு, உன் தங்கை அஞ்சுகம் மிகவும் கெட்டிக்காரி! அவளைக் கல்யாணம் செய்து கொள்கிறவன் உலகத்திலேயே பெரிய பாக்கியசாலியாக இருப்பான்!" என்றேன்.

சிவகுரு ஏளனமாகச் சிரித்துக் கொண்டே, "உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான், பாலு! என் தங்கையை யார் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறானோ அவன்தான் பெரிய அபாக்கியசாலி!" என்றான்.

"அபாக்கியசாலியா! ஏன்...?" என்றேன் வியப்போடு.

"என் அத்தை மகன் வதன் முகத்துக்கு அஞ்சுகத்தைக் கொடுப்பதாய் நிச்சயம் செய்

அக்கிரமம்!



"இது ரொம்ப யோக்யமான ஹோட்டல்; இங்கே நெய் என்கிற பேச்சே கிடையாது!"

"இல்லே, ஸார்! இந்த வட்டை நெய்யிலே தான் பண்ணித் தொலைத்திருக்கிறான்! கட்டாயம் போலீஸில் ரிபோர்ட் செய்ய வேண்டும்!"



தார்கள். அவனுக்கு அஞ்சுகத்தின் மீது அளவற்ற அன்பு. அஞ்சுகத்திற்கும் அவன் மீது காதல். கல்யாணத்திற்கும் தேதி வைத்து விட்டார்கள். கல்யாணத்திற்கு முதல் நாள் சாயந்திரம் அவன் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தபோது எமன் நல்ல பாம்பின் உருவத்தில் வந்து அவன் உயிரைக் கொண்டு போய்விட்டான். அதிலிருந்து இந்தக் கிராமத்திலோ உறவினர்களிடத்திலோ அஞ்சுகத்தின் கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுத்தால் நிற்பதில்லை. யாராவது அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவாமென்று மனதால் நினைத்தால் கூட நல்ல பாம்பு கடித்து விடுமோ என்று பயப்படுகிறார்கள். தவிர அஞ்சுகத்திற்கும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசையே இல்லை. ஏனென்றால் அவளுக்கும் ஷண்முகத்திற்கும் இடையே இருந்த காதல் அவ்வளவு ஆழமானது!" என்றான்.

"இது ஒரு அசட்டுத்தனம். இப்படியும் ஒரு பெண் இருந்துவிட முடியுமா?" என்றேன் நான்.

"ஏன் முடியாது? ஆண்களால்தான் முடியுமென்பது உன் அபிப்பிராயம்போல் இருக்கிறது. நீ மல்லிகாவின்மீது வைத்த காதல் வீணான பிறகு, வாழ்க்கை வறண்டு விட்டது, உலகம் இருண்டு விட்டது என்றெல்லாம் சொன்னாயே! அதைப்போல ஒரு பெண்ணுக்கும் வாழ்க்கை வறண்டும் உலகம் இருண்டும் போயிருக்கக்கூடாதா?" என்றான் சிவகுரு.

இதற்கு நான் பதில் சொல்லித்தானாக வேண்டும். இப்பொழுது என் வாழ்க்கை மலர்ந்திருக்கிறது என்பதை அவனிடம் எப்படி எடுத்துச் சொல்லுவது?

"சிவகுரு, நான் இந்தக் கிராமத்திற்கு வந்து உன் தங்கையைப் பார்த்த பிறகு ஏதோ இருட்டில் தடுமாறிக்கொண்டுதான் உலகமே இருண்டு விட்டதாக நினைத்தோமென்று தோன்றுகிறது. ஒரே நினைவுக் காய்ச்சலில்தான் உள்ளத்தை வறண்டு போக வைத்தோமென்று படுகிறது......"

சிவகுரு சட்டென்று என் முகத்தை உற்றுக் கவனித்தான். கேலியான சிரிப்பு அவன் முகத்தில் தெரித்தது. "ஓஹோ, அப்படியா சமாசாரம்! அஞ்சுகத்தை நினைக்காதே ராஜா — நல்ல பாம்பு தீண்டிவிடும்" என்று எச்சரித்தான்.

"நல்ல பாம்பு எதற்கு? ஆதிசேஷனே என்னை வந்து விழுங்கி விடுவதாய் இருக்கட்டும். அவளை மனதால் நினைக்காதே என்று எனக்குச் சொல்ல எந்தக் கடவுளுக்

ரும் அதிகாரமில்லை!" என்றேன் ஆவேசமாகவும் அழுத்தமாகவும்.

அவன் மெதுவாக என் மார்பைத் தட்டி, "சபாஷ்! கவலைப்படாதே அண்ணாச்சி, கவலைப்படாதே! அஞ்சுகத்தின் அன்பை நீ பெற்று விட்டால் எங்களுக்கெல்லாம்கூட சந்தோஷமாயிருக்கும்" என்றான்.

சிவகுருவின் வார்த்தை என் மனதிற்குச் சிறிது தைரியத்தைக் கொடுத்தது. என்னுடைய முயற்சியில் எனக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அஞ்சுகத்தைத் தனியாகச் சந்திக்கும் ஒரு நாளை எதிர்நோக்கினேன்.

நான் அன்று தோட்டத்திற்குப் போன போது அஞ்சுகம் முல்லைக் கொடிக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்தி மயங்கும் வேளை. அஞ்சுகம் என்னைக் கண்டதும் மிரண்டு விட்டாள். கையிலிருந்த பானையைக் கீழே வைத்துவிட்டு ஓட முயற்சி செய்தாள். நான் அவளைத் தடுக்கவில்லை. ஓடிய அவசரத்தில் காற்றில் பறந்த சிற்றாடைத் தலைப்பு முள் வேலியில் சிக்கிக் கொண்டது. அதை அவசர அவசரமாகப் பிடித்து இழுத்தாள். அது எளிதில் வருவதாயில்லை. நான் அவளை நெருங்கி, "அஞ்சுகம்! முள்ளில் சிக்கிய சேலையைப் படபடத்தோடு எடுக்கக்கூடாது. இரு, நான் எடுத்து விடுகிறேன்!" என்று சொல்லி, அவளுடைய சிற்றாடைத் தலைப்பை

ஏன் கூடாது?



"பத்திரிகைகள் எல்லாம் 'அந்த மேதாவி இறந்தார்' 'இந்த மேதாவி இறந்தார்' என்று போடுகிறார்களே தவிர, ஒரு தடவையாவது ஒரு மேதாவி பிறந்தார் என்று போடுகிறதில்லை. பார்த்தீர்களா? இவர்களுக்கு ஏன் விளம்பர வரி போடக் கூடாது?"

எடுக்க ஆரம்பித்தேன். அவள் வெட்கத்தால் தலை குனிந்து நின்றாள். அவளைச் சிறிது நேரம் நிற்க வைக்க வேண்டுமென்பதற்காகவே முள்ளில் சிக்கிய ஒரு பாகத்தை எடுத்து வேறொரு முள்ளில் சிக்க வைத்துக் கொண்டே, "என்னைக் கண்டால் உனக்கு ஏன் இவ்வளவு வெட்கம்?" என்றேன்.

அவளுடைய வெட்கம் இன்னும் அதிகமாகியது.

"இந்த வீட்டில் எல்லோரும் என்னோடு சகஜமாகப் பழகுவது போல் நீ என் பழக மாட்டேன் என்கிறாய்?" என்றேன்.

இப்பொழுதுதான் அவளுடைய அழகிய நேத்திரங்கள் என்னை ஏற இறங்கப் பார்த்தன. அவள் முகம் சிவந்து குப்பென்று வியர்த்தது. அவள் கண்களில் ஒரு பீதி தென்பட்டது. "இல்லை..." என்று அவள் வாய் முணுமுணுத்தது.

"பயப்படாதே! என்னைப் பாம்பு தீண்டாது. நாகராஜன் ஏழு தலைமுறைக்கு எங்கள் குடும்பத்தினரைத் தொடுவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறான். இன்னும் ஒருதலை முறைகூட ஆகவில்லை......"

அவள் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. அழகான இதழ்களில் புன்சிரிப்பு மலர்ந்தது. கவர்ச்சி நிறைந்த கண்கள் என்னைப் பார்க்கக் கூசினாலும் அதில் ஒரு ஆர்வமும் ஆழ்ந்த பொருளும் இருப்பதாகத் தோன்றியது.

"இந்த வேலியில் எப்படிச் சிக்கியிருக்கிறது, உன் சிற்றாடை! சில பேரிடம் இந்த மனதும் இப்படித்தான் சிக்கி விடுகிறது. அதைத் தெரிந்து தெளிவாக்கிச் சீர் செய்து கொள்வதே கடினமாய் இருக்கிறது. உதாரணமாய் நீ......நான்......"

இதற்குமேல் என் நெஞ்சிலிருந்த வார்த்தைகளை உருவக் கொடுத்துச் சொல்ல முடியவில்லை என்னால்.

தாமரை இதழ் கூம்பி இருப்பதுபோல் அவள் கண்கள் அரைப் பார்வையோடு தரையை நோக்கின. இரண்டு கைவிரல்களையும் ஒன்றாகக் கோத்துக் குறுகை தோன்றும் இதழ்களை மறைத்துக் கொண்டாள். அன்பிலும் ஆர்வத்திலும் எழும் இன்ப வேதனையைச் சமாளிப்பதற்கு முடியாமல் தவித்தாள்.

ஒரு நிதானமாக வேலியில் சிக்கியிருந்த சிற்றாடைத் தலைப்பை எடுத்து விட்டேன். மறுகணம் அவள் கை என் கையில் சிக்கியது. ஆனால் நான் ஏமாந்து விட்டேன்.

அவன் சட்டென்று என் கைப்பிடியை உதறிக்கொண்டு ஓடிவிட்டான்.

அன்று என் மனது அலைகடலாகத்தான் இருந்தது. இரவு முழுதும் இன்பக் கனவிலேயே மிதந்தேன். மறுநாள் காலையில் சிவகுரு அவசர அவசரமாக எங்கோ புறப்பட்டான். "எங்கே புறப்பட்டாய்?" என்றேன்.

"அப்பா ஜோசியரை அழைச்சிக்கிட்டு வரச்சொன்னாரு. சீக்கிரமா ஒரு நாளைப் பார்த்துப் பத்திரிகை போடணுமே!" என்றான்.

எனக்கு வியப்பாக இருந்தது. "ஜோசியரா! பத்திரிகையா!" என்றேன்.

"ஆமாம், பதறாதே! கல்யாணப் பத்திரிகைதான். சில சமயத்திலே சிலருக்கு எந்த உலகத்திலே இருக்கிறோமென்றே தெரியாமல் போயிடுது. பக்கம் பார்த்து எதையும் பேசணும்னுகூடத் தெரியாமல் போயிடுது. நேத்திக்கி நான் தோட்டத்திலே மாதுளம் செடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருந்தது கூட உன் கண்ணிலே படாமல் போயிடுச்சு! ஆனா அஞ்சுகம் தெரிஞ்சுக்கிட்டா!—ஹூம், ஏதோ நல்ல காரியம் முடிந்தால் சரிதான். அது சரி, பத்திரிகை எந்த மாதிரி கடிதாசியிலே போடலாம்...?" என்றான் கேலியாக.

"அதைப்பற்றி அப்புறம் யோசிக்கலாம். ஜோசியரைக்கூட அப்புறம் கண்டு பேசிக்கலாம். முதல்லே இப்போ மதுரைக்குப் போய் வந்துடலாம்" என்றேன்.

"மதுரைக்கா! ஏன்?"

"முதலில் என் அக்கா மகள் நீலாவை நீ பார்க்கணும். அவள் உன்னைப் பார்க்கணும். அப்புறம் இரண்டு பத்திரிகையையும் சேர்த்தாப்போலே போட்டுக்கலாம்!" என்றேன்.

"இரண்டு பத்திரிகையா! ஏன்?" என்றான் அவன் வியப்புடன்.

"ஆமாம், என் வார்த்தையைத் தட்டாமல் வா! அப்புறம் நீயே சொல்லுவே—இரண்டு பத்திரிகை போடத்தான் வேணும்னு!" என்றேன் நான்.

* * *

நானும் சிவகுருவும் மதுரைக்குப் போனோம். அக்காவின் உபசாரம் குறைவில்லாமல்தானிருந்தது. நான் சென்ற பிறகு அவளுக்கு எழுதிய கடிதம் என்னுடைய அபிப்பிராயம் நியாயமானதுதான் என்பதை அவளுக்கு உணர்த்திவிட்டது என்பதையும் அறிந்து கொண்டேன். நீலாவுக்குத் தகுந்த கணவன் உலகத்தில் இருக்கிறான் என்று காட்ட சிவகுருவை அழைத்துக்கொண்டு வந்திருக்கும்போது அவள் சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமா? நீலா சமையலறையிலிருந்து தலையை வெளியே நீட்டாமலிருந்தாள். என்னோடு ஒரு அன்னிய புருஷன் — அதுவும் தனக்கு ஒருநாள் கணவனாக வரப்போகிறவன்—வீட்டிலிருக்கும்போது இயற்கையாகப்பெண்களுக்குள்ள வெட்கமும் நாணமும் அவளுக்கும் இருக்காதா? ஆனால் ஒரு தடவை நீலாவைப் பார்த்த பிறகு மறுமுறை எப்பொழுது பார்ப்போமென்று துடித்துத் தவித்தன சிவகுருவின் கண்கள்.

என் மனதில் ஒரு திருப்தி, அமைதி, சந்தோஷம் எல்லாம் குடிகொண்டிருந்தன. குருட்டு உள்ளம் சில சமயத்தில் கைக்கு எட்டாத பொருளையும், ஒட்டாத பொருளையும் நினைத்துத் தடுமாறுகிறது. சோகத்திலும் வெறுப்பிலும் விழுந்து துடிக்கிறது. எனக்காக அஞ்சுகம் ஒருத்திதான் உலகத்தில் படைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை நான் உணரக்கூடிய காலம் இப்பொழுதுதான் வந்தது. நீலாவுக்காகச் சிவகுரு படைக்கப்பட்டிருக்கிறான் என்பதும் இப்பொழுதுதான் அக்காவுக்கும் நீலாவுக்கும் நன்றாகத் தெரிந்தது. (முற்றும்)



புருஷன் :—இந்த வருஷம் எப்படியும் நம்ம மீனுவுக்குக் கல்யாணம் பண்ணிவிட வேண்டும்.

மனைவி :—அவசரப்பட்டு எங்கே யாவது கொண்டு போய்த் தள்ளிப் பிடாதேயுங்கோ! இப்படித்தான் எங்கப்பாவும் அவசரப்பட்டார்!



புரொபசர் சாமிநாதன், கலாசாலை விட்டதும் நேராக வீட்டுக்குத் தம் காரில் வந்து இறங்கினார். டிரைவர் கதவைத் திறந்ததும் சோர்வுடன் இறங்கித் தமது அறையை நோக்கி நடந்தார். அவருடைய சோர்வை நீக்குவதற்காகத்தானோ என்னவோ, சமையல்காரக் கிட்டு தயாராக டிபனும், சூடான காப்பியும் வைத்துக் கொண்டு சமய சஞ்சீவியாக நின்றான்.

"என்னடா, கிட்டு! அம்புஜம் எங்கே? வெளியில் போய் விட்டாளோ?" என்று ஆவலுடன் கேட்டார் புரொபசர்.

"வீட்டு அம்மாள் 'டிரெஸிங் ரூமில்' இருக்கிறார்கள்" என்று பதிலளித்து விட்டுச் சமையலறையை நோக்கி வேகமாக நடந்தான் கிட்டு.

'நல்ல காலம்! இன்றைக்காவது 'ஜாலி'யாக அவளை அழைத்துக் கொண்டு ஒரு சினிமாவுக்குப் போய்விட்டு வரலாம்' என்று அவர் மனம் எண்ணமிட்டது. அவர் தமது மனைவியை விசாரித்துச் சிறிது நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் அம்புஜம் அலங்கார தேவதையாக அவர்முன் காட்சியளித்தாள்.

வந்ததும் வராததுமாக அவர் கட்டிய கோட்டையையெல்லாம் ஒரு நிமிஷத்தில் தகர்த்து எறிந்து விட்டாள் அம்புஜம்.

"என்ன! நான் இன்று மாதர் சங்கத்துக்குப் போக வேண்டும். கார் தயாராயிருக்கிறதோ?" என்று வினவினாள்.

"என், மாதர் சங்கத்துக்குப் போய் வம்பளக்கப் போகிறாயா? நாம் இருவரும் சேர்ந்து சினிமாவுக்குப் போனால் என்ன?" என்று ஆவலுடன் கேட்டார் சாமிநாதன்.

"சினிமாவா! இன்று நான் மாதர் சங்கத்தில் பேசப் போகிறேன். நான் பேசுகிறேன் என்று பத்திரிகையில்கூடப் பிரசுரித்து விட்டார்கள். போகாமலிருந்தால் நன்றாயிருக்குமா?" என்று கூறிவிட்டு, அவர் பதிலைக்கூட எதிர்பாராமல் 'விர்'ரென்று வாசல் பக்கம் சென்று விட்டாள் அம்புஜம்.

புரொபசர் தமது முயற்சி தோல்வியடைந்ததை எண்ணி வருத்தமுற்றுப் படுக்கையில் 'பொத்'தென்று விழுந்தார். பல நினைவுகளின் காரணமாக அவருக்குத் தூக்கம் வரவில்லை. வெகு நேரங் கழித்து எப்படியோ கண்ணை மூடினார். காலச் சக்கரம் பின்னோக்கிச் சுழன்று ஐந்து வருஷங்களுக்கு முன்னால் திரும்பியது.

2

ஐந்து வருஷங்களுக்கு முன் சாமிநாதன் புரொபசரல்ல. சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்) பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான். கலாசாலைப் பரீக்ஷை முடிவதற்குள்ளேயே அவனுக்கு மற்றொரு பரீக்ஷை தயாராகக் காத்துக் கொண்டிருந்தது. கல்லூரிப் பரீக்ஷையோ, சட்டப் பரீக்ஷையோ அல்ல. தன் வாழ்க்கைத் துணைவியைத் தேடிக் கொள்ளும் பரீட்சைதான்! அவனுடைய தாய் தந்தையர்களை விடப் பெண்களைப் பெற்றவர்கள் அப் பரீட்சையைத் தயாரிப்பதில் முனைந்து நின்றனர்.

சாமிநாதன் திருக்குளம் மிராசுதார் ராமச்சந்திரய்யரின் ஏகப் புதல்வன். சீரும் சிறப்பும் மிகுந்த குடும்பத்தில் பிறந்த சாமிநாதனை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தனர் அவன் பெற்றோர்கள். பெரிய மிராசுதாரின் பிள்ளை, அதுவும் படித்துப் பட்டம் பெறப் போகும் வாலிபனுக்கு வரன்கள் வந்து குவியாமல் போய்விடுமா? பலர் மிராசுதாரின் வீட்டை முற்றுகை யிட்டனர்.

கடைசியில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்த ரிடயர்டு தாசில்தாரின் பெண் அம்புஜத்தை மிகவும் பிடித்திருந்தது அவர்களுக்கு. தங்களுக்குப் பிடித்து விட்டால் போதுமா? பையனுடைய சம்மதத்தைத் தெரிந்து கொண்ட பிறகு முடிவு செய்வதாக வாக்களித்தனர்.

சென்னையிலிருந்து தனது 'பைனல்' பரீட்சையை முடித்துவிட்டு வந்ததும் வராததுமாகச் சாமிநாதனை அவனது பெற்றோர்கள் பெண் பார்க்க அழைத்துச் சென்றனர். அம்புஜத்தின் மாந்தளிர் போன்ற நிறமும், பால்வடியும் முகமும், குயிலின் நிறத்தை யொத்த கருவிழிகளும், அவளது குறுகுறுத்த பார்வையும், நீண்ட கரிய கூந்தலும் சாமிநாதனின் மனத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டு விட்டன. அப்புறம் கேட்க வேண்டுமா? அம்புஜம் நல்ல சுபதினத்தில் அம்மி மிதித்து அருந்ததியைப் பார்த்துச் சாமிநாதனின் கைத்தலம் பற்றினள்.

சாமிநாதன் அந்த வருஷம் ஆனர்ஸ் பரீட்சையில் மாகாணத்தில் முதன்மையாகத் தேறினன். எல்லாம் அம்புஜத்தின் அதிர்ஷ்டம் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

பிறகு சாமிநாதன் சென்னை சர்வகலாசாலை ஆராய்ச்சி மன்றத்தில் சேர்ந்தான். ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமா? விரைவில் அவனது தகப்பனார் பெரிய வீட்டை அமர்த்தி, அதில் நல்ல நாளில் அம்புஜத்தை அழைத்து வந்து குடித்தனத்தை ஆரம்பித்து வைத்தார். அம்புஜத்தின் மாமனாரும் மாமியாரும் கொஞ்ச நாளிருந்து அவர்கள் குடித்தனத்தைப் பாங்குடன் அமைத்து விட்டுத் தங்கள் கிராமத்துக்குத் திரும்பினர்.

அம்புஜம் தனியாகக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தாள். வீட்டில் சமையல் செய்வதற்குச் சிறு வயதிலிருந்தே மிராசுதாரின் வீட்டில் வளர்ந்த கிட்டுவை அமர்த்தியிருந்தார்கள். தனது கணவனின் அன்பையும் ஆதரவையும் பெற முயற்சி செய்தாள் அம்புஜம். ஆனால் எல்லாம் பகற்கனவாக முடிந்தன.

சாமிநாதன் ஆராய்ச்சியில் மிகவும் ஈடுபட்டிருந்ததால் தன் புது மணம் புரிந்த மனைவியைச் சிறிதுகூடக் கவனிக்கவில்லை. அவன் எப்பொழுது பார்த்தாலும் தனது அறையில் உட்கார்ந்து பெரிய பெரிய புத்தகங்களை வைத்துப் புரட்டிக் கொண்டிருப்பான். அவனுக்குக் காப்பிகூட அவனுடைய அறையில்தான் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். ஒன்பதரை மணி அடிக்க வேண்டியதுதான்; அவசர அவசரமாக எழுந்து சாப்பிட்டு விட்டுத் தன் சட்டைகளை மாட்டிக்கொண்டு கிளம்பி விடுவான்.

அழகாக அலங்கரித்துக்கொண்டு தன் கணவனின் முன்னால் புன்சிரிப்புடன் நிற்பாள் அம்புஜம். அவனோ ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அவளை அந்த அறையிலிருந்து விரட்டி விடுவான். தோல்வியுற்ற அம்புஜம் கண்களிலிருந்து நீர்வழியத் தன் அறைக்குத் திரும்பிச் செல்வாள். தன்னுடைய உரிமையை எடுத்துக் கூறப் போதிய தைரியமில்லாத பெண் பிறவியை நினைத்து பொருமுவாள்.

ஒரு நாள் காலை பதினொரு மணியிருக்கும். சாமிநாதன் ஆராய்ச்சிக் கூடத்துக்குச் சென்றிருந்தான். அம்புஜம் ரேடியோ அறையில் உட்கார்ந்து ஏதோ பின்னிக் கொண்டிருந்தாள். அவள் மனம் சிந்தனையிலாழ்ந்திருந்தது. அப்பொழுது யாரோ வீட்டினுள் வரும் சத்தம் கேட்டது. ஒரு பெண்மணி ரேடியோ அறையினுள் வந்து அம்புஜத்தை வணங்கினள். அம்புஜம் சிறிது நேரம் திகைத்துவிட்டு, "வாருங்கள், உட்காருங்கள்!" என்று தன் ஆசனத்தைவிட்டு எழுந்து உபசரித்தாள்.

"நான் அடுத்த வீட்டில் குடியிருக்கிறேன். உங்களுடன் வெகு நாளாகப் பழக வேண்டுமென்ற ஆசை. இன்றுதான் அ



தப் பாக்கியம் எனக்குக் கிடைத்தது" என்றாள் பரிமளா என்னும் அந்தப் பெண்மணி.

"அதற்கென்ன, தினம் மத்தியான வேளைகளில் இப்படி வாருங்களேன்! பேசிக்கொண்டிருக்கலாம். எனக்கும் பொழுது போகமாட்டேனென்கிறது" என்றாள் அம்புஜம்.



இவ்வாறு ஆரம்பித்த பரிமளாவின் சிநேகிதம் வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்தது. தன் சிநேகிதையின் உறவால் தன் கணவனின் ஒத்துழையாமையை அம்புஜம் சிறிது மறந்திருந்தாள். பரிமளா மாதர் சங்கத்தில் காரியதரிசி. அம்புஜத்தையும் மாதர் சங்கத்தில் சேரும்படி அவள் வற்புறுத்தினாள். முதலில் அம்புஜம் சிறிது தயங்கினாள். பிறகு பரிமளாவின் இடைவிடாத வற்புறுத்தலினால் அதில் சேர்ந்தாள். அவ்வளவுதான்; அன்றைய தினத்திலிருந்து அவளுக்குப் பொழுது போவதே தெரியவில்லை!

சாமிநாதன் ஆராய்ச்சியில் மகிழ்ந்த அரசாங்கத்தார் அவனுக்கு எம். எஸ்ஸி. பட்டத்தை மனமுவந்து வழங்கினர். பெரிய பட்டம் பெற்று வந்த சாமிநாதனுக்குப் பல காலேஜ்களில் புரொபசர் வேலை தருவதாக முன் வந்தனர். கடைசியில் அவன் 'ஆனந்தா காலேஜ்'ஜில் புரொபசர் பதவியை ஏற்றான்.

பரீட்சையும் பட்டமும் பதவியும் பெற்ற பிறகு, சாமிநாதன் தன் மனைவியின் ஆசையையும் அன்பையும் பெறுவதில் ஈடுபட்டான். ஆனால் அம்புஜத்தின் எண்ணமோ அதற்கு எதிர்மாறாக இருந்தது. மாதர் சங்கத்துக்குப் பரிமளாவின் கூடப் போவதிலும், அங்கு பல நாகரிக யுவதிகளுடன் அளவளாவுதலிலும் அவள் கவனம் சென்றது. அவள் சாமிநாதனைச் சிறிதும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. இதனால் அவனுக்கு வந்த ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் அளவில்லை. 'நம்மைக் கவனிக்காமல் இவளுக்கு மாதர் சங்கம் பெரிதாய்ப் போய் விட்டதோ!' என்று உறுமினான். கோபமும், ஆத்திரமும் மாறி மாறி வந்து அவனைச் சித்திரவதை செய்தன. இன்னது செய்வது என்று தெரியாமல் படுக்கையில் போய் 'பொத்'தென்று விழுந்தான். அப்பொழுதுதான் அவனுக்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

3

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை நாலுமணியிருக்கும். பரீக்ஷைக்கு ஒரு மாதமிருந்தது. எவ்வளவு பாடம் படிக்க வேண்டுமோ அவ்வளவையும் விரைவில் படிக்க வேண்டுமே என்ற கவலையில் ஈடுபட்டுச் சாமிநாதன் மும்முரமாகத் தன் பாடத்தைப் படிக்க முற்பட்டான். ரோஜா நிற சில்க் புடவையும் பச்சை நிற ஜாக்கெட்டும் அணிந்து, ஜோராகத் தலையை வாரிப் பின்னிக் கொண்டு அழகுக் காசியாய் அவன் முன் காட்சியளித்தாள் அம்புஜம். புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு அபார சிந்தனையில் ஆழ்ந்திருந்த சாமிநாதனுக்கு அவள் வந்தது கூடத் தெரியவில்லை.

"ராக்ஸியில் நல்ல படம் ஒன்று வந்திருக்கிறதாம். போகலாமா?" என்று கொஞ்சலுடன் வினவினாள் அம்புஜம்.

"உனக்குச் சினிமா ஒன்றுதான் குறைச்சல். எனக்குப் பாடம் படிக்க வேண்டியது தலைக்கு மேலிருக்கிறது. அப்படியே பாடத்தைப் போட்டு விட்டு உன்னுடன் ஆடி அசைந்து சினிமாவுக்குப் போய்விட்டு வந்தால் இந்த வருஷம் பரீக்ஷையில் பிளாங்கி தான்!" என்று எரிச்சலோடு பதிலளித்தான் சாமிநாதன்.

இதைக் கேட்டதும் அம்புஜத்தின் எண்ண அலைகள் எல்லாம் சிதைந்தன. அவள் திக்பிரமையுடன் அசைவற்று நின்றாள். அவளை இலட்சியம் செய்யாமல் அவன் புத்தகங்களைப் புரட்டுவதில் ஈடுபட்டான்.

அந்தச் சம்பவத்தை இன்று நினைத்ததும் புரொபசர் சாமிநாதனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது. அவர் தமது அலட்சிய பாவத்தை நினைத்து நினைத்து உருகினார். 'ஆஹா! அவள் மனம் அன்று என்ன பாடு பட்டிருக்கும்? அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் மௌனப் பிள்ளையாரைப் போல் அமர்ந்திருந்த என்னை என்னவென்று சொல்வது? அதற்காகத்

நான் அவள் என்னை இப்பொழுது பழி வாங்குகிறாளோ, என்னவோ!' என்று பலவாறாக அவர் வெகு நேரம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

மணி எட்டு அடித்தது. அம்புஜம் 'மீட்டிங்' முடிந்து வீடு வந்து சேர்ந்தாள். அவளுக்கு ஒரே கவலை. கணவன் சொல்லைத் தட்டிவிட்டு வந்தோமே, அவர் 'என்ன சொல்வாரோ, என்னமோ என்று பயந்து கொண்டே தனது கணவரது அறையை நோக்கி நடந்தாள்.

சாமிநாதன் படுக்கையில் அலங்கோலமாகப் படுத்துக் கொண்டிருந்தார். தலையெல்லாம் கலைந்து முகத்தில் சோகத்தின் ரேகை படர்ந்திருந்தது. அதைக் கண்ணுற்றதும் அவளுக்குப் பகீரென்றது. பக்கத்தில் போய் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். தகதக வென்று கொதித்துக் கொண்டிருந்தது. "ஐயோ! நாம் இவரைக் கவனிக்காமல் 'மீட்டிங்' பெரிதென்று போனோமே!" என்று பதறினாள்.

"அம்புஜம், நான் உன்னை எவ்வளவு அலட்சிய பாவத்துடன் நடத்தினேன்? அப்பொழுதெல்லாம் உன் மனம் எவ்வளவு பாடுபட்டிருக்கும்? அதற்காக நீ மன்னித்து விடு!" என்றார் சாமிநாதன்.

"யார், யாரை மன்னிப்பது? நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும். உங்களை அலட்சியம் செய்துவிட்டு 'மீட்டிங்' பெரிதென்று போனேனே, என்னை என்னவென்று சொல்வது? அதற்காக நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும்" என்றாள் அம்புஜம்.

வெகு நாட்களாக இருவர் உள்ளங்களையும் சேர வொண்ணாது தடுத்துக் கொண்டிருந்த கசப்புத் திரை அன்றே விலகியது.


"வாருங்கள், சாப்பிட்டு விட்டுச் சினிமாவுக்குப் போவோம். உங்கள் ஆசையை நிறைவேற்றா விட்டால் இன்றிரவு பூராவும் எனக்குத் தூக்கமே வராது போலிருக்கிறது!" என்றாள் அம்புஜம்.

அன்பெனும் பாசத்தால் கட்டுண்ட சாமிநாதனுக்குப் புதிய தெம்பு எங்கிருந்தோ வந்தது. உடனே எழுந்திருந்து தலையை வாரிக் கொண்டு சாப்பிடத் தயாரானார். அதற்குள் அம்புஜம் வீட்டுக்குச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்த டிரைவரை அழைத்து, "டிரைவர்! இங்கேயே சாப்பிட்டு விட்டுத் தயாராக இரு, வெளியில் போக வேண்டும்" என்று கட்டளையிட்டு விட்டுக் கணவனுக்கு உணவு பரிமாறுவதற்காகச் சமையல் கட்டினுள் நுழைந்தாள்.

அன்று அம்புஜம் தானே முனைந்து நின்று சாமிநாதனுக்கு உணவு பரிமாறுவதில் ஈடுபட்டாள். எல்லையில்லாத அன்புப் பிரவாகத்தைக் கண்ட அவர் தத்தளித்தார். இருவரும் சாப்பிட்டுவிட்டுத் தயாராகக் காத்துக் கொண்டிருந்த காரில் ஏறி உட்கார்ந்தனர்.

"டிரைவர்! நேராக ராக்ஸி தியேட்டருக்குக் காரை விடு!" என்றாள் அம்புஜம்.

'இவ்வளவு நேரமாகியும் வீட்டுக்குப் போக முடியவில்லையே!' என்று வருத்தத்தில் டிரைவர் அவர்களிருவரையும் வழியில் திட்டிக் கொண்டே சென்றான். ஆனால் காரில் உட்கார்ந்திருந்த இருவர் உள்ளங்களோ இன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.



போலீஸ்காரன்:—நடு ரோட்டிலே சண்டையா போடுகிறீர்கள்? உங்களாலே எவ்வளவு இடைஞ்சல்? வாருங்கள், ஸ்டேஷனுக்கு!

சண்டை யிட்டவர்களில் ஒருவர்:—ஸ்டேஷனுக்கு வந்தால் அங்கே இடைஞ்சலில்லாமல் சண்டை போட முடியுங்களா?

படித்துப் பார்!

தயானந்த ஜோதி

காந்தி மகாத்மாவை உலகத்துக்கு வழங்கிய குஜராத் தேசம் மற்றொரு மகாத்மாவை இந்தியாவுக்குத் தந்தது. அவர்தான் சுவாமி தயானந்த சரஸ்வதி. சுவாமிஜி காந்தி மகாத்மா பிறப்பதற்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன் குஜராத்தில் தோன்றினார். அப்போது புராணப் பொய் மூட்டைகளும் மூட நம்பிக்கைகளும் நாடெங்கும் பரவியிருந்தன. ஆரிய தருமத்துக்கும் பாரத தேசத்துக்கும் பேராபத்து உண்டாகக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஸ்ரீ தயானந்தர் மூடக் கொள்கைகளை ஒழிப்பதற்காக அரும்பாடு பட்டார். ஆயுட்காலம் முழுவதும் ஹிந்து மதத்துக்கு அருந்தொண்டாற்றினார். கடைசியில் காந்தி மகாத்மாவுக்கு நேர்ந்த கதி அவருக்கும் ஏற்பட்டது. மகாத்மா தயானந்தருக்கு அவருடைய பகைவர்கள் விஷம் வைத்துக் கொன்று விட்டார்கள்.

மகான் தயானந்தருடைய வாழ்க்கை வரலாற்றை சுவாமி சுத்தானந்த பாரதியார் **தயானந்த ஜோதி** என்ற ஒரு புத்தகமாக எழுதியிருக்கிறார். மிகவும் சிரமப்பட்டு, பல நூல்களை ஆராய்ந்து வெகு பக்தி சிரத்தையுடன் சுவாமிஜி இந்த நூலை எழுதியிருக்கிறார். ஹிந்து மதத்துக்குப் புத்துயிர் தந்த ஒரு மகானுடைய வாழ்க்கை வரலாற்றை இவ்வளவு அழகாக எழுதி வெளியிட்டிருப்பதற்காக ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரைப் பெரிதும் பாராட்டுகிறோம். விலை ரூ. 2-12-0. பிரசுரம்: ஆரிய சமாஜ் (சென்ட்ரல்) 34, ஆதியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

ஆரோக்கியமும் ஆசனமும்

‘சுவரை வைத்துத்தான் சித்திரம்’ என்று தமிழில் ஒரு அருமையான பழமொழி உண்டு. இதை நம் முன்னோர்கள் உணர்ந்திருந்தார்கள். எல்லாச் செல்வத்திற்கும் மேலாக தேக ஆரோக்கியச் செல்வத்தையே அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். எண்பது ஆண்டுகளும் நூறு ஆண்டுகளும் வாழ்ந்து சாதிக்க முடியாத பல அரும்பெருங் காரியங்களைச் சாதித்தார்கள். அவர்கள் வழி வந்த நாம் சுவரே இல்லாமல் சித்திரம் எழுத முயற்சிக்கிறோம். இதன் விளைவாக எப்போதும் நோய்க்கு உள்ளாகிறோம். எடுத்ததற்கெல்லாம் மருந்துப் புட்டியைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் ஓடுகிறோம். ஆரோக்கியத்தை விலை கொடுத்து வாங்கிவிட முடியுமென்று நினைக்கிறோம். இது எவ்வளவு தப்பு என்பதை ஸ்ரீ வி. என். குமாரஸ்வாமி தாம் எழுதிய **ஆரோக்கியமும் ஆசனமும்** என்ற புத்தகத்தில் அற்புதமாக விளக்கியிருக்கிறார். பாரத நாட்டின் பண்டைக் காலத்தில் பிரபலமாக விளங்கிய ஆசனம் என்னும் தேகாப்பியாசப் பயிற்சியின் பெருமையையும் இதில் அழகாக விவரித்திருக்கிறார். எந்தெந்த ஆசனத்தால் எந்தெந்த வியாதியைப் போக்கிக் கொள்ளலாம் என்பதையும் நன்கு குறிப்பிட்டிருக்கிறார். தேகாரோக்கியத்தைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும் படித்துப் பயனடைய வேண்டிய அருமையான புத்தகம். விலை அணா 12. பிரசுரம்: வி. என். குமாரஸ்வாமி அண்ட் சன்ஸ்; 216, திருவொற்றியூர் ஹைரோட், தண்டையார் பேட்டை, சென்னை, 21.


உலக மேதைகள்

புகழ் பெற்ற ஆங்கில அறிஞர் ஒருவர் மேதைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, “சிலர் பிறக்கும் போதே மேதைகளாகப் பிறக்கிறார்கள்; சிலர் தங்கள் முயற்சியால் மேதைகளாகிறார்கள்; சிலர் மீது மேதை திணிக்கப்படுகிறது” என்று கூறினார். அவ்வித மேதைகளில் ஒருவரான ஷேக்ஸ்பியர் எவ்வளவு சிரமப்பட்டு மேதையாகியிருக்கிறார் என்பதை ஜனாப் அப்துற் றஹீம் எழுதியுள்ள **உலக மேதைகள்** என்ற புஸ்தகத்தில் படிக்கும்போது மிக ரசமாக இருக்கிறது. நாடகம் பார்க்க வரும் பிரபுக்களின் குதிரைகளைப் பார்த்துக் கொள்ளும் சிறுவனாக இருந்த ஷேக்ஸ்பியர் உலகம் போற்றும் நாடகாசிரியனாவது என்றால் சுலபமான காரியமா, என்ன?

இப்படிப் பல துறைகளிலும் பாடு பட்டுப் புகழ் பெற்ற மேதைகளில் காந்திஜி, ஜவாஹர்லால் நேரு, ஐன்ஸ்டீன் முதலிய பத்துப் பேர் வாழ்க்கை வரலாற்றை வெகு ரஸமாக எழுதி **உலக மேதைகள்** என்ற தலைப்புடன் வெளியிட்டிருக்கிறார் ஜனாப் அப்துற் றஹீம். விலை ரூ. 1—8—0. பிரசுரம்: யூனிவர்ஸல் பப்ளிஷர், 155-156 அங்கப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. சென்னை.

No. 4

யானை எதற்கு!



PLAN OF K.S COLLEGE
வக்கீல் :— நீங்கள்தானே இந்தக் காலேஜ் பிரின்ஸிபால்? பி. ஏ. படிக்கிற பையன்களுடைய 'லிஸ்டை'க் கொஞ்சம் காண்பிக்கிறீர்களா?
பிரின்ஸிபால் :— நீங்கள் யார்? சென்ஸஸ் உத்தியோகஸ்தரா?
வக்கீல் :— இல்லை, சார்! என் பெண்ணுக்கு இந்த ஆவணியிலாவது கல்யாணத்தை முடிக்கலாமென்று பார்க்கிறேன்!
பையன் :— பக்கத்து வீட்டுச் சோமு பீபின்ஸ் பார்க்கிலே யானை மேலேறிச் சவாரி செய்யப் போகிறானாம். எனக்கும் காசு கொடு, அப்பா! நானும்......
அப்பா :— காசுக்கு நான் எங்கேடா போவேன்? யானை மேலே உட்கார்த்தால்தான் உட்கார்ந்த மாதிரி இருக்குமா? என் மேலே உட்காரேன்!
பாட்டு வாத்தியார் :— பல்லவி, அநுபல்லவி, சரணம் எல்லாவற்றையும் ஒரே வாரத்தில் உங்கள் பெண் பாடும்படி பழக்கி விடுகிறேன், ஸார்!
தனவான் :— வேண்டாம், வேண்டாம்! என் பெண் இன்னக் குழந்தை. முதல் வருஷம் பல்லவி, அதற்கடுத்த வருஷம் அநுபல்லவி, அப்புறம் சரணம் சொல்லிக் கொடுங்கோ!

சம்பளம் உயர்ந்தது!

கோமதி ஸ்வாமிநாதன்

இன்று அவனுக்கு உற்சாகமளித்த விஷயம் அவன் சற்றும் எதிர்பாராமல் ஐந்து ரூபாய் அதிகமாக வாங்கியதுதான்! "ரகுநாதா! உனக்கு இந்த மாதத்திலிருந்து ஐந்து ரூபாய் உயர்த்தும்படி மானேஜர் சொல்லியிருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டே எண்பத்தைந்து ரூபாய்களைக் காஷியர் அவனிடம் கொடுத்தபோது அவன் செவிகள் அந்த வார்த்தைகளை நம்ப மறுத்தன. வழக்கமாக வாங்கும் எண்பது ரூபாய்களைத் திருப்பித் திருப்பி எண்ணிய பிறகும்கூட கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு அதிகமாகத்தானிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்கத்தான் அவனுக்குக் காஷியரின் வார்த்தைகளில் நம்பிக்கை வந்தது. "ரொம்ப சந்தோஷம் சார்!" என்று சொல்லிவிட்டு நோட்டுகளை மடக்கிப் பையில் போட்டுக்கொண்டு தன் இடத்திற்கு வந்தான். எண்பது ரூபாய்களால் அளிக்க முடியாத சந்தோஷத்தை அந்த அதிகப்படியாக வந்த ஐந்து ரூபாய் நோட்டால் அளிக்க முடிந்தது. தனக்கு அவசியமான ஒரு சாமானை தனக்குச் சம்பள உயர்வு கிடைத்ததன் ஞாபகார்த்தமாக வாங்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். ஆனால் அது எந்தச் சாமான் என்று அவனால் உடனே நிச்சயம் செய்ய முடியவில்லை.

அவன் கோட்டு வெகு நாட்களுக்கு முன்னாலேயே பழைய துணி வாங்கும் ஜாடிக்காரனிடம் போக வேண்டியது. ஆனால், வரும் சில வருஷங்களுக்குப் புதுக் கோட்டு தைத்துக் கொள்ளும் அளவிற்குத் தன் பொருளாதார நிலைமை அபிவிருத்தியடைந்துவிடாது என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் அதை ஜாடிக்காரனிடம் போடுவதற்குப் பதிலாகத் தன் முதுகிலேயே போட்டுக் கிழித்தான். இந்த ஐந்து ரூபாயில் வேறு புதுக்கோட்டு வாங்கிவிடலாமென்று நினைக்கவே சாத்தியமில்லாமலிருந்தது. தையற் கூலிக்குக்கூட அந்த ரூபாய் இந்தக் காலத்தில் போதாதென்று அவனுக்குத் தெரியும்! அப்புறம் அவன் துணிக்கு எங்கு போவது?



அப்போது பார்வதியின் முகம் அவன் மனத்திரையில் தோன்றியது. "பாவம்! நமக்கு வாழ்க்கைப்பட்டு அவள் என்ன சுகத்தைக் கண்டாள்? சந்தோஷம், இன்பம் என்பதைக் கதைகளில்தான் வாசித்திருக்கிறாள்! பேசாமல் இந்த ஐந்து ரூபாயில் அவளுக்கு இரண்டு உயர்ந்த ரக ஜம்பர் துணி வாங்கிக் கொடுத்துவிடலாம். திடீரென்று கொண்டுபோய்க் கொடுத்தால் அவள் எவ்வளவு சந்தோஷமடைவாள்?" என்று எண்ணியபோது அவன் சபலம் வேரற்ற மரம்போல் கீழே சாய்ந்தது.

ஆனாலும் அதை மறுபடியும் தூக்கி நிறுத்துவதுபோல் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம் அவன் மனத்திரையிலே 'பளிச்' சென்று தோன்றியது.

★

ரகுநாதன் மணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் வைத்து ஒரு வருஷம்தான் ஆகியிருந்தது. அவன் மனைவி பார்வதி நல்ல பெண்தான். இருந்தாலும் சாதாரண குமாஸ்தா உத்தியோகம் பார்க்கும் ஏழைக் கணவனுக்கு வாழ்க்கைப் பட்டதினால், தன் போன்ற அனேகம் பெண்கள், கார், பங்களா, முதலியவற்றுடன் அனுபவிக்கும் உல்லாச வாழ்க்கை தனக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்ற தாபம் அவளுக்கு அதிகம் உண்டு. அவள் இதயக் குமுறல் சில சமயங்களில் வார்த்தை ரூபமாகவும் வெளிப்படும். "இதென்ன உத்தியோகம் வேண்டியிருக்கிறது? வாங்கும் சம்பளம் பத்து நாட்களுக்குக் கூடப் போதவில்லை! மீதி நாட்கள் பட்டினிதானிருக்க வேண்டியிருக்கிறது. இப்படியிருந்தால் நல்ல துணிமணிகளைக்கூட இந்த ஜன்மத்தில் காணப்போவதில்லை. இந்த கவர்னர் வேலையை விட்டுத் தொலைத்துவிட்டு வேறு உத்தியோகம் தேடித் தொலைக்கக் கூடாதோ?" என்று வெறுப்பு தொனிக்க அவள் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் அவன் உள்ளத்தை 'சுரீ'ரென்று தாக்கும். "பார்வதி! எந்தச் சம்பளத்திலும் சந்

சோகமாகக் காலத்தைக் கழிப்பது நம் மனோபாவத்தைப் பொறுத்திருக்கிறது. எப்போதுமே இப்படி இருந்துவிடப் போகிறோமா என்ன? இன்று கீழே இருப்பவர்கள் நாளை அவசியம் மேலே போவார்கள்" என்று அவளைச் சாந்தப்படுத்த முயற்சிப்பான் அவன்.



அன்று ஒருநாள் காரியாலய நண்பன் ஒருவன் சுகுநாதனிடம் தான் சங்கீதக் கச்சேரிக்கு வாங்கியிருந்த இரண்டு டிக்கட்டுகளைக் கொண்டு வந்து, "சுகு! நான் அயலூர்போக வேண்டியிருப்பதால் சங்கீதக் கச்சேரிக்குப் போக முடியாது. இரண்டு டிக்கட்டுகள் இருக்கின்றன. முதல் வகுப்பிற்கானவை. நீயும் உன் மனைவியும் போகலாம்" என்று சொல்லிக் கொடுத்தான். சுகுவின் உள்ளம் உற்சாகத்தால் பூரித்தது. திடீரென்று பார்வதியிடம் போய் "சங்கீதக் கச்சேரிக்குப் புறப்படு" என்று சொல்லி அவள் முகத்தில் எதிர்பாராத ஆனந்தம் ததும்புவதைப் பார்க்கவேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டே வீட்டிற்கு வந்தான்.

அவன் வந்ததையும் கவனியாது பார்வதி ஏதோ காரியத்தில் ஈடுபட்டிருந்தாள். அவள் பின்னால் வந்து நின்ற சுகுநாதன் "பார்வதி! சீக்கிரம் கிளம்பு! இன்று சங்கீதக் கச்சேரிக்குப் போகலாம். முதல் வகுப்பு டிக்கட் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் அடக்க முடியாமல் பீறிட்டெழும் ஆனந்தத்துடன். அவன் கையில் அவன் நண்பனால் அளிக்கப்பட்ட இரண்டு சிவப்பு டிக்கட்டுகள் இருந்தன.

அதே வினாடியில் அவன் முற்றிலும் எதிர்பாராத சம்பவம் நடந்தது. பார்வதி பெண் புலிபோல் சீறினாள். "என் லக்ஷணத்திற்கு சங்கீதக் கச்சேரி ஒன்றுதான் குறை! கட்டிக்கொள்ள உருப்படியாய் ஒரு புடவை வாங்கித்தர வக்கு இல்லை. கச்சேரிக்குக் கூப்பிட வந்துவிட்டீர்களே! நான் ஒரு இடத்திற்கும் வரத் தயாராயில்லை. உள்ளே நான் மட்டும் இங்கேயே அடைத்துக் கிடந்து உயிரை விடுகிறேன். நான் என்ன எல்லோரையும் போல் நிறையச் சம்பளம் வாங்கும் கணவனுக்கா வாழ்க்கைப்பட்டிருக்கிறேன்?" என்று பொரிந்து கொட்டினாள். அத்துடன் நின்று விடவில்லை. வெடுக்கென்று கணவன் கையிலிருந்த டிக்கட்டுக்களைப் பிடுங்கிச் சுக்கு நூறாகக் கிழித்தும் எறிந்து விட்டாள்.

அந்தச் சம்பவத்தைப் பற்றி அப்புறம் அவன் பேச்சே எடுக்கவில்லை. அதற்கப்புறம் ஒரு நாளும் அவன் பார்வதியை வெளியே போக அழைத்ததும் இல்லை. அவளுக்கு எதிர்பாராத ஆனந்தம் அளிக்க வேண்டும் என்று எண்ணியது மில்லை. அவர்கள் தாம்பத்ய சக்கரம் எண்ணெய்ப் பசை யில்லாத அச்சில் சுற்றும் சக்கரம்போல மெதுவாகச் சுற்றிக் கொண்டிருந்தது.

★

எதிரே உள்ள ஒரு செருப்புக்கடை அவன் கவனத்தைக் கவர்ந்ததோடு நிற்கவில்லை. அவன் சிந்தனைக்கும் முற்றுப் புள்ளி வைத்தது. வெகு நாட்களாகவே அவனுக்கு ஒரு ஜதை பாதரக்ஷை தேவையாக இருந்தது. ஆனால் அதற்காக ஐந்தாறு ரூபாய்கள் ஒதுக்க முயன்றபோது அவன் குடும்ப நிதி விவகாரம் அதற்கு அனுமதியளிக்கவில்லை. ஆகையால் இன்று அதிகமாக இருக்கும் ஐந்து ரூபாயை அதற்கு ஒதுக்கி விடுவது என்று தீர்மானித்துக் கடைக்குள் நுழைந்தான். வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாதரக்ஷைகளின் வர்ண ஜாலங்களும் விதவிதமாதிரிகளும் அவனுக்குப் பிரமிப்பை உண்டாக்கி விட்டன. அவைகளைப் பார்த்ததும் விலை கேட்கக்கூடத் தயங்கினான். எட்டு ரூபாய் பத்து ரூபாய் என்று கடைக்காரன் பதில் சொன்னால் ஏமாற்றம்தானே அடைய நேரிடும் என்று பயந்தான். கடையில் சுமாரான ஒரு பாதரக்ஷை ஜோடியைச் சுட்டிக் காண்பித்து எடுக்கச் சொன்னான். அவன் உத்தரவிற்குக் காத்திருந்த கடைக்காரப் பையன் அந்த ஜதையை எடுத்துத் தூசி தட்டித் துடைத்துவிட்டு சுகுநாதன் கால்களில் தானே அவைகளை மாட்டி "உங்களுக்கென்றே பிரத்தியேகமாகத் தைத்து வந்தது போலல்லவா இருக்கிறது!" என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான். கடைக்

காரன் ஒவ்வொரு வாடிக்கைக்காரரிடமும் இப்படித்தான் சொல்லுவான் என்று ரகுநாதன் கண்டானா? அவன் உள்ளம் ஆனந்தத்தால் செழித்தது. தான் ஒதுக்கியிருக்கும் ஐந்து ரூபாயுடன் கூட அரை ரூபாய் கால் ரூபாய் போனாலும் போகிறது என்று முடிவு செய்து "என்ன விலை தம்பி?" என்று கேட்டான் அந்தப் பையனைப் பார்த்து. நியாயஸ்தலத்தில் கைதி, நீதிபதியின் தீர்ப்பு வார்த்தைகளை எதிர் பார்த்து நிற்பதுபோல், கடைக்காரனின் பதிலை ரகுநாதன் எதிர்பார்த்தான்.


கடைக்காரன் சொன்ன பதில் அவனை ஒரேயடியாய் பிரமிப்பில் ஆழ்த்திவிட்டது. தான் செருப்புக் கடையில் இருப்பது நிஜம் தானா என்றுகூடச் சந்தேகம் வந்துவிட்டது. "என்ன ஐயா! இரண்டரை ரூபாய் ஜாஸ்தி என்று நினைக்கிறீர்களா? இதே ஜோடி போன வாரம் வரை நாலு ரூபாய்க்கு விற்றது. புதுச் சரக்கு வரப்போவதால் இதை இந்த விலைக்குக் கொடுக்கிறோம். வேறு கடைக்குப் போனால் இந்த விலைக்கு உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்காது" என்றான் கடைக்காரப் பையன் வெகு இதமாக. ரகுநாதன் பதிலே பேசவில்லை. ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து மீதி இரண்டரை ரூபாய்களை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டான். காலில் மாட்டிய புதுச் செருப்புடன் கடையை விட்டு வெளியே வந்தான்.

அப்போது பார்வதியின் உருவம் அவன் மனத்திரையில் மறுபடியும் தோன்றியது. "பாவம்! அவளுக்கு ஒன்றும் வாங்காமலிருக்கக் கூடாது. மேலும் நாம் போட்ட திட்டத்தில் இரண்டரை ரூபாய் மிஞ்சிவிட்டது. அதில் அவளுக்கு ஒரு நல்ல சில்க் ஜம்பர் துணி வாங்கிவிடுவோம். அவள் சந்தோஷப்பட்டாலும் சரி சந்தோஷப் படாவிட்டாலும் சரி" என்று தீர்மானித்தான். மறு நிமிஷத்திலேயே ஒரு துணிக் கடையில் நுழைந்து கண்களைப் பறிக்கும்படியான வழ வழப்புள்ள சில்க் துணியில் ஒரு கஜத்தை இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கினான். அந்தத் துணியின் விலையையும் அவன் சுமார் நாலு ரூபாய் வரை தான் மதிப்பிட்டான். ஆகவே அது அவன் எதிர்பார்த்த விலைக்கு மிகவும் குறைவாகத்தானிருந்தது. காலில் புதுச் செருப்புடனும் கையில் புதுத் துணிப் பொட்டணத்துடனும் உற்சாகமாக வீட்டை நோக்கிக் கிளம்பினான்.

வழியில் கொஞ்சம் புஷ்பம் வாங்கிக் கொண்டான். கடைத்தெருப் பிள்ளையார் கோவிலுக்குள் நுழைந்து மூன்று சுற்று சுற்றினான். பிறகு அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு நடந்தான். அன்று வழக்கத்தை விட அதிக பூரிப்புடன்தான் அவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

கூடத்திற்கு வந்து கையிலிருந்த சாமான்களை மேஜைமீது வைத்துவிட்டுச் சட்டையைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டினான். பிறகு சாவகாசமாகக் காலை நீட்டிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தான். காப்பியைக் கொண்டுவந்து அவன் கையில் கொடுத்துவிட்டு மேஜையருகில் நின்ற பார்வதிக்கு அதன்மேலிருந்த பூப்பொட்டணம் தென்பட்டது. அதைக் கையிலெடுத்த போது அதனடியில் மற்றொரு பொட்டணமும் இருப்பது தெரியவந்தது. "இது என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவன் பதிலுக்குக்கூட காத்திராமல் அதைப் பிரித்தாள். கவர்ச்சிகரமான அந்தத் துணி அவள் கைகளை விட்டு நழுவிக் கீழே விழுந்தது. "நன்றாயிருக்கிறதா? உனக்குத்தான் வாங்கிவந்தேன்" என்று அவள் முகத்தைப் பார்க்காமலேயே வினவினான் ரகு. "ரொம்ப நன்றாயிருக்கிறது! விலை கஜம் ஐந்து ரூபாய்க்கு மேலிருக்கும் போலிருக்கிறதே! எனக்கு மிகவும் பிடித்த கலர்!" என்றாள் பார்வதி அடக்கமுடியாத உற்சாகத்துடன்.

பார்வதி இவ்வளவு உற்சாகம் காட்டியது அவன் முற்றிலும் எதிர்பாராத விஷயம் தான். ஆகவே அவன் உற்சாகமாக இருக்கும்போதே மலிவாகத் துணி வாங்கி வந்த





பாரிஸ்டர் (பினாங் மார்க்கெட் செட்டியாரிடம்):— "என்னிடம் நிஜத்தைச் சொல்லி விடுங்கள்; நீர் இப்போது சொன்னதுதான் உண்மையான விவரமா?"

செட்டியார்:— "உண்மையான விவரந்தான்; ஆனால் இதை வைத்துக்கொண்டு நீங்கள் உங்கள் சௌகரியம்போல் மாற்றிக் கொள்ளலாம்."

தன் சாமர்த்தியத்தை அவளுக்குத் தெரிவிக்க விரும்பினான் அவன். துணியும், தன் பாதரக்ஷைகளும் சேர்த்துமே ஐந்து ரூபாய் ஆகவில்லை என்று தனக்குப் பேரத்தில் உள்ள சாமர்த்தியத்தைச் சொல்லிப் பார்வதியிடம் பாராட்டுதலைப் பெற ஆசைப்பட்டான். அதே கிளையில் "இரண்டு..." என்று சொல்ல ஆரம்பித்தவன் மின்சார அதிர்ச்சியினால் தாக்கப்பட்டவன்போல் 'டக்' என்று பேச்சை நிறுத்தினான். "என்னவோ சொல்ல வந்தீர்கள்! பேச்சை நிறுத்திவிட்டீர்களே!" என்றாள் பார்வதி கீழே விழுந்த துணியை எடுத்துக் கொண்டே. ஒரு தொண்டையைக் கனைத்துக் கொண்டான். "இல்லை! இரண்டு கஜமாக வாங்க வேண்டுமென்று ஆசையாகத்தானிருந்தது. ஆனால் கஜம் ஐந்து ரூபாய்க்குக் குறையமாட்டேன் என்று கடைக்காரன் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டான்" என்றான். அவன் குரலில் உணர்ச்சி இல்லை. அதற்கு பதில் பதட்டம் இருந்தது. "அதற்கென்ன? அடுத்த மாதம் இன்னும் ஒன்று வாங்கிக் கொண்டால் போகிறது! நமக்கு எவ்வளவோ செலவிருக்கும்போது இதற்குப் பத்து ரூபாய்களை வைக்க முடியுமா? இந்தத் துணியைப் பார்த்தே எல்லோரும் பிரமித்து விடுவார்களாக்கும்!" என்று சொல்லிக் கொண்டு காப்பி தம்ளருடன் உள்ளே போகப் புறப்பட்டாள் பார்வதி.

வாழ்க்கையில் அவன் அப்பட்டமான பொய் சொன்னது இதுதான் முதல் தடவை. இதுவே கடைசித் தடவையாகவும் இருக்க வேண்டுமென்று அவன் விரும்பினான். அவன் உண்மையைத்தான் சொல்ல ஆரம்பித்தான். ஆனால் தான் வாங்கிய செருப்பின் நினைவு வரவே அவனால் மேலே பேச முடியவில்லை. அதை அவன் பிள்ளையார் கோவில் வாசலில் கழற்றிப் போட்டுவிட்டு உள்ளே போய் வணங்கினான். திரும்பி வரும்போது ஞாபகமறதியாக வெறும் காலுடனே வீட்டிற்கு வந்து விட்டான். எந்த அதிர்ஷ்டசாலியோ அதை அப்போதே கொண்டு போயிருப்பான்! இன்னுமா அங்கிருக்கும்? அதனால்தான் இரண்டென்று சமாளித்துக் கொண்டான். தான்செருப்பு வாங்கிக் கையோடு கையாகத் தொலைத்த வைபவத்தைச் சொல்வதைவிடச் சொல்லாமலிருப்பதே மேலென்று முடிவுக்கு வந்தான். அதே கணத்தில் மற்றொரு மனோதத்துவ விவகாரமும் அவன் நினைவுக்கு வந்தது. 'தான் மதிப்பிட்டிருப்பதைவிட, குறிப்பிட்ட எந்த சாமானும், குறைந்த விலை என்று தெரிந்தால், பொதுவாக ஸ்திரீகளுக்கு அதிலுள்ள மோகம் குறைந்து ஸ்வாரஸ்யம் குன்றிவிடும்' என்று அவன் யாரோ சொல்லக் கேட்டிருக்கிறான். ஆகவே அவன் எண்ணியபடியே துணியின் விலையை உயர்த்திச் சொல்வதுதான் பார்வதிக்குத் திருப்திகரமாக இருக்கும் என்று முடிவு செய்தான்.

பார்வதியின் பூரிப்பு அவனுக்கு இதுவரை கிட்டாத ஆனந்தத்தை அளித்தது. அந்த ஆனந்தத்தில் ஒரு பொய் சொல்லி விட்டதற்காக அவன் மனதை அலட்டிக் கொள்ளவில்லை. வாசற் பக்கம் யாரையோ கூப்பிடுவதுபோல் போய் சட்டைப் பையிலிருந்த செருப்புக்கடை பில்லையும் துணிக்கடை பில்லையும் தூள் தூளாகக் கிழித்துப் பார்வதியின் கண்களில் படாமலிருப்பதற்காகச் சாக்கடையில் வீசி எறிந்தான். மனதிலிருந்த எள்ளளவு பாரமும் மாயமாய் மறைந்தது. அன்று ஏற்பட்ட இன்பம் என்றும் சிரஞ்சீவியாக மனதில் இருக்கும் போல் அவனுக்குத் தோன்றியது.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி

273. எதிரி உண்டோ?

ராமனுடைய சேனையில், எவ்வளவோ அனுபவம் உள்ள எத்தனையோ வீரர்கள் இருக்கிறார்கள்.

அங்கதன் அனுபவம் இல்லாத இளைஞன்தான். அவனைத் தூதனாக அனுப்புகிறான் ராமன்.

இதை எண்ணினான் அங்கதன். அவனுக்கு ஒரே சந்தோஷம் உண்டாய் விட்டது. ராமனை வணங்கி விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து போகிறான்.

பாரினில் வணங்கிச், சீ யம்
விண்மிசைப் படர்வதே போல்,
வீரன்வெம் சிலையிற்கோத் த
அம்பென விசையிற்போ னான்;-
'மாருதி அல்லனா கில்
நீபெறும் மாற்றம்பெற் றேன்
யாரினி என்னோடொப் பார்'
என்பதோர் இன்பமுற் றான்.

[பாரினில் வணங்கி: உடம்பெல்லாம் தரையில் படும்படியாக ராமனை வணங்கி; சீயம் விண் மிசைப் படர்வதே போல்: ஒரு சிம்மம் வானத்தில் பாய்வது போல; வீரன் வெஞ் சிலையிற் கோத்த அம்பென: ராமன் தன் வில்லில் கோத்து விட்ட அம்பைப் போல விசையிற் போனான்: அவ்வளவு வேகமாகப் போனான்:—அப்படிப் போகும் போது தனக்குள்ளே சொல்லிக் கொள்ளுகிறான்:

மாருதி அல்லனாகில் நீ பெறும் மாற்றம் பெற்றேன்: தூதாக அநுமன் போக வேண்டும், அல்லாத பக்ஷம் போக வேண்டியது நீ தான் என்று சொல்லிய பெருமையை அடைந்து விட்டேன்: யாரினி என்னோடு ஒப்பார்: இனி யார் தான் எனக்குச் சமானம் ஆவார்கள்: என்பதோர் இன்பம் உற்றான்: என்று எண்ணுவதால் ஆகிய ஆனந்தத்தை அடைந்தான் அங்கதன்.]

அங்கதனுடைய உத்ஸாகத்தைப் பார்த்துக் கொண்டோம். ராமனுடைய தூதனாக அல்லவா போகிறான்.

அரக்கர்களுடைய பார்வையே போதும் எதிரிகளை எரிப்பதற்கு! சட்டி ஒன்றும்' வேண்டாம். அத்தகைய அரக்கர்களை வெல்வதற்காக பாற்கடலில் தூங்கிக் கொண்டிருந்த தூக்கத்தை விட்டு விட்டு அயோத்தி வந்து அவதரித்தான் ராமன்.

அத்தகைய ராமனது தூதன் என்ற எக்களிப்புடன் இலங்கை மதில்களைக் கடக்கிறான் அங்கதன்.

அயில்கடந்(து) எரிய நோக் கும்
அரக்கரைக் கடக்க, ஆ ழித்
துயில்கடந்(து) அயோத்தி
வந் தான்
சொற்கட வாததூ தன்,—
வெயில் கடந் திலாதகா வல்
(மேருவின் மேலும் நீண் ட)
எயில்கடந் திலங்கையெய் தி
அரக்கன(து) இருக்கைபுக் கான்.

[அயில் கடந்து எரிய நோக்கும் அரக்கரைக் கடக்க: வேலுக்கு முன்பாகவே கண்ணின் பார்வை போய் எதிரிகளை எரிக்கும் அரக்கர்களுடைய ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக; ஆழித் துயில் கடந்து அயோத்தி வந்தான்: பாலாழியில் துயில்வதை விட்டு அயோத்தி வந்த ராமனது; சொற் கடவாத தூதன்: கட்டளையைத் தலைமேல் கொண்ட அங்கதன்; வெயில் கடந்திலாத: சூரியனே பயந்து ஒதுங்கிப் போக வேண்டிய; காவல், மேருவின் மேலும் நீண்ட, எயில் கடந்து: பல வகைப் பட்ட இயந்திரங்களாலும் வீரர்களாலும் காக்கப்பட்ட உயர்ந்த மதில்களைக் கடந்து; இலங்கை எய்தி அரக்கனது இருக்கை புக்கான்:

இலங்கை நகரத்துக்குள்ச் சென்று ராவணன் கொலுவிருக்கும் மண்டபத்துக்குள்ப் புகுந்தான்.]

கொலுவிருந்த ராவணனைப் பார்த்துக் கொண்டான் அங்கதன். அங்கதனுக்கு வந்த அதிசயம் இப்படி அப்படி அல்ல.

மலையைப் பார்த்துத் தான் இருக்கிறோம். அது தாங்கும் பெரிய பெரிய மரங்களையும் பார்த்திருக்கிறோம். கடல் ஒன்றையும் பார்த்துத்தான் இருக்கிறோம். (நாம் கடலைக் கடந்தோம் என்றுதான் எல்லாரும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே!)

ஆனாலும் இந்தக் காட்சி அவைகள் ஒன்றுக்குள்ளும் வராத காட்சியாக அல்லவா இருக்கிறது!

கல்லுண்டு மரமுண்(டு)ஏ ழைக்
 கடலொன்றும் கடந்தேம்என் னும்

சொல்லுண்டே, இவனை வெல் லும்
 தோற்றத்(து) ஓர் கூற்றம் உண்
 டோ!
எல்உண்ட படைக்கொண் டால்
 எதிருண்டோ! இராமன்கை யில்

வில்லுண்டேல் உண்டென்றெண் ணி
 ஆற்றவும் வியந்துநின் ருன்.

[கல்லுண்டு: மலையின் உருவம் தான் நமக்குத் தெரியுமே; மரம் உண்டு: பெரும் கிளைகளோடு கூடிய பெரிய பெரிய மரங்களையும் பார்த்திருக்கிறோம்; (இந்த இருபது கையோடு கூடிய உருவத்துக்கு ஒப்பாகவா சொல்லும்) ஏழைக் கடலொன்றும் கடந்தேம் என்றும் சொல்லுண்டே: வெகு சாமான்யமானது நாம் கடந்து வந்த கடல், கடல் கடந்ததைப் பற்றி பலரும் வியந்து பேசுகிறது என்றும் இருக்கிறது. இவனைப் பார்த்தால் கடலின் பெருமை எம்மட்டு!

இவனை வெல்லும் தோற்றத்து ஓர் கூற்றமுண்டோ: எமனை யாரும் பார்த்ததில்லை, அவனுக்கு உருவமும் கிடையாது. அந்த எமன் உருவம் ஒன்றை எடுத்து வந்தால் இந்த ராவணனை வெல்ல முடியுமா? முடியாது.

ராமன் கையில் வில்லுண்டேல் உண்டென்று எண்ணி—ஆற்றவும்: அபாரமாக;]

அங்கதன் சிறு பையன்தான். புதிதாகப் போகிறான். ராவணனுடைய பெரிய உருவத்தைக் கண்டு வியக்கிறான். இனி என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

புதிய அரசியல் ஆயுதம்

ரஜனி

கொழும்பு, அக்—23


இலங்கையிலுள்ள இந்தியர்களின் ஓட்டுரிமையைப் பறிப்பதற்காக பிரதமர் சேனநாயகா கொண்டு வந்த தேர்தல் சட்டத் திருத்த மசோதாவைப் பற்றிப் பார்லிமெண்டில் காரசாரமான விவாதம் நடந்தது. பிரதமர் சேனநாயகா இந்தியர் சம்பந்தப்பட்ட வரையில் இலங்கை அரசாங்கத்தின் இலட்சியமென்ன என்பதை ஒளிவு மறைவின்றிக் கூறினார். இந்தியர்களெல்லோரும் ஒப்பந்தக் கூலிகளாகவே இலங்கைக்கு வந்தார்களென்றும், ஒப்பந்தம் முடிந்தவுடன் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டியவர்களென்றும் பண்டித நேருவுக்கு சேனநாயகா முன்பு எழுதியது ஞாபகமிருக்கலாம். அப்பொழுது சேனநாயகா சரித்திரத்தையே பொய்ப்பிப்பதாக நேருஜி சுட்டிக் காட்டினார். சிங்களவர்களுடன் சகல விஷயங்களிலும் சம உரிமையளிப்பதாக வாக்குறுதி யளிக்கப்பட்டதின் பேரிலேயே இலங்கையில் இந்தியர் குடியேறுவதை இந்திய அரசாங்கம் அனுமதித்த தென்பதையும் பண்டித நேரு ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டினார்.

ஆனால், சேனநாயகா பழைய சரித்திரத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இலங்கையில் ஒருகாலும் இந்தியாவில் ஒரு காலுமாக இருக்கும் இந்தியர்களுக்கு ஓட்டுரிமையளிக்க முடியாதென்று அவர் பார்லிமெண்டில் முழக்கினார்.

இந்த விவகாரத்தில் ஸ்ரீ சுந்தரலிங்கம் செய்த சேவையை இந்திய சமூகம் மறப்பதற்கில்லை. பிரதம மந்திரியின் அரசியல் ஆயுதச்சாலையில் புதிய மசோதா கபடமும் வஞ்சகமும் நிறைந்த புதிய ஆயுதமென்று அவர் வர்ணித்தார். இந்த மசோதாவினால் இந்தியர்கள் மட்டுமல்லாமல் இந்தியப் [illegible] களுடைய [illegible] தமிழர்கள், இலங்கை முஸ்லிம்கள் முதலான சகலரும் தாங்கள் இலங்கைப் பிரஜைகளென்று ருசுப்படுத்தினாலொழிய ஓட்டுரிமை பெற முடியுமென்றும், தமிழ்ச் [illegible] மசோதா அமுலிலிருக்கிறதென்றும் அவர் கண்டித்தார். இந்தியாவின் பொறுமையை எல்லையின்றிச் சோதிக்க வேண்டாம் என்றும் எச்சரித்தார். ஆனால் அவருடைய நியாயவாதம் விழலுக்கு இறைத்த நீராக முடிந்தது. சர்க்கார் கட்சியின் வழக்கமான மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு அந்த அக்கிரமமான மசோதா நிறைவேறிவிட்டது.

பாஸ் போர்ட்டுக்குப் புதிய ஏற்பாடு

ஏற்கெனவே இந்தியாவுக்குச் சென்ற இந்தியர்கள் இலங்கைக்குத் திரும்ப வேண்டுமானால் மாகாண சர்க்காரிடம் பாஸ் போர்ட் வாங்க வேண்டுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இதில் ஒரு புதிய மாறுதல் இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரிலிருந்து இலங்கை வர விரும்புவோர் சென்னை நகர பிரதம போலீஸ் கமிஷனரிடமிருந்தும், மற்ற இடங்களிலுள்ளவர்கள் ஜில்லா மாஜிஸ்திரேட் அல்லது அடிஷனல் ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளிடமிருந்தும் பாஸ் போர்ட் வாங்கிக் கொள்ள வசதி செய்திருப்பதாகச் சென்னை மாகாண சர்க்கார் இங்குள்ள இந்திய ஹை கமிஷனர் காரியாலயத்துக்கு அறிவித்திருக்கிறார்கள். [illegible] இந்தியா சென்றிருக்கும் இலங்கை இந்தியர்கள் இதைக் கவனித்து நடந்து கொள்ளவேண்டும்.



[illegible] (பரியாரியாரைப் பார்த்து): என்னங்க, [illegible]



மாலை ஆறு மணி இருக்கும். அழகாகத் தலையை வாரிப் பின்னலை தொங்க விட்டுக் கொண்டு நெற்றியிலே குங்குமப் பொட்டு பிரகாசிக்க வாசலில் வந்து நின்றாள் கமலி.

"இந்த வீட்டில்தான் கமலி என்ற பெண் இருக்கிறாளா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ஓர் இளைஞன்.

தன் மின் வெட்டுப் பார்வையை அவன் மீது திருப்பிய கமலி, "ஆ......மாம்! நீங்கள் யார்?" என்று தழுதழுக்கும் குரலில் கேட்டாள்.

ஒரு முறை அவளுடைய கண்கள் அவனை ஏற இறங்கப் பார்த்தன. வசீகரமான முகத் தோற்றமும், கம்பீரமாக அவன் நின்ற நிலையும், 'இவர் யாராக இருக்கலாம்! பார்த்த முகம் போலிருக்கிறதே!' என்ற சிந்தனையில் அவளை லயிக்கச் செய்தன.

"நீங்கள்தான் கமலியோ?!" என்றான் வந்த இளைஞன்.

ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள் கமலி. அந்த ஒரு கணத்தில் அவள் உள்ளத்திலே ஆயிரமாயிரம் நினைவுகள் தோன்றி மறைந்தன.

"இல்லை. அவள் வெளியே சென்றிருக்கிறாள். வர நேரமாகும். நீங்கள் யார்? வந்த விஷயம் என்ன என்பதைச் சொல்லிவிட்டுப் போனால் நான் அவளிடம் சொல்லுகிறேன்!" என்று ஓர் அபாண்டமான பொய்யைச் சொன்னாள் கமலி.

"நான் அவளுக்கு அத்தான் முறை ஆக வேண்டும். கல்கத்தாவிலிருந்து ஒரு மாத லீவில் வந்திருக்கிறேன். அவளைப் பார்த்து ரொம்ப வருஷங்களாகிவிட்டன. பார்ப்பதற்குத்தான் வந்தேன்" என்று சொல்லித் தன் விலாசத்தை எழுதிக் கொடுத்து விட்டு, வெளியே போகத் திரும்பினான் அந்த வாலிபன்.

'நான்தான் கமலி!' என்று கூற அவள் மனம் துடித்தது. ஆனால் சொல்ல வாய் வரவில்லை. அவள் கண்களிலே நீர் சுரந்தது.

அத்தான் சுந்தரத்தின் வருகையை எவ்வளவு நாட்களாக அவள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாள்! ஆனால் இன்று? வீடு தேடி வந்தவனை யல்லவா அவள் விட்டு விட்டாள்! அவள் விடவில்லை; விதி விரட்டிவிட்டது!

அளவற்ற செல்வத்தின் சுகானுபாவத்திலே திளைக்கும் அவன் எங்கே? ஸ்ரீதேவியின் தமக்கைக்குச் சொந்தமாகி, வறுமையுடன் போராடும் அவள் எங்கே? அவளை அவன் லட்சியம் செய்வானா? இதை நினைக்கவே அவளுடைய உள்ளம் வேதனையால் வெடித்துவிடும்போல் இருந்தது. அவள் மனத்திரையிலே கடந்த கால நினைவுகள் நிழலாடின.

நிலையற்ற இவ்வுலகிலே எது சாசுவதம்? இன்று வந்து நாளை போகும் செல்வம்தான் சாசுவதமா? நீர்க் குமிழி போன்ற மனித வாழ்வுதான் சாசுவதமா?

காலச் சக்கரத்தின் சுழலிலே, உன்னத நிலையிலிருந்த கமலி தாழ்ந்த நிலைக்கு வந்து விட்டாள்.

காலச் சக்கரத்தின் காலடியிலே கிடந்த சுந்தரம் சக்கரத்தின் மேலே ஏறிவிட்டான். அவனுக்கு வாழ்க்கையிலே பணம்தான் குறி. அவளுக்கு என்றைக்குமே அவன் மீது அன்பு உண்டு. ஆனால் அந்த அன்பு அவனுக்கும் உண்டா?

'இருக்காது!' என்றுதான் அவள் மனம் கூறிற்று. சுந்தரம் அவளை மணந்து கொள்வான் என்று எப்படி அவள் எதிர் பார்க்க முடியும்?

செல்வம் கொழித்திருந்த அந்த நாளில் சாறுபோகத்தில் வாழ்ந்து வந்த சிறுமி கமலியிடம் சுந்தரம் அன்பு காட்டி வந்தான். ஆனால் இன்று பெற்றோரை இழந்து, பணத்தை இழந்து, நோயாளியான தன் மாமாவுடன் துன்ப வாழ்வு வாழும் ஏழைக் கமலியை அவன் காதலிப்பானா?

'பணத்தையே பிரதானமாகக் கருதும் மனிதனுடன் வாழ்வதில் என்ன சுகம் இருக்கிறது?' என்று எண்ணினாள் கமலி. ஆயினும் அவளால் அவனை மறக்க முடியவில்லை.

"அம்மா, கமலி! இங்கே வாம்மா," என்ற மாமாவின் அன்புக்குரல் அவள் சிந்தனையைத் தடைப் படுத்தியது.

எழுந்து சென்றாள் கமலி.

"இன்றைக்கு வாரக் கடைசி நாள். அரிசி வாங்க மறந்து போய் விடாதே. ஞாபகப்படுத்தத்தான் கூப்பிட்டேன்" என்று சொன்னவர் கமலியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "என் அம்மா, என்னவோ போல இருக்கே?" என்று பரிவுடன் கேட்டார்.

"ஒன்றுமில்லே, மாமா!" என்று சொல்லி விட்டுப் பையையும் 'ரேஷன் கார்டை'யும் எடுத்துக் கொண்டு அரிசிக் கடைக்குப் புறப்பட்டாள் கமலி.

போகும் வரை கமலியையே பார்த்துக் கொண்டிருந்த மாமா சிவராமய்யர், வேதனை நிறைந்த பெருமூச்சு விட்டார்.

சிவராமய்யர், நாளுக்கு நாள் தம் உடல் நலம் குன்றி வருவதை உணர்ந்தார். மயக்கமும், தலைச் சுற்றலும், ஜுரமும் இருமலும், மாறி மாறி அவரை வாட்டி வதைத்தன. அவரால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. மாதம் இரு முறை கமலியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு எழும்பூர் ஆஸ்பத்திரி வரை போய், இன்ஜெக்ஷன்கள் செய்து கொண்டு வருவதே அவருக்குச் சிரமமாயிருந்தது. வீட்டிலேயே வைத்தியம் செய்து கொள்ளப் பணவசதி வேண்டாமா?

என்ன இருந்தாலும் இன்னும் ஒரு ஆறு மாதத்திற்குமேல் இவ்வுலகில் இருக்க மாட்டோம். அதற்குள் கமலிக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து விட்டால் நம் கடமை தீர்ந்து விடும் என்ற எண்ணம் அவர் மனதில் மேலோங்கி நின்றது. 'சுந்தரம், சுந்தரம்' என்று கமலி அடிக்கடி சொல்லுவாளே, அவன் என்றைக்காவது ஒரு நாள் வந்து கமலியை ஏற்றுக் கொள்ள மாட்டானா? என்று எண்ணி ஏங்கினார் அவர். அவருக்கு 'சுந்தரம் கட்டாயம் வருவான்' என்ற நம்பிக்கை சிறிதும் தளரவில்லை. மாதம் ஒன்று கரைந்து விட்டது.

சுந்தரம் வந்தான்! அவர் நினைத்தபடி சுந்தரம் வந்தே விட்டான்! சுந்தரம் வந்து விட்டான் என்பதை அறிந்ததும் அவருக்கு உடம்பே குணமாகி விட்டது போலிருந்தது. உடலிலே புதியதொரு பலம் தோன்றியது. மிகவும் குதூகலத்துடன் காணப்பட்டார் அவர்.

★

படை பதைக்கும் வெய்யிலில் பஸ்ஸுக்குக் காத்து நின்று, ஆஸ்பத்திரிக்குப் போய் இலவச மருந்துக்காக "க்யூ"விலே நின்று மருந்து வாங்கிக்கொண்டு வியர்க்க விறுவிறுக்க வீட்டிற்குள்ளே நுழைந்தாள் கமலி. உள்ளே மாமா யாருடனோ பேசிக் கொண்டிருப்பது அவள் காதில் விழுந்தது. சிறிது நேரம் நின்று உற்றுக் கேட்டாள்.

அவள் மனம் சந்தோஷத்தினால் துள்ளிக் குதித்தது. அத்தான் சுந்தரத்தின் பேச்சுக் குரல் அல்லவா? அத்தானுக்கு நம்மீது அன்பில்லை என்று நினைத்தோமே, அன்பில்லாமலா இரண்டாந்தரம் இவ்வளவு தூரம் வந்திருக்கிறான்?

"நான் இவ்வளவு நேரம் விஷயத்தை விளக்கிச் சொல்லியும், நீங்கள் நம்பமாட்டேன் என்கிறீர்களே? உங்கள் கமலி எப்படித்தான் இருப்பாள்? அதையாவது சொல்லுங்கள், பார்க்கலாம்! இவளைப் பல வருஷங்களுக்குப் பிறகு பார்த்ததினால் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இன்று நன்றாகக் கவனித்துவிட்டுப் பிறகு சொல்லுங்கள்" என்றார் சிவராமய்யர்.

"இல்லவே இல்லை. அந்தக் கமலியே வேறுதான். அவள் ஏழையாகப் போனதையே என்னால் நம்ப முடியவில்லை. அப்படியே போயிருந்தாலும், அன்று இருந்த அன்புகூடவா போய்விடும்? அன்று 'நீதான் கமலியா?' என்று நான் கேட்டபோது, உங்கள் மருமாள் 'இல்லை' என்று என்னிடம் ஏன் பொய் சொன்னாள்? 'நான்தான் அவளுடைய அத்தான்' என்று சொன்னபோது கூட அவள் முகத்திலே சந்தோஷக் குறி தென்படவில்லையே! என் கமலியாக இருந்தால், என்னை அவள் வரவேற்கும் விதமே வேறாகத்தான் இருக்கும். நான் மானசீகமாக என் கமலியைப் பற்றிப் பல கற்பனைகள் செய்து பார்த்ததுண்டு. அவள் அழகிய



ரோஜா மலருக் கொப்பானவள். அன்பின் வடிவம் என்றால் அன்பின் வடிவம்தான். 'சுந்தரம்' என்று அவள் அன்பொழுக அழைப்பது இன்றைக்கும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது" என்று வர்ணித்துக் கொண்டே போனான் சுந்தரம்.

மெய்ம்மறந்து சிலையாக நின்று கேட்டுக் கொண்டிருந்தாள் கமலி. அவள் மனம் பெருமிதத்தால் பூரித்தது.

ஆவல் பொங்க, மகிழ்ச்சி ததும்ப, உள்ளே ஓடி "அத்தான்! நான்தான் கமலி!" என்று உற்சாகத்துடன்கூறி அவள், ஆர்வத்தோடு அவனை நோக்கினாள். திடுக்கிட்ட சுந்தரம் அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்தான். அந்த ஒரு கணத்திலே, அவன் மனதில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்தது; மின்னல் வேகத்தில் ஓர் எண்ணம்தோன்றி மறைந்தது. அடுத்தகணம் அவன் வதனம் சலனமற்றுக் காணப்பட்டது.

"நாங்கள் பேசினதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா?" என்று அலட்சியமாகக் கேட்டான் சுந்தரம்.

"ஆமாம்!" என்றாள் கமலி.

"நாங்கள் பேசியதை மறுபடியும் ஒரு முறை உனக்காகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்."

கமலி திகைத்துப்போய் "என்னைப் பார்த்த பிறகும் கூடவா அப்படிச் சொல்லினீர்கள்?" என்று கேட்டாள்.

"உன்னைப் பார்த்தால் என் கமலியாகத் தோன்றவில்லையே! என்றான் சுந்தரம். அடுத்த கணம் "நான் வருகிறேன் ஸார்" என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

"என்ன, என்னைப் பார்த்தால் கமலியாகத் தோன்றவில்லையா உங்களுக்கு?" என்று கேட்டாள் கமலி, கண்களில் நீர் ததும்ப.

"என்னால் நம்ப முடியவில்லை" என்றான் சுந்தரம்.

அழமாட்டாக் குறையாகச் சொல்லிப் பார்த்தாள் கமலி. ஆனால் அவன் நம்புவதாக இல்லை. "தாங்கள் என் ஏழ்மையை அறிந்தால் அலட்சியப் படுத்துவீர்களோ என்று எண்ணிப் பொய் சொன்னேன். மன்னிக்கணும்" என்றும் மன்றாடினாள்.

"நிஜமாக நீ கமலியாக இருந்தால், சுந்தரத்தின் மீது அத்தகைய அவநம்பிக்கையே உண்டாகாது" என்றான் அவன். அதோடு அவன் நிறுத்திக் கொள்ளவில்லை. "அவர்கள் இந்த வீட்டைக் காலி செய்து விட்டுப் போய் எவ்வளவு வருஷங்களாகிறதோ? யார் கண்டார்கள்?" என்று ஒரு வெடிகுண்டையும் தூக்கிப் போட்டான்.

காலேஜ் மாணவன்



அப்பா:— இது என்னடா அவசரம்? ரயிலிலிருந்து நான் இறங்கக் கூட இல்லை; அதற்குள்ளே பணம் கேட்கிறாயே!

மகன்:— நானா அவசரப்படுகிறேன்? இன்றைக்கு ரயில் இருபது நிமிஷம் தாமதமாய் வந்திருக்கிறது. தெரியாதா உங்களுக்கு?

கண்ணெதிரிலே நாம் கல்லைப் போல நின்று கொண்டிருக்கையில் 'கமலி எங்கே?' என்று கேட்கிறாரே! அன்று நாம் பொய் சொன்னதனால்தானே வந்தது இந்த வினை! யானை தன் தலையில் தானே மணலை வாரிப் போட்டுக் கொண்ட கதையாக அல்லவா முடிந்து விட்டது என்று கமலி மிகவும் மனம் வெதும்பினாள். கண்ணீர் வெள்ளம் கரை புரண்டு வந்தது. ஆயினும் சிரமத்துடன் அதை அடக்கிக் கொண்டாள்.

அவனை எப்படி நம்ப வைப்பது என்று புரியாமல் மாமாவும் மருமாளும் திகைத்தனர். ஐந்து நிமிஷம் அசைவற்று நின்றாள் கமலி. அவள் உள்ளக் கடலில் சிந்தனை அலைகள் தோன்றி அவளைக் குழப்பின. பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் எடுத்துச்சொல்லி அவனுக்கு ஞாபகப் படுத்தினாள். சுந்தரம் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்தான்.

தன் தலையிலிருந்த ஒரு தழும்பைக் காட்டினாள் அடையாளத்திற்கு. அவன் நம்பவே இல்லை. அதுவும் தனக்குத் தெரியாது என்றான். அவள் நம்பிக்கை யிழந்தாள். அவளுடைய கருவிழிகளில் தேங்கிநின்ற நீர் இதோ வந்து விடுகிறேன் என்று பயமுறுத்திற்று

"என்ன சொல்லியும் என் மனம் நம்பவே மாட்டேன் என்கிறதே! என்ன செய்வது? அப்படியே இவள் உண்மைக் கமலியாக இருந்தாலும் இந்தக் கமலியை என் மனம் விரும்பவில்லை. என் கற்பனைக் கமலி வேறு. இவள் வேறு. என்றைக்காவது ஒரு நாள் உண்மைக் கமலியைக் கண்டு பிடித்து உங்களிடம் அழைத்துக் கொண்டு வருகிறேன், பாருங்கள்!" என்று சிவராமய்யரிடம் கூறி விட்டுக் கிளம்பினான் சுந்தரம்.

மாமா ஸ்தம்பித்துச் சிலை போல உட்கார்ந்திருந்தார்.

கமலியின் சிவந்த முகம் கோபத்தினால் இன்னும் சிவந்தது.

"நீங்கள் என் அத்தான்தானா என்றே எனக்கு இப்போது சந்தேகம் வந்து விட்டது. என் அத்தானாயிருந்தால் இப்படி என் மனம் கலங்கப் பேச மாட்டார். நாம் இருவருமே, வேறு கமலியும், வேறு அத்தானுமாகவே இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் உங்கள் கமலியைக் கண்டு பிடியுங்கள்! நான் என் அத்தானைக் கண்டு பிடித்துக் கொள்கிறேன். இதற்காக நாம் ஏன் மனக் கஷ்டம் அடைய வேண்டும்? நீங்கள் போய் வரலாம்" என்று படபடப்புடன் கூறிவிட்டு உள்ளே போக எழுந்தாள் கமலி. ஆனால் அவளுடைய கண்களை நீர் மறைத்தது.

"பலே!" என்ற வார்த்தை சுந்தரத்தையும் மீறி வெளி வந்தது! தான் படித்த எட்டையே திருப்பிப் படித்த கமலியைக் கண்டு திகைத்துப் போனான் சுந்தரம்!

"நீதான் நிஜக் கமலி!" என்று சிரிப்பொலியுடன் சொன்ன சுந்தரத்தைக் கண்டு திக்பிரமை அடைந்தாள் கமலி.

"நான் விளையாட்டுக்கு உன்னைச் சோதித்தேன். முதல் தினமே நான் உன்னையும், உன் பொய்யையும், உன் பொய்யின் காரணத்தையும் அறிந்து கொண்டு விட்டேன். உன்னைப்போல் நானும் ஒரு சின்ன வேடிக்கை செய்தேன். அதற்குச் சரியாக நீயும் அல்லவா நடித்து விட்டாய்!" என்று அன்புடன் அவள் தளிர்க் கரத்தைப் பற்றினான் சுந்தரம்.

அவளுடைய துயரக் கண்ணீர் ஆனந்த பாஷ்பமாக மாறியது. படுக்கையில் சாய்ந்தவாறு இந்தக் காட்சியைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தார் மாமா சிவராம அய்யர்.

அதுவும் அப்படியா?

"மகாராஜ்! பெண்கள் சொல்லைக் கேளாதவரே இந்த உலகத்தில் கிடையாது" என்றான் மந்திரி.

"என்ன, அப்படிச் சொல்லுகிறீர்கள்? எல்லாருமே அவ்வளவு அசடாக இருப்பார்களா?" என்று கேட்டான் அரசன். அவன் கல்யாணமாகாதவன்.

மந்திரி அதைச் சுட்டிக் காட்டி மிகவும் பணிவுடன், "அதனால்தான் நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள்! கல்யாணமாகிவிட்டால் நான் சொல்வது முற்றிலும் உண்மை என்பதை உணர்வீர்கள்" என்றான்.

"உம் சொல்லை நம்ப முடியவில்லை. நம் தர்பார் அங்கத்தினர்களை நாளைக்கு வரச்சொல்லும். பரீக்ஷை செய்து பார்த்து விடுவோம்" என்றான் அரசன்.

மறுநாள் அரசன் கட்டளைக்கிணங்க, அங்கத்தினர்கள் அனைவரும் வந்து சேர்ந்தனர். அரசன் அவர்களைப் பார்த்து, "உங்களில் மனைவி சொல்லைக் கேட்பவர்கள் எனது வலது புறத்திலும், கேளாதவர்கள் இடதுபுறத்திலும் வந்து நில்லுங்கள்" என்று உத்தரவிட்டான்.

வலது பக்கத்தில் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போயிற்று. இடதுபக்கத்தில் ஒருவரைக்கூடக் காணோம். அரசனுக்கு வரவர அவநம்பிக்கை அதிகரித்தது. அந்தச் சமயம் கடைசியாக நின்று கொண்டிருந்தவர் இடதுபுறத்தில் போய் நின்றார். அரசன் அகமகிழ்ந்து, "நம் அங்கத்தினர்களுக்குள் மனைவி சொல்லைக் கேளாத உத்தமர் ஒருவர் இருக்கிறாரே! பார்த்தீரா, மந்திரி?" என்று கேட்டான்.

மந்திரி அந்த அங்கத்தினரைப் பார்த்து, "உமது தைரியத்தை மெச்சுகிறேன். உம்மால் எப்படி அப்படி இருக்க முடிகிறது?" என்று வியப்புடன் கேட்டான்.

"இல்லை; அவள்தான் கும்பலோடு கும்பலாக நில்லாமல் தனியாக ஒதுங்கியே நிற்குமாறு சொல்லிக் கொடுத்தாள்" என்றார் அந்த அங்கத்தினர். —அஜயம்.



அவர் கட்டை மயிருட னிருக்கவே செலவு செய்கிறார் . . .

ஏழு நாட்களில் நான்கு நாட்கள் இவர் தைக்கும் மோவாய்க்கட்டையுடனிருக்கிறார். அப்படியும் அவர் நாவிதனுக்கு வாரத்தில் மூன்று க்ஷவரங்களுக்கு 6 அணா வரையில் செலவு செய்கிறார்.




அவருடைய மிருதுவான முகம் அவருக்கு லாபத்தையளிக்கிறது.

இவர் எப்பொழுதும் வசீகர தோற்றத்துடனிருக்கிறார். இவர் தினசரி "7 ஓ' க்ளாக்" பிளேடுகளால்—ஒரு பாக்கெட் அவருக்கு பல வாரங்களுக்கு வருகிறது — க்ஷவரம்செய்துகொண்டு பணத்தை மிச்சப்படுத்துகிறார்.


உயர்ந்த எஃகினால் செய்யப்பட்ட "7 ஓ' க்ளாக்" பிளேடுகள் மும்முறை சாணைதீட்டப்பெற்றவை. பணம் கொடுத்து வாங்குவதற்கு நல்ல கூருள்ள பிளேடுகள்—மார்க்கெட்டில் நல்ல மதிப்புள்ளவை.

நீங்கள் தினசரி "7 ஓ' க்ளாக்" பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.



குறைந்த செலவில் அதிக க்ஷவரங்களையளிக்கும் பிளேடுகள்.

5 கொண்ட பாக்கெட் 1க்கு அணா 7



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119. Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI நவம்பர் 6, 1949 4 அண

REGD. NO. M. 4392



LTS. 211-172 TM